# “மகா

# மேன்மையும்

# அருமையுமான

# வாக்குத்தத்தங்கள்”

# “மகா
# மேன்மையும்
# அருமையுமான
# வாக்குத்தத்தங்கள்”



**பயன்படுத்தப்பட்டுள்ள சுருக்கக் குறியீடுகள்:**

**R.**—ரீப்பிரிண்ட்ஸ்.

**c.** —பக்கப்பிரிவு.

**p.** —பத்தி.

**A.**—தொகுதி - 1, "யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டம்."

**C.**—தொகுதி - 3, "உம்முடைய இராஜ்யம் வருவதாக."

**E.**—தொகுதி - 5, "ஒப்புரவாகுதல்."

**F.** —தொகுதி - 6, "புது சிருஷ்டி."

**T.** —ஆசரிப்புக்கூடார நிழல்கள்.

# வாக்குத்தத்தங்களின் முக்கியத்துவம்

"அவருடைய மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள் —அவருடைய இரக்கத்தின் தூதுவர்களாக இருந்து—நமக்கு ஊழியம் புரிந்து, நம்மை பலம் உடையவர்களாக்குகின்றது." R. 2412, c.2, p.3.

"நாம் நம்முடைய மனதை தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் நிரப்பும்பொழுது, முழு குணலட்சணமும், முழு வாழ்க்கையும் அதிகம் மறுரூபமாகும்." R. 5739, c.1, p.1

"நாம் எவ்வளவாய் வாக்குத்தத்தங்களை நம் மனதுக்கு முன்பாய் வைக்கிறோமோ, அவ்வளவாய் இந்த நெருக்கமான வழியில் ஓட பலமும், துணிவும் பெற்றிருப்போம்." R. 5095, c.1, p.4

"கர்த்தருடைய ஜனங்களின் இருதயம் கவலையிலிருந்து முழுமையான விடுதலையை அடையும் பொருட்டு, தெய்வீக பாதுகாப்பு குறித்ததான அருமையான வாக்குத்தத்தங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்." F. 572, p.2.

"யாரெல்லாம் தெய்வீக வாக்குத்தத்தங்கள் அனைத்தின் மீதும் முழு நம்பிக்கை வைக்கிறார்களோ, அவர்கள் வெற்றியின் மேல் வெற்றியும், ஆசீர்வாதத்தின் மேல் ஆசீர்வாதமும், சந்தோஷத்தின் மேல் சந்தோஷமும், சாதனையின் மேல் சாதனையும், இறுதியாக உலகம், மாம்சம் மற்றும் எதிராளியானவனிடமிருந்து மகத்துவமான வெற்றியை, நம்மை நேசித்து, நம்மை கிரயம் கொடுத்து வாங்கினவருடைய தொடர்ச்சியான உதவி மற்றும் புண்ணியத்தின் மூலமாக அடைவர். கோலியாத் தாவீதின் கூழாங்கல்லுக்கு முன்பாக வலிமையிழந்து போனது போல, இந்த வகுப்பினர் முன்பு, எதிர்ப்பு மற்றும் நம்பிக்கையின்மையாகிய இராட்சதர்களும் வலிமையிழந்துவிடுவர்."
R. 4046, c.2, bottom.

## வாக்குத்தத்தங்களைப் "புசியுங்கள்."

"நமக்கு அருளப்பட்டுள்ள இந்த வாக்குத்தத்தங்களே, கருநிலை புது சிருஷ்டிகளாகிய நாம் புசிப்பதற்குரிய ஆவிக்குரிய உணவாகும். எவ்வளவு உணவு நமக்கு அளிக்கப்பட்டிருந்தாலும் சரி, ஒருவேளை ஏதோ காரணத்தினால் தேவையான ஆவிக்குரிய போஷாக்கை நாம் பயன்படுத்தத் தவறினால், சிலவற்றில் நாம் குறைவுள்ளவர்களாகவே இருப்போம். இக்கருத்துக்கு இசைவாக அப்போஸ்தலருடைய வார்த்தையாவது—'திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் **அவைகளினாலே** நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது'—ஒருவேளை நாம்

இந்த வாக்குத்தத்தங்களைப் பயன்படுத்தவில்லை என்றால், நம்மால் திவ்விய சுபாவத்திற்குப் பங்குகொள்ள முடியாது என்கிறார். அதேசமயம், இந்த வாக்குத்தத்தங்களைப் பயன்படுத்துவதின் மூலம், 'நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிசெய்து,' கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர்களும் ஆகலாம்." R. 4665, c 2, p.4.

## புறக்க க்கப்படக்கூடாது, தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

"தேவனுடைய தயவுள்ள சித்தத்தை **விரும்பவும், செய்யவும்** நமக்குள் வல்லமையைக் கொடுக்கும் எரிபொருள் போல,—விசுவாசத்திற்கு அடிப்படையாக தெய்வீக வார்த்தையினால் உண்டான வாக்குத்தத்தங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலால், இந்தக் கிருபையான வாக்குத்தத்தங்கள் புறக்கணிக்கப்படக்கூடாது. அவை தொடர்ந்து பயன்படுத்தப்படவும், நம்மை பெலப்படுத்தத்தக்கதாக நம்மில் தொடரவும் வேண்டும். இந்தப் பெலன் பிரயோகிக்கப்பட்ட அளவிற்கு ஏற்ற வளர்ச்சியை, இவ்வுலக போக்கிற்கு எதிராக நாம் அடைய வேண்டும்." R. 2879, c.1, top.

## அவைகளுக்குள் "ஆழமாய்" ஆராயுங்கள்.

"தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்குள் அதிகமதிகமாய் ஆழமான ஆராய்ச்சி செய்யுங்கள். இப்படி நீங்கள் செய்தால், விசுவாசத்தின் வேர்கள் ஊட்டச்சத்துக்களை உறிஞ்சி எடுத்து, அதை உங்கள் ஜீவனுக்குள் அனுப்பி, போஷிக்கப்பட்டதினால் மரங்கள் வளர்வது போல் நீங்களும் வளருவீர்கள். இதனாலேயே நீங்கள் **விசுவாசத்தில்** நிலைகொள்வீர்கள்." R. 5559, c.2, p.1.

## இருதயம் வாக்குத்தத்தங்களினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்.

"தெய்வீக வார்த்தையிலிருந்து வரும் வாக்குத்தத்தங்கள், இருதயத்திற்குள் ஏற்படும் அதின் ஏக்கங்களைப் பூர்த்தி செய்யும் வண்ணமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், இருதயமானது வேற்று காரியங்களைப் புசிக்கத் துவங்கும். உலகம், மாம்சம் மற்றும் பிசாசு இருதயத்தை சுற்றிவளைத்து, பல கவர்ச்சிகரமான காரியங்களை முன்வைத்து, ஒருவேளை இருதயம் நிரப்பப்படாமல் இருக்குமாயின், இவைகளில் சிலவற்றை பெற்றுக்கொண்டு இருதயம் நிரம்பிவிடும்." R. 3552, c.2, P.1.

"உண்மையான தேவபக்திக்குள் நடத்துவதில், நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களைப் பார்க்கிலும், பெரிதான தூண்டுதல் வேறொன்றும் இருக்க முடியாது." R. 2228, c.2, p.5.

"நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கற்றுக்கொள்வதிலும், ஜெயங்கொள்கிறவர்களுக்கான அருமையான வாக்குத்தத்தங்களைப் பற்றின நம்முடைய அறிவின் மேலுமே நம்முடைய சந்தோஷம் பெரிதும் சார்ந்திருக்கும்." R. 5460, top.

## அவைகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவும்.

"ஆழ்ந்த எண்ணம் மற்றும் சிந்தனையும் கொண்டு, நாம் இந்த வாக்குத்தத்தத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளவும், அவைகளிடமிருந்து வரும் உற்சாகமூட்டும் ஏவுதலையும், சேகரித்துக் கொள்ளவும் முயற்சி செய்ய வேண்டும்." R. 3149, c.1, p.6.

## கர்த்தரோடு நெருங்கி வாழும்போது, அவைகளின் மேன்மையை நாம் அதிகமதிகமாகவும், முழுமையாகவும் உணர்ந்துகொள்ளுவோம்.

"தேவனுடைய மனதோடு நாம் நெருங்கிய ஐக்கியம் மற்றும் இசைவு கொள்ளத்தக்கதாக கர்த்தருடைய ஆவியானது நம்முடைய இருதயத்தை ஈர்க்கும்போது, அப்போஸ்தலர்களின் இருதயத்தில் அன்று காணப்பட்ட பரிசுத்தமான ஆர்வம் போன்று, நம் இருதயத்திலும் ஒளிவரத்தக்கதாக இந்த அருமையான வாக்குத்தத்தங்களின் மேன்மையை அதிகமதிகமாக உணர்ந்திருப்போம்." R. 3149, c.1, p.3.

## கிருபையிலும், அறிவிலும் வளரத்தக்கதாக அவைகளை நாம் ஏற்றுக்கொள்ளுதல்.

"வாக்குத்தத்தங்களை நாம் பெற்றுக்கொண்ட பின்னர், தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பற்றி சரியாக மதிப்பீடு செய்யவும், அதை நாம் ஏற்றுக்கொள்ளவும் தொடர்ச்சியான விசுவாசமும், காலமும் நமக்குத் தேவைப்படுகின்றது. இதுவே வேதவாக்கியங்களின் அடிப்படையில், 'கிருபையிலும், அறிவிலும் வளர்வதாகும்.' நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை உற்று கவனிக்கும்போது, நாம் அறிவில் வளர்ச்சியடைகின்றோம். அதை விசுவாசித்து, நம்மில் செயலாற்றுகின்றோம். மேலும், அந்த வாக்குத்தத்தங்கள் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறி உள்ளதா எனத் தெளிவாக உணர்ந்துகொள்ள நாடுகின்றோம்; அறிவு

வளரும்போது, அதன் கூடவே கிருபையிலும் நாம் வளர்கின்றோம். ஏனெனில், நமக்கு வெளியாக்கப்பட்ட அறிவை நாம் நல்லதும், உண்மையுமான இருதயத்தில் பெற்றுக்கொண்டு அதற்கு ஏற்ற கீழ்ப்படிதல் மற்றும் நீதியை (கிருபையை) நாம் காட்டாவிட்டால், அறிவின் அடுத்தபடிக்குச் செல்ல நாம் தயாராக இருக்க முடியாது. மேலும், முன்னேறுவது நிறுத்தப்படும் அல்லது பின்னாகத் திருப்பப்படுவோம்." R. 3156, c.2, p.1.

"விலையேறப்பெற்றதான இந்த வாக்குத்தத்தங்கள் யாவும், அற்புதமான ஜீவ வார்த்தைகளாம்! அவைகளின் இனிமையான தனிச்சிறப்புகள் எல்லாம் நம்முடைய இருதயத்தில் ஆழமாய் பதிந்து, பின்னர் நம்முடைய வாழ்வில் அவைகளின் ஆசீர்வாதமான கனிகளைக் கொண்டுவருவதற்கு ஏதுவாக அவற்றை மீண்டும் மீண்டுமாக தியானிக்கக்கடவோம். இவைகள், இருளும் சோதிக்கிறதுமான தருணங்களில் நம்மை மகிழ்வித்து, 'நம் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும்' வரையிலும், நெருக்கமான பாதையில் நாம் தொடர்ந்து ஓடத்தக்கதாக நலிந்து போய்க்கொண்டிருக்கிற நம்முடைய திறன்களை, புதுப்பிக்கப்பட்ட உற்சாகத்தினாலும், தைரியத்தினாலும் மற்றும் பக்திவைராக்கியத்தினாலும் வலுவூட்டட்டும்." R. 5863, c.1, p.2.

## அவைகளுக்கு அதிக கவனம் கொடுங்கள்.

"வழக்கமாக நாம் பெறும் முன்னேற்றம் மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைக் காட்டிலும், இந்த வருடத்தில் அதிகமாகப் பெற வேண்டுவதற்கு நாம் பரிந்துரைப்பது என்னவென்றால், சபையான நமக்கு தேவன் கொடுத்துள்ள **வாக்குத்தத்தங்களின்** மீதும், அதை தமதாக்கிக் கொள்ள உதவும் **நிபந்தனைகளின்** மீதும் நாம் ஒவ்வொருவரும் முன்பைக்காட்டிலும் இப்பொழுது அதிக கவனம் செலுத்த வேண்டும்." R. 2240, c.1, p.2

## வாக்குத்தத்தங்களிலிருந்து வரும் தைரியம் மற்றும் பெலன்.

"நாம் ஜெயங்கொள்ள வேண்டிய அநேக இடர்பாடுகள் உள்ளன. அநேக இடர்பாடுகளை ஜெயங்கொள்ள வேண்டுமெனில், தைரியம் அவசியப்படுகின்றது. ஆனால், தேவனிடத்திலும், அவருடைய 'மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தத்தின்' மீதும் வைக்கும் விசுவாசத்தினால் பெறப்படும் தைரியமானது, நசுக்கப்படுகிறவர்களாகிய நம்மை பெலப்படுத்துகிறது. இது மற்ற யாவருக்கும் அந்நியமாய் தெரிகிற பெலத்தை இவர்களுக்குக் கொடுக்கின்றது. தேவனுடைய பிள்ளையான ஒருவர் ஊக்கம் இழந்தும், நம்பிக்கை மற்றும் பெலம் இழந்தும்

காணப்படுவாரேயானால், அதற்குக் காரணம் அவர் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை உதவிக்காக சார்ந்து நிற்பதை விட்டுவிட்டார் என்பதேயாகும். தைரியத்தை இழப்பது என்பது விசுவாசத்தை இழப்பதாகும். விசுவாசத்திலும் தைரியத்திலும் குறைவுபடுவது என்பது, தன்னுடைய சத்துருக்கள் முன்பு தேவனுடைய பிள்ளையை வலிமை இழக்கச் செய்வதாகும். பிதாவினுடைய பராமரிப்பு நம்முடைய கண்களுக்கு முன் மறைக்கப்பட்டிருக்கும் வேளைகளிலும், அவருக்கு சேவைசெய்ய நாம் ஏறெடுக்கும் முயற்சிகள் தடைபண்ணப்பட்டிருக்கும் வேளைகளிலும் நாம் பிதாவை நம்பவேண்டும்." R. 5712,c.1,p.7;c.2,p.1.

## உண்மையாகவும், முழுமையாகவும் நம்பப்பட்டு, தனிப்பட்ட விதமாக ஏற்றுக்கொள்ளப்படவும் வேண்டும். ஒரு வல்லமையான ஆற்றல்.

"இந்த வகுப்பினர்களுக்கு தேவன் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்கள் மகா மேன்மையும் அருமையுமானவைகள் ஆகும். ஒருவேளை அவைகளை நாம் உண்மையாக நம்பினால், நம்முடைய வாழ்க்கையில் அவைகள் வல்லமையாய் செயலாற்றுவதில் தவறுவதில்லை. ஒருவேளை அவைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், அவைகளுக்கு நமது வாழ்வில் எவ்வித அதிகாரமும் இருக்காது. இதற்கும் அதிகமாக ஒருவேளை அவைகள் முழுமையாக நம்பப்படாமலும், தனிப்பட்ட விதத்தில் ஏற்றுக்கொள்ளப்படாமலும் இருக்குமேயானால், அவைகளை பயன்படுத்தவும் முடியாது, அவைகளிலிருந்து ஒருவராலும் ஒன்றையும் பெற்றுக்கொள்ளவும் முடியாது. இது அப்போஸ்தலரின் வார்த்தைகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது—'விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்.'" R. 1798, c.1, p.6.

## வாக்குத்தத்தங்களை உயிருள்ள மெய்மைகளாக மாற்றும் உறுதியான விசுவாசம்.

"பவுல் தனக்கு முன் வைக்கப்பட்டிருந்த காரியங்களை நோக்கி முன்னேறிச் சென்றார். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அவருக்கு உண்மையான மெய்மையாகவும், ஊக்கப்படுத்தும் வைராக்கியமாகவும், உண்மை உள்ளவைகளாகவும் இருக்கும் அளவிற்கு அவைகளை உறுதியான விசுவாசத்துடன் பற்றிக்கொண்டிருந்தார். மற்றவர்களுக்கு அவர், 'உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தி உள்ளவைகள்

எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ,—அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்' என்று அறிவுறுத்தியது போலவே, அவர் தனது மனதை பரலோகத்தின் காரியங்களிலேயே குடியிருக்கச் செய்தார். இவ்விதமாகவே, தனக்கு முன் வைக்கப்பட்டிருந்ததை நோக்கி முன்னேறிச் சென்றார். அதுபோலவே, நாமும் பரிசுத்தத்திற்கு நேராக நம்முடைய ஏவுதலையும் மரணபரியந்தம் விசுவாசத்தில் தரித்திருந்து நிலைத்திருப்பதற்கு ஏதுவாக தைரியத்தையும் கூட்டிச்சேர்க்க வேண்டும்." R.1885, c.2, p.2.

"ஒவ்வொருவரும் தங்கள் இருதயத்தில் விசுவாசத்தை **பயிர்செய்ய** வேண்டும். எப்படியெனில், (I) தெய்வீக வாக்குத்தத்தங்களைத் தொடர்ந்து நினைவிற்குக் கொண்டுவர வேண்டும். இதன் மூலம் பிதாவின் வார்த்தைகளுக்கு நன்கு பழக்கப்பட்டவர் ஆகிறார். (II) அவர் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியிருப்பதால், இந்த வாக்குத்தத்தங்கள் தனக்கு உரியது என்று அதிகமதிகமாய் நினைவில் கொள்ள முயற்சித்து, கர்த்தருக்கு தன்னுடைய ஜெபத்தில் நன்றி செலுத்தும்போது இவைகளை தன்னுடைய இருயத்திலும், உதடுகளின் மூலமும் தன்னுடையது என்று உரிமைகோர வேண்டும். அவர் தன்னுடைய எண்ணங்களிலும், சகோதரர்களோடு பரிசுத்தமான காரியங்களைப் பற்றிப் பேசும்போதும், இவைகள் தன்னுடையவைகள் என உரிமைகொள்ள வேண்டும். சோதனைகள் அல்லது இடர்பாடுகள் அல்லது கலக்கம் நிறைந்த சூழல்கள் எழும்பும்போதும், இந்த வாக்குத்தத்தங்களைத் **தனக்குரியது** என்று நினைவுகூர்ந்து, அவைகளை எண்ணிப்பார்க்க வேண்டும்—ஏனென்றால், அவரை நேசிப்பவர்களுக்கு அதாவது, சுயத்தைப் பலியிட்டு அவரோடு உடன்படிக்கை பண்ணினவர்களுக்கே,—தேவன் இந்த வாக்குத்தத்தங்களைக் கொடுத்துள்ளார்." R. 2642, c.2, p.7.

———————————

# "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்"

## "பழைய ஏற்பாடு"

**"ஆபிராமே, நீ பயப்படாதே: நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார்." ஆதி. 15:1.**

"தேவன் ஆபிரகாமுக்கு, பூமியின் இராஜாக்கள் மற்றும் அவர்களுடைய படைகளின் கோபத்திலிருந்தும், அதிகாரத்திலிருந்தும் காப்பாற்றி பாதுகாக்கும்—**கேடகமாக** இருந்தார். மேலும், தேவன் சகலத்தையும் அவருடைய நன்மைக்கேதுவாக நடத்துவதற்கு வல்லமையும், சித்தமும் கொண்டிருந்தார். இக்கருத்தில் எத்துணை ஆறுதல் காணப்படுகின்றது. இது, தேவன் நம்முடைய கேடகமாகவும் இருக்கின்றார் என்பதையும், ஒவ்வொரு தீமையான காரியங்கள் மற்றும் வல்லமைகளிலிருந்தும் நம்மை அவர் பாதுகாப்பவராகவும் இருக்கின்றார் என்பதையும் நமக்கு எவ்வளவாய் நினைவுபடுத்துகின்றது." R. 2853, c.2; p.3.

"இங்கு, ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஆறுதலானது, ஆபிரகாமைப் போல விசுவாசமுள்ள யாவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், இதற்கு இணையான கருத்து புதிய ஏற்பாட்டில் உள்ள நமது கர்த்தரின் விலையேறப்பெற்ற வார்த்தைகளில் காணப்படுகின்றது—'என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் . . . நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்'(யோவான் 14:21, 23). ஆகவே, நாம் இந்தப் பூமியில் பரதேசிகளாக யாத்திரை செய்கையில், நம்மைச் சூழ்ந்துகொள்ளும் அனைத்து சோதனைகள் மற்றும் பரீட்சைகளின் மத்தியிலும் ஜெயங்கொள்ளும் பரிசுத்தவான்கள், முன்வைக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதமான சுதந்தரத்திற்கு நேராக விசுவாசித்து நடக்கும் போதும் நாமும் கூட, 'பயப்படாதே நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்று நமது தேவன் கூறும் சத்தத்தைக் கேட்கக்கூடும்.'" R. 1906, c.1, p.1.

---

**"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" ஆதி. 18:14.**

"தேவனுடைய ஆவி எந்த விதத்தில் செயல்படுத்தப்பட்டாலும் அது செயல்பட வல்லமையுள்ளது. இதன் வல்லமையை விளக்கும் விதமாக

அப்போஸ்தலர் நமக்கு, நமது கர்த்தர் இயேசுவையும், அவருடைய சொல்லர்த்தமான மரணத்தையும் மற்றும் எப்படித் தேவனுடைய பரிசுத்த ஆவி இயேசுவை மரணத்திலிருந்து உயிர்த்தெழச் செய்தது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார். கர்த்தர் இயேசுவின் சார்பாக செயல்படுத்தப்பட்ட இந்தத் தேவனுடைய வல்லமை, இந்த யுகத்தின் முடிவில் உண்மையுள்ளவர்களாகிய கிறிஸ்துவின் சரீர அங்கங்களின் சார்பாகவும் செயல்படும் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள காரியம் சுட்டிக்காட்டுவது என்னவெனில், தேவனுடைய வல்லமையை நாம் ஒருவேளை நமக்கு பயனுடையதாக ஆக்கிக் கொள்வோமேயானால், புதிய சுபாவம் மாம்சத்தை ஜெயங்கொள்ளவும், அதைக் கீழ்ப்படுத்தவும்தக்கதாக வலிமை அடையும். இதைவிட மேலாக மாம்சத்தை நீதியின்படி சேவை செய்யத்தக்கதாக சுறுசுறுப்பும், ஊக்கமும் அடையச்செய்யும் என்பதேயாகும்." R. 3203, c.1, p.4.

---

**"நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து . . ." ஆதி. 28:15.**

"ஏணிக்கு மறுமுனையில் நின்று, 'நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்...நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காப்பேன்' என்று கர்த்தர் கூறின வார்த்தைகளை யாக்கோபு கேட்டார். . . . யாக்கோபுக்கு அன்று தேவையாய் இருந்த ஆறுதலும், ஊக்கமும் இதுவே. . . . யாக்கோபு தான் பெற்றிருந்த அனைத்தையும் இழந்திருந்தபோதிலும், தனக்கு இன்னும் தெய்வீக கிருபை உள்ளது என்று உணர்ந்ததால் மனநிறைவுடன் இருந்தார். இதினிமித்தம், முற்றும் முழுமையாக யாக்கோபால் புரிந்துகொள்ள முடியாத இந்த வாக்குத்தத்தத்திற்கு அவரை சுதந்தரவாளியாக தேவன் ஏற்றுக்கொண்டதை இவ்விதமாய்த் தெரியப்படுத்தினார். இதுபோலவே, தெய்வீக கிருபை மற்றும் தேவனுடைய சுதந்தரவாளியாகும் பிரதானமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டாக பிதாவாகிய தேவனின் சத்தத்தைக் கேட்டு, அவர்பால் இழுக்கப்பட்டவர்கள் அல்லது அவருடைய வாக்குத்தத்தங்களால் கவர்ந்து இழுக்கப்பட்டு, தங்களுடைய வாழ்விலுள்ள மற்ற அனைத்து பேராவல்களையும் ஒப்புக்கொடுக்கும் அனைவருக்கும், மேலே உள்ள வசனம் பொருந்தும்."
R. 3965, c.1, p.1, 2.

**"நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்." யாத். 4:12.**

"முற்காலத்தில் மோசேயிடம் கூறினது போன்று இன்றும் தாழ்மையுள்ளவர்களாய் இருப்பவர்களிடம் தேவன் கூறுவது என்னவென்றால், 'நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன்.' இங்கு நாம், நம் மீதோ அல்லது நம்முடைய சொந்த தீர்ப்பின் மீதோ அல்லது பலத்தின் மீதோ நம்பிக்கை வைக்கக்கூடாது என்பதே முதலாம் பாடமாக அமைகின்றது. மேலும், நாம் நம்முடைய ஒவ்வொரு நம்பிக்கையையும், முழுமையான நம்பிக்கையையும் தேவன் மீதே வைக்க வேண்டும் என்பதே இங்குள்ள மற்றுமொரு முக்கியமான பாடமாகும். இந்த முக்கியமான பாடத்தைக் கற்றுக்கொள்ளாத வரையிலும், யாரும் தேவனுடைய பிரதிநிதியாகப் பயன்பட முற்றிலும் தகுதிபெற முடியாது . . . கர்த்தருடைய ஜனங்கள், அவரால் ஒரு முக்கியமான வேலைக்குப் பயன்பட வேண்டுமெனில், அனைத்து கர்த்தருடைய ஜனங்களுக்கும் தாழ்மை எனும் பண்பு மிக அவசியமானது என்கிற உண்மையை, வேதவாக்கியங்களில் உள்ள யாவும் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது. கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் இந்தக் காரியத்தை தங்கள் நினைவில் தொடர்ந்து வைத்துக்கொண்டு, உறுதியாக இதன்படி தங்கள் வழியை அமைத்துக்கொள்வார்களேயானால் அவர்கள் அதிகமாய்ப் பயன்படுத்தப்படுவார்கள் என்று நாம் புரிந்துகொள்ளலாம்." R. 5262, c.2, p.1, 3.

---

**"என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்." யாத். 33:14.**

"கர்த்தர் தமது ஜனங்களுடன் என்றும் இருக்கின்றார். அவர் எப்பொழுதும் நம்மைப் பற்றியே சிந்தித்து, நம்முடைய நலம் கருதி நம்மை கவனித்து, ஆபத்துக்களில் நம்மை பாதுகாத்து, நமக்கான ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய காரியங்களைச் சந்தித்து, நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து அறிந்து, அவர் மீது நமக்கு ஏற்படும் ஒவ்வொரு அன்பின் உணர்வுகளையும் அடையாளம் கண்டுகொண்டு, நம்மை ஒழுங்குபடுத்துவதற்காகவும், புடமிட்டு சுத்திகரிப்பதற்காகவும், நம்மை சுற்றியுள்ள விஷயங்களை வனைந்து, உதவிக்காக அல்லது இரக்கத்திற்காக அல்லது அவருடனான ஐக்கியத்திற்காக எழுப்பப்படும் நம்முடைய சிறு தொனிக்குங்கூட அவர் செவிசாய்க்கிறவராகக் காணப்படுகின்றார்." R. 3251, c.2, p.2.

"தேவன் தம்முடைய ஊழியக்காரர்களோடு தம்முடைய சமுகம் காணப்படும் என்று கூறுவதை நாம், அவர் **சரீரப்பிரகாரமாக** அவர்களோடு இருக்கின்றார் என்ற அர்த்தத்தில் புரிந்துகொள்ளாமல், தமது ஆவியின் மூலமாகவும், தமது தூதுவர்கள் மூலமாகவும் அவர்களை தாங்கி, ஆசீர்வதித்து வழிநடத்துகிறார் என்று புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கு தீங்கு தரும் எல்லாவற்றிலிருந்தும் பாதுகாக்கின்றார். அவர் அவர்களின் ஒவ்வொரு நன்மையையும் கண்ணோக்கி, மென்மையாக அவர்களை பராமரிக்கின்றார்." R. 5547, c.2, p.4.

---

**"கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்." உபா. 28:12.**

"இப்பொழுது கர்த்தருடைய நாள் வந்துள்ளது: நாம், மனுஷகுமாரனுடைய பிரசன்னத்தின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்—'அறுவடையின் கர்த்தர்,' 'தம்முடைய தலையில் பொற்கிரீடம் (தெய்வீக அதிகாரம்) தரிக்கப்பட்டவராகவும், தமது கரங்களில் (வல்லமை) கருக்குள்ள அரிவாளை'—'ஏற்றகால சத்தியத்தைக்' கொண்டுள்ளபடியால், 'தேவனுடைய வார்த்தைகளின் தெளிவான வெளிப்படுதல், ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், . . . இருதயத்தின் நோக்கங்களையும் சிந்தைகளையும் வகையறுக்கிறதாகவும் இருக்கின்றது.' அவர் யூத யுகத்தின் அறுவடையின்போது அனுப்பின வண்ணமாகவே இப்பொழுதும் 'வேலைக்காரர்கள்,' 'தூதர்கள்' அல்லது 'செய்தியை அறிவிப்பவர்களை' அவர் அறுவடைக்காக அனுப்புகின்றார். அதாவது, அவருடைய அர்ப்பணிக்கப்பட்ட உண்மையான சீஷர்களை இப்பொழுது முழுவதுமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள தெய்வீக திட்டத்தையும், அதற்காக நியமிக்கப்பட்ட நேரங்களையும், காலங்களையும் உள்ளடக்கின—அறுவடை செய்தியுடன் அவர் அனுப்புகின்றார்." R.1362, c.1, p.3.

---

**"உன் தேவனாகிய கர்த்தர் தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை." உபா. 31:6.**

"கர்த்தருடைய ஜனங்களின் விஷயங்களில் சூழ்நிலைகள் மிகவும் இருள் சூழ்ந்ததாகக் காணப்படலாம் என்றாலும், அவர்கள் நம்பிக்கையை இழக்கவில்லை. மேலும், என்ன வந்தாலும் நம்பிக்கையை இழந்து

போவதில்லை. காரணம், கர்த்தர் அவர்களை விட்டுவிலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை என்று கூறியிருக்கின்றார். இந்தக் கிருபை நிறைந்த வாக்குத்தத்தமானது, நமக்கு நிச்சயமும் உறுதியான நம்பிக்கையை அளிக்கின்றதாகக் காணப்படுகின்றது. இதை, நம்முடைய நம்பிக்கையின் நங்கூரம் பற்றிப்பிடித்திருக்க வேண்டும். ஆகவே, எவ்வித நம்பிக்கையில்லாத உலகத்தின் நிலையிலிருந்து நம்முடைய நிலை, மிகவும் வேறுபட்டதாய் இருக்கிறது. உலகத்திற்கு எவ்விதமான உறுதியான நங்கூரமும் இல்லை. மேலும், உறுதியாகப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக எவ்வித விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களும் அவர்களுக்கு இல்லை. ஒருவேளை மிகுந்த கேடான நிலைமை, இன்னும் அதிக கேடான நிலைக்குச் சென்றாலும், ஒருவேளை நாம் உணவில்லாமல் பசியில் மடிய நேரிட்டாலும், நமது நம்பிக்கை திரைக்கு அப்பாலே உள்ளது. அதாவது, மரணத்திற்குப்பின் உள்ளது என்பதை நாம் அறிவோம். ஆகவே, இன்று தேவனுடைய பரிசுத்தவான்கள், மரணத்தை, உள்ளே பிரவேசிக்க உதவும் நுழைவாயில் போன்றுதான் பார்க்கிறார்கள் . . . அதாவது, நம்முடைய அனைத்து நம்பிக்கைகள் மற்றும் சந்தோஷங்கள் அனுபவிப்பதற்கான நுழைவாயிலாகப் பார்க்கின்றார்கள்." R. 5671, c.1, p.3.

---

**"கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்." உபா. 31:8.**

"தேவனுடைய புத்திரர்கள் மீது காணப்படும் அவருடைய பராமரிப்பு மிகவும் குறிப்பிடும்படியான பராமரிப்பாகும்: அவர்களுடைய எல்லா நடைகளும் கர்த்தராலே நடத்தப்படுகின்றது. மேலும், அவர்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது (லூக்கா 12:7). அவருடைய கண்கள் நீதிமான்கள் மீது நோக்கமாயிருக்கின்றது. மேலும், அவருடைய செவிகள் அவர்களுடைய ஜெபங்களுக்குத் திறந்திருக்கின்றது. இரட்சிப்பை சுதந்தரிக்கிறவர்களுக்கு என்று பணிவிடை செய்ய அவருடைய எல்லா தூதர்களும் பணிவிடையின் ஆவிகளாக அனுப்பப்பட்டுள்ளனர். அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கும், தேவனை அன்பு செய்கிறவர்களுக்கும், சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடந்தேறும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பராமரிப்பு எத்துணை அருமையானதாகவும், குறிப்பிடத்தக்கதாகவும் காணப்படுகின்றது. மேலும் இவர்கள் இந்த வாக்குத்தத்தத்தை, தங்களுக்கான சோதனை காலத்தின் முடிவுமட்டும்

பெற்றிருக்கிறார்கள். தேவன் மீது தங்கள் நம்பிக்கையை வைக்கும் அனைவருக்கும் அவர் தகப்பனாயிருக்கிறார். அவருக்கு புத்திரராய் இருப்பவர்களுக்கும், மற்றும் அவருக்கு அந்நியர்களும், எதிரிகளும் போல் இருப்பவர்களுக்கும் இடையே பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது." R. 1561, c.1, p.4.

---

**"கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார்." உபா. 33:12.**

"அவருக்கு உண்மையாக இருப்பவர்கள் மாத்திரமே இப்படியாகக் காணப்படுவார்கள். தாங்கள் **செய்யத்தக்கதான** தேவனுடைய சித்தம் என்ன என்று **அறிந்துகொள்வதற்கு** எவ்வித சரியான முயற்சியை எடுக்காதவர்களையும் கர்த்தர் காத்துக் கொள்வார் என்று நாம் புரிந்துவிடக் கூடாது. மாறாக, யாரெல்லாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, தாங்கள் எவ்வழியில் நடக்க கர்த்தர் விரும்புவார் என்பதை முடிந்த மட்டும் உணர்ந்து, அவரை பிரியப்படுத்தும் விதமாக தங்களால் முடிந்தவற்றையெல்லாம் செய்கிறார்களோ, அவர்களே இங்ஙனம் காக்கப்படுவார்கள். இவர்கள் இன்று அவரை துதிக்கும் சத்தத்தை எழுப்பிக்கொண்டிருக்கின்றனர். மேலும், அவர்களுக்கு தேவையான கிருபை பங்காகக் கொடுக்கப்படுகின்றது. ஒருவேளை விசுவாசம், கீழ்ப்படிதல் மற்றும் நம்பிக்கைக்கான பரீட்சைகள் முன்பிருந்ததைக் காட்டிலும், சமீபத்தில் இருக்கிற எதிர்காலத்தில் அதிகமாகக் காணப்பட்டாலும், இந்த உண்மையுள்ளவர்கள் விழுந்துபோவதில்லை. . . . கர்த்தருடைய செயல்பாடு மற்றும் வல்லமையைத் தங்கள் வாழ்க்கையில் சில தருணங்களில் தரிசிக்க உணரமுடியாமல் இருக்கும் சமயங்களிலும், இவர்கள் கர்த்தருக்குள்ளும், அவருடைய பராக்கிரமத்தின் வல்லமையிலும் பெலப்பட்டு இருப்பார்கள்." R. 5501, c.2, p.2.

---

**"பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்." யோசுவா 1:9.**

"உலகம், மாம்சம் மற்றும் பிசாசோடு நாம் போர் புரிவதற்கு,

நம்மிடத்தில் உள்ள வல்லமையைக் காட்டிலும் அதிக வலிமை தேவைப்படுகிறது. மேலும், யோசுவாவிற்கு அருளப்பட்ட இந்தத் தெய்வீக வாக்குறுதியிலிருக்கும் தைரியம் நமக்கும் தேவைப்படுகின்றது." R. 3080, c.2, middle.

---

**"உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்காகச் சொன்ன நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை." யோசுவா 23:14.**

"நம்முடைய வாழ்க்கையில் சிறிய மற்றும் பெரிய காரியங்களில் அவர் நமக்கான நன்மைகளை எப்போதும் கவனிக்கிறவராகவே இருந்திருக்கின்றார். ஒவ்வொரு மேகமும் ஒரு பொற்சரிகையை பெற்றதாகவே இருந்திருக்கிறது. இதற்கு ஈடாக நாம் கர்த்தருக்கு என்னத்தைச் செலுத்துவோம்?" R. 5538, c.1, Last p.; c.2, top.

---

**"அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்." 1 சாமு. 2:9.**

"கிறிஸ்துவுக்குள்ளான, புது சிருஷ்டிகளான அவர்களை எதுவும் தொடமுடியாது." R. 5862, c.2, p.3.

---

**நம்முடைய காலங்கள் தேவனுடைய கரத்தில்.**

"இன்று இங்கு இருக்கும் நாம், மீண்டும் மாம்சத்தில் சந்திப்போமா இல்லையா என்பது நமக்குத் தெரியாது. அதனாலென்ன? நம்மைக் குறித்த அவருடைய வழிநடத்துதல் எதுவாக இருந்தாலும்—ஜீவனோ, மரணமோ, அதற்கும் நாம் போதுமானவர்களாக இருக்கக் காத்திருக்கிறோம். 'என்னுடைய காலங்கள் உம்முடைய கரத்தில் உள்ளது; என் தேவனே அது அங்கிருப்பதையே விரும்புகிறேன்'— என்பது அழகாக வெளிப்படுத்துகிறதல்லவா? அனுதினமும் நாம் அனுபவிக்கிற அனைத்தைக் குறித்தும், நம்முடைய மறுரூபம் நிறைவேறும் காலத்தைக் குறித்தும் கர்த்தருடைய சித்தமே செய்யப்பட நாம் விரும்புகிறோம்—இவை அனைத்தும் அவரிடமே ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய சித்தம் என்பவை முற்றிலுமாக மரித்திருக்கிறது. அவருடைய சித்தமே உன்னுடைய சரீரத்திலும், என்னுடையதிலும் மற்றும் நம் யாவரிடத்திலும் ஆளுகை செய்யக்கடவது." R. 5728, c.2, p.5.

**"கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக் கொள்ளப் பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம் தமது ஜனங்களைக் கைவிடமாட்டார்." 1 சாமு. 12:22.**

"இந்த வசனத்தை ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குப் பொருத்திப் பார்த்து, இதிலிருந்து பெரிதான ஆறுதலை நாம் பெற்றுக்கொள்ளலாம். ஒருவேளை மாம்சீக இஸ்ரயேலர்கள் கர்த்தருடைய விசேஷமான ஜனங்களாக, பணிவிடை செய்யும் ஊழியவீட்டாராக ஏற்றுக்கொள்ளப்பட்டது அவர்களுக்கு கிருபையாய் இருக்குமானால், பிரதான குமாரனான இயேசுவின் கீழ், புத்திர வீட்டாராக கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரயேலரின் ஆசீர்வாதம் எவ்வளவு அதிகமாய் இருக்கும்! ஒருவேளை நாம் 'நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும், மேன்மை பாராட்டலையும், முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்' (எபிரெயர் 3:6). கர்த்தருடைய ஜனங்கள் அவருக்குப் பயப்படவும், அவரிடத்தில் பயபக்தியுடன் நடப்பதற்கும் அழைக்கப்பட்டது நல்லதுதான். இருப்பினும், ஒருவேளை வேதம் முழுவதும் கட்டளைகளாலும், கண்டனம் செய்வதாகவும் இருந்தால், உண்மையாகவே கர்த்தருடைய ஜனங்கள், என்றோ ஊக்கம் இழந்து போயிருப்பார்கள். இதற்கு மாறாக, கண்டனம் மற்றும் தண்டனை போன்றவைகளோடு கர்த்தர் நம்மை ஊக்குவிப்பதற்கு ஏதுவாக, தமது அன்பு, இரக்கம், தயவு, நீடிய பொறுமை குறித்ததான சாட்சிகளையும் கூட கொடுத்துள்ளார்." R. 3223, c.2, p.3.

---

**"கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகருமானவர்." 2 சாமு.22:2.**

"இந்த ஆசீர்வாதமான வாக்குத்தத்தமானது, கர்த்தருடைய சகல ஜனங்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது. மேலும் யாரெல்லாம் கர்த்தருக்குள் களிகூருகின்றார்களோ, யாரெல்லாம் அவருடைய தயவுகளை எண்ணி, அவருடைய பரிசுத்தமுள்ள நாமத்தின் நிமித்தமாக அவருக்கு துதி ஏறெடுக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்கும் இது அதிகமாய் உறுதிபடுத்தப்படும்— 'கர்த்தர் என் கன்மலையும் (என் நம்பிக்கைகளைப் பாதுகாப்பாகக் கட்டுவதற்கு ஏதுவான), என் கோட்டையும் (நான் பாதுகாப்பாய் மறைந்து கொள்வதற்கு ஏதுவான), என் இரட்சகருமானவர் (அனைத்து சோதனையான நேரங்களில்)." R. 2032, c.2, p.1.

**"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது." 2 நாளா. 16:9.**

"இங்குக் குறிப்பிடப்படும் 'கண்கள்' கர்த்தருடைய ஆற்றலை, எவ்வகையிலும் அறிந்துகொள்ளும் அவருடைய வல்லமையைக் குறிக்கின்றது . . . தேவன் வழிமுறைகள் வைத்திருக்கின்றார் . . . மேலும், அவைகள் நம்முடைய வழிமுறைகளுக்கு அப்பாற்பட்டது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை . . . கர்த்தரானவர், தேவதூதர்கள் தம்முடைய ஊழியக்காரர்களாய் இருக்கின்றார்கள் எனவும், இவர்களுக்கு தம்முடைய ஜனங்களின் மீது உள்ள பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் நமக்குத் தெரிவிக்கின்றார் . . . ஆனால், உலகத்தின் சரித்திரத்திலேயே வாழ்ந்த கர்த்தருடைய ஜனங்களைக் காட்டிலும் குறிப்பாக சுவிசேஷ யுகத்தின் சபையான நம்மீதுதான் . . . கர்த்தருடைய தேவதூதர்களுக்கு அதிக பொறுப்பு உள்ளது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மீதே கர்த்தர் விசேஷமான கவனம் கொண்டுள்ளார். இந்தத் தேவதூதர்கள், நம்மை பராமரித்து, நம்முடைய காரியங்களை மேற்பார்வையிடுகின்றனர். மேலும், தேவனுடைய சித்தப்படி இவர்கள் நமக்கான தேவனுடைய பிரதிநிதிகளாக அல்லது தொடர்புகொள்ளும் வழியாகக் காணப்படுகின்றனர். தொடர்புகொள்ளுதல் என்று சொல்வது, தேவனுடைய **இந்தப்** பராமரிப்பு அல்லது **மற்ற** பராமரிப்புகளைக் குறிக்கின்றது." R. 5634, 5635.

---

**"கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன்." நெகே. 8:10.**

"காலப்போக்கில், பின்னர் நம்மிடத்தில் காணப்படப்போகும் சந்தோஷத்தின் கொள்ளளவு போல், இப்பொழுது நம்முடைய சந்தோஷத்தின் கொள்ளளவு இல்லாவிட்டாலும், தற்போது நாம் நம்முடைய சிறிய மண்பாண்டங்களுக்குள் கர்த்தருடைய சந்தோஷத்தை எந்த அளவிற்கு நிரப்ப முடிகின்றதோ, அந்த அளவிற்கு நிரப்பிக்கொள்ளலாம்." . . . (யோவான் 14:23)—"இப்படியான உறவு இருக்கும்போது எப்படி ஒரு கிறிஸ்தவன் கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சியை உணர்வதில் தவறுவான்? அது சாத்தியமல்லவே. ஒருவேளை அவனுடைய விசுவாசம், வாக்குத்தத்தங்களைக் கிரகித்துக் கொண்டு, அதைப் பற்றிப் பிடித்துக்கொண்டிருக்குமாயின் கர்த்தருக்குள்ளான இந்த மகிழ்ச்சி நிச்சயமாய் அவனை தொடரும்.

மேலும், அவனுடைய சந்தோஷம் முழுமையாகவும் காணப்படும். எந்த ஒரு நிலை மற்றும் சூழ்நிலைகளில் காணப்பட்டாலும் கர்த்தருடைய சமுகத்திலே முழுமையான சந்தோஷம் உண்டு." R. 1949, c.1, p.2, 3.

---

**"ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாது." யோபு 5:19.**

"நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து, அவருடைய வார்த்தை நமக்குள் நிலைத்திருந்தால், ஆறு இக்கட்டுகளிலும் அவர் நம்மை இரட்சிக்கிறவராக இருப்பார், ஏழாவதிலும் நம்மைக் கைவிடாமல் இருப்பார்—காரணம், நாம் தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறோம்; மேலும், நாம் அவருடைய அழைப்பிற்குச் செவிசாய்த்திருக்கின்றோம்; மேலும், நாம் நம்முடைய சரீரங்களில் அவரை மகிமைப்படுத்த நாடுகின்றோம். ஆதலால், நமக்கு மனுஷன் என்ன செய்துவிடுவானோ என்று நாம் பயப்பட வேண்டியதில்லை." R. 5539, c.1, p.8.

"இந்த வாக்குத்தத்தங்களில் சில, ஒரு கவிஞனால் பின்வரும் வரிகளில் தொகுக்கப்பட்டுள்ளது . . . "உன்னை ஆழங்கள் வழியாக கடந்துபோக நான் அழைக்கும்போது, ஆபத்தின் ஆறுகள் உன்மேல் புரளுவதில்லை, உந்தன் கவலைகளில் உன்னை ஆசீர்வதிக்க உன்னோடுகூட நான் இருப்பேன், உன்னை கடுந்துயரிலிருந்து பரிசுத்தப்படுத்துவேன்." R. 4784, c.2, top.

---

**"கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை." சங்.16:8.**

"'என் வலதுபாரிசத்தில்' என்னுடைய நேசத்திற்கு மிக அருகில்." A. 92.

"சுயத்தின் மீதான நம்பிக்கைக்குப் பதிலாக, சுயத்தின் பெலவீனங்கள் மற்றும் அபூரணங்களை நினைவில் கொண்டு, அதன் மீதான நம்பிக்கையை விட்டுவிடவும், அதற்கு நிகராக, நம்மை அதிகமாய்ப் பலப்படுத்தி நம்முடைய விழுந்துபோன சுபாவத்தின் தீமையிலிருந்து நாம் விலகுவதற்கு ஏதுவான, தேவன் பேரில்மாபெரும் பயபக்தியைக் கொண்டிருந்து அவரையே சார்ந்திருக்கிறவர்களாகக் காணப்பட வேண்டும் என்று ஞானம் கட்டளையிடுகின்றது. . . . இப்படியாக நாம் தாழ்மையும், உண்மையும் உள்ளவர்களாக

இருக்கும்பொழுது, கர்த்தர் நம்மை, தம்முடைய நாமத்தை மற்றவருக்கு அறிவிக்கும்படியான அவருடைய தெரிந்தெடுத்தலின் பாத்திரமாக மாற்றுவார்." R. 5186, c.1, p.1; c.2, p.2.

---

**"ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு." சங். 16:11.**

"இவர்கள் தற்கால ஜீவியத்தின் விஷயங்களை, அவைகளுக்குரிய உண்மையான மதிப்பீட்டின்படி மதிப்பீடு செய்வதற்குக் கற்றுள்ளனர்; மேலும், இவைகளின் மூலம் உண்டாகும் சந்தோஷம் நிலையற்றதும், திருப்தியற்றதும் எனக் காண்கின்றனர்; அதேசமயம், தேவனுக்கடுத்த விஷயங்களிலும், தேவனுடைய அழைப்பிற்குச் செவிசாய்ப்பதிலும் நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான படிப்பினைகள், ஒழுக்கம் மற்றும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பே என்றும் காண்கின்றனர். இவ்விதம் தற்கால ஜீவியத்தை சரியாகப் பயன்படுத்தி—தேவன் தம்முடைய வார்த்தைகளில் நமக்கு காட்டின ஜீவமார்க்கத்தில் நாம் நடக்கும்பொழுது—காணப்படாதவைகளாய் இருந்தும், நிச்சயமும் நித்தியத்திற்குரியவைகளுமாய் இருப்பவைகளில் உள்ள தற்கால சந்தோஷம், நம்பிக்கை மற்றும் விசுவாசத்தைப் பெற்றிருப்போம்; மேலும், தேவனுடைய சமுகத்தில் நின்று பரிபூரண ஆனந்தமும் கிருபையின் பிரதான இடமாகிய—அவருடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் நாம் பெற்றுக்கொள்வோம் என்பதையும் அறிந்துகொள்வோம்." R.1949, c.1, p.1.

"நம்முடைய சந்தோஷமானது, வசனத்தின் மீதான நம்முடைய ஆராய்ச்சியின் மேலும், இவைகளில் உள்ள விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்கள் குறித்ததான நம்முடைய அறிவின் மேலுமே அதிகமாய்ச் சார்ந்துள்ளது." R. 5460, c.1, top.

---

**"கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்." சங்.18:2.**

"'கர்த்தர் தம்மை நம்புகிற அனைவருக்கும் கேடகமாயிருக்கிறார் (ஒரு பாதுகாப்பு); கர்த்தரை அல்லாமல் தேவன் (வல்லமையுள்ளவர்) யார்? அல்லது நம்முடைய தேவனையன்றி கன்மலையும் (நம்முடைய

ஆத்துமாக்களுக்கான பாதுகாப்பான நங்கூரம்) யார்?' நம்முடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும் வைப்பதற்கு (நங்கூரமிடுவதற்கு) நமக்கு வேறு எவரும் இல்லை. ஆனால், அவரிடத்தில் பாதுகாப்பாய் நங்கூரமிடப்பட்டவர்களாய் நம்பிக்கையுடனும், பயமில்லாமலும் காணப்பட்டு அவருடைய செட்டைகளுடைய நிழலின் கீழ் சுகமாய் இளைப்பாறலாம். 'கர்த்தர் ஜீவனுள்ளவர்; என் கன்மலையானவர் துதிக்கப்படுவாராக; என் இரட்சிப்பின் தேவன் உயர்ந்திருப்பாராக.' (சங்கீதம் 18:46)" R. 3337, c.2, p.4.

---

**"என்னைப் பலத்தால் இடைகட்டி, என் வழியைச் செவ்வைப்படுத்துகிறவர் தேவனே; உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்." சங். 18:32, 29.**

"எவன் ஒருவன் இவைகளை தன்னுடைய சொந்த பெலத்தினால் செய்ய முற்படுவானோ அவன் நிச்சயமாய் தோல்வியடைவான்; காரணம், **ஒவ்வொருவரையும்** பரீட்சிக்கப் போகிறதான **பற்றியெரிகிற அக்கினியானது,** மாம்ச சிந்தையின் திறனைப் பார்க்கிலும் மிஞ்சினதாக இருக்கும்; ஆகிலும், தங்களை அர்ப்பணித்தவர்களிடம் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உண்டாக்குகிற தேவன் தாமே தம்முடைய கிருபையின் மேல் சார்ந்து இருக்கின்றவர்களை இவ்விதமாய் பலப்படுத்தி, தேவையானவைகளை அருளுவதால், சங்கீதக்காரனோடு இவர்களும் மேற்கூறிய வசனத்தையும், அப்போஸ்தலனாகிய பவுலோடு 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்கு பெலனுண்டு என்றும் கூற முடியும்.'" R. 2154, c.1, p.4.

---

**"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்." சங். 23:1.**

"செம்மையான ஆடுகள் தங்களுடைய சித்தங்களை மேய்ப்பனுடைய சித்தத்திற்கென்று ஒப்புக்கொடுத்து, அவருடைய வழிநடத்துதலையே முழுமையாக நம்பும். மேலும் இப்படிச் செய்வதினிமித்தம், உலகத்தின் பிள்ளைகளிடம் பொதுவாகக் காணப்படும் கவலை நிறைந்த ஏக்கங்களிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்." R. 3269, c.1, p.3.

"இவர்கள் அதிக படிப்பை பெற்றிருக்கமாட்டார்கள். மேலும், மனுஷீக ரீதியில் பேசுவோமேயானால், தப்பறையின் சகல போலித்தனங்களோடும் பற்றுகொள்ள முடியாதவர்களாய் இருப்பார்கள். ஆனால், எஜமானின் சத்தத்திற்கு இவர்கள் நன்கு பரிச்சயமானபடியினால் அப்படிப்பட்ட சத்தங்களை அந்நியர்களுடைய சத்தங்கள் என்று உடனடியாகப் புரிந்துகொண்டு அவர்களைப் பின்தொடர மாட்டார்கள். காரணம், மேய்ப்பனுக்கு மாத்திரமே இவர்கள் உண்மையும், கீழ்ப்படிதலும் உள்ளவர்களாய் இருப்பார்கள். இருதயம் மற்றும் சிந்தையின் இப்படிப்பட்ட நோக்கமே, இந்தப் பொல்லாத நாட்களின் இடர்பாடுகள் மற்றும் குழப்பங்களின் மத்தியில் நமக்குரிய ஒரே பாதுகாப்பாகும். மேலும், இப்படிப்பட்டவர்கள் அனைவரும் நம்பிக்கையுடன் சங்கீதக்காரனோடு 23-ம் சங்கீதத்தைப் பாடிடலாம்." R. 3116, c.1, p.4, 5.

---

**"அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்." சங். 23:2.**

"தன்னுடைய தனிப்பட்ட பக்தி மற்றும் தெய்வீக காரியங்களுக்கடுத்த தியானத்திலும் . . . கர்த்தருடைய இரக்கம் மற்றும் நன்மைகள் குறித்து சாட்சி பகருவதற்கும், ஜெபம் பண்ணுவதற்கும், வசனங்களை ஆராய்வதற்கென . . . மற்றவர்களோடு ஒன்று கூடுதலிலும் ஆவிக்குரிய இளைப்பாறுதலை அளிக்கிற இத்தகைய பசுமையான புல்வெளியைக் கர்த்தருடைய எந்த ஆடுதான் காணாமல் இருந்தது? இந்தச் சகல வாய்ப்புகளும், சிலாக்கியங்களும் . . . மாபெரும் மேய்ப்பனால் ஆடுகளுக்கென்று அருளப்பட்ட ஏற்பாடுகளாகும். . . . சத்தியம் மற்றும் கிருபையின் நீரோடைகள் ஜீவனுள்ளவைகளே, என்றாலும் இதற்கு இணையாகவே அமர்ந்த தண்ணீர்களும் உள்ளது . . . இவைகள் ஆடுகளால் சுயமாக கண்டுபிடிக்கப்படுவதில்லை; இவைகளைக் கண்டுபிடிக்க ஆவியின் வழிநடத்துதல் அவசியமாய் உள்ளது. . . . தப்பறையின் சத்தத்திலிருந்து மிகவும் வேறுபட்டதாய் உள்ள சத்தியத்தின் அழுத்தம் கொண்டுள்ள அவருடைய சத்தத்தை நாம் பகுத்தறிந்து வேற்றுமை காணக்கடவோம். அந்நியர்களை உண்மையான ஆடுகள் பின்தொடர்வதில்லை. காரணம், அவைகள் அந்நியர்களுடைய சத்தத்தை அறிந்துகொள்ளுவதில்லை. இவைகள் அதன் பண வட்டத்தையோ அல்லது அதன் உலகரீதியான

இலட்சியங்களின் வட்டத்தையோ அல்லது அதன் சமய குருமாரின் தொனியையோ அல்லது தெய்வீக கருத்து மற்றும் முறைகளுக்கு எதிர்மறையான அதன் ஆவியையோ விரும்புவதில்லை.”
R. 3269, c.1, p.5; c.2, p.1.

---

**“அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.” சங். 23:3.**

“அவர் என் ஆத்துமாவைத் தேற்றுவார் (மரணத்தினின்று மீண்டும் கொண்டு வருதல்); தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார் (காரணம், நான் அவருடைய கனமுள்ள நாமத்தைத் தரித்திருக்கும், அவருடைய பிள்ளையாய் இருப்பதினால்).”
R. 3116, c.2, middle.

“இது கிறிஸ்தவனின் அனுபவங்களோடு பொருத்திப் பார்க்கப்படும்போது, . . . இந்த அனுபவங்கள், ஆத்துமாவுக்கான தேற்றுதல் என்று அழைக்கப்படலாம். மேலும், இது ஆடுகளுக்காக தமது ஜீவனையே ஒப்புக்கொடுத்த மாபெரும் மேய்ப்பனின் அடிச்சுவடுகளில் நாம் நடப்பதற்கும் . . . நாம் பலி செலுத்துவதற்கும் தேவையான . . . ஜீவனுக்கு ஏதுவான நம்முடைய நீதிமானாக்கப்படுதலுக்கும் பொருந்துகின்றது. இவ்விதமாக உண்மையான ஆடுகள் . . . அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அநுகூலமான . . . நீதியின் பாதைகளில் நடத்தப்படுகின்றது. . . . இந்தத் தயவும், ஆசீர்வாதங்களும், வாய்ப்புகளும் அவர்களின் நிமித்தமாகவோ அல்லது சொந்த தகுதியின் நிமித்தமாகவோ அவர்களுக்கு வராமல், கர்த்தருடைய கிருபையினாலே—‘அவருடைய நாமத்தினிமித்தமே அவர்களுக்கு வருகின்றது.’” R. 3269, c.2, p.2

---

**“நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.” சங். 23:4.**

“சிறுமந்தையில் உள்ள ஆடுகள் தீமையைக் கண்டு அஞ்சுவதில்லை. காரணம், கர்த்தருடைய உதவி, அவர்கள் பட்சமாகவும், அவர்களோடுகூட அவரும் இருப்பதேயாகும். மேலும், ஏற்கனவே செலுத்தப்பட்ட மீட்புக்கான விலையின் மூலம் நமக்கு அவர்

காண்பிக்கும் தயவை வெளிப்படுத்தி உள்ளார். அவருடைய வாக்குத்தத்தமான வார்த்தையில்—மரணம் என்பது நிரந்தரமான அழிவு அல்ல என்ற உறுதிபடுத்துதலின் மூலமாகவும் அவர் அவர்களோடு இருக்கிறார். . . . இவர்கள் மரண இருளின் பள்ளத்தாக்கின் வழியாய் பாட்டுப்பாடி, தங்களுடைய இருதயத்தில் இசை எழுப்பி கடந்துபோவார்கள் என்பதில் ஆச்சரியம் இல்லை. . . . ஆட்டிடையர்கள் வைத்திருக்கும் துரடு, ஆடுகளை இடர்பாடுகளிலிருந்து விடுவிக்கவும், எதிரியின் பயங்கரமான தாக்குதலிலிருந்து பாதுகாக்கவும், ஆடுகள் கவனக் குறைவில் செல்லும்போது, தண்டிக்கவும் பயன்படுகிறது. அதாவது, கோலினுடைய இந்த அனைத்து பயன்களும் ஆடுகளின் நன்மைக்காகவும், அவைகளின் தேவைக்காகவுமே இருப்பதுபோலவே, கர்த்தருடைய சிறுமந்தையின் விஷயத்திலும், அவர்களுடைய மேய்ப்பனும், அவருடைய கோலின் உதவியும் இருக்கும். . . . உண்மையான ஆடுகள், மேய்ப்பனுடைய வழிநடத்துதலை நேசிக்கக் கற்றுக்கொண்டு அவைகளினால் ஆறுதல் அடையும்."

R. 3269, c.2, p.3, 4.

---

**"என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது." சங். 23:5.**

"இந்த மேஜைகளில் எத்தனை வகைதான் உள்ளன! மேலும், உபதேச ரீதியான உணவு பதார்த்தங்களும் எவ்வளவாய் வேறுபடுகின்றன. இவைகளில் பெரும்பாலானவற்றில் காணப்படும் உணவானது, ஆயத்தம் பண்ணும்போதே கெட்டுப்போனதாகத் தோன்றுகிறது. அவைகளில் சில வருத்தமுண்டாக்கத்தக்கதாகவும், இன்னும் சில புளிப்பானதாகவும், பெரும்பாலானது ஊசிப்போனதாகவும் உள்ளது. காரணம், அவைகளில் பெரும்பாலானவைகள் 'இருண்ட யுகத்தில்' உருவானவைகளாகும். மேலும், இந்த மேஜைகளில் உட்கார்ந்திருக்கும் அருமையான நண்பர்களுக்கு இப்படிப்பட்ட உணவுகளின் மேல் விருப்பம் இருப்பதில்லை. . . . இப்படிப்பட்டவர்களின் கவனத்தை, விசுவாச வீட்டாருக்குக் கர்த்தர் தாமே கொடுத்துக் கொண்டிருக்கும், 'புதியதும், பழையதும்' சகலமும் பரிசுத்தமும், இனிமையும், ருசியானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமாய் காணப்படும் தாராளமான, ஏராளமான தெய்வீக சத்தியத்தின் மேல் நாம் திருப்பிடுவோமாக. இந்த மேஜையானது தங்களுடைய வீடுகள் அல்லது நிலங்களைக் காட்டிலும், பெற்றோர்கள்

அல்லது குழந்தைகளைக் காட்டிலும், புருஷன் அல்லது மனைவியைக் காட்டிலும், தங்குமிடம் அல்லது சமுதாயம் அல்லது மத அமைப்பு அல்லது தன்னைக் காட்டிலும்—கர்த்தரை தங்களுடைய முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் அன்புகூருகிற அனைவருக்கும் திறந்தே உள்ளது." R. 3270, c.1, p.2.

---

**"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டில் நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்." சங். 23:6.**

"நம்பிக்கையில் முழு நிச்சயமும், விசுவாசத்தில் முழு நிச்சயமும் கொண்டிருப்பதே, கர்த்தருடைய ஜனங்களுக்குரிய தகுந்த நிலை என்று பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார். நம்மில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை முடிப்பதற்கு விருப்பமும், வல்லமையும் உடையவராய் இருக்கிறார் என்ற முழுமையான நம்பிக்கையே—இந்தக் கருத்தே தீர்க்கதரிசியால் மேற்கூறப்பட்ட வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (பிலிப்பியர் 1:5) ஆனால் வெகுசில கிறிஸ்தவர்களே, விசுவாசத்தின் இந்த முழு நிச்சயத்தைக் கொண்டுள்ளனர்; மேலும், வெகுசிலரே நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் என்றும் . . . தேவனுடைய கிருபையினால் இறுதியில் நான் பரலோக இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்வேன் என்றும் உறுதியாகவும், சந்தேகமின்றியும் கூறுகின்றனர். . . . அப்போஸ்தலரோடும், தீர்க்கதரிசியோடும் இந்தக் கருத்தில் இசைந்திருக்கும் இந்தச் சொற்ப கிறிஸ்தவர்களே, மற்றவர்கள் பெற்றிராத ஒரு மாபெரும் சந்தோஷத்தையும், ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தையும், ஒரு மாபெரும் இருதயத்தின் சமாதானத்தையும் பெற்றுக்கொள்வார்கள்." R. 2642, c1, p.4.

---

**"சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணம் உள்ளவர்களுக்கு தமது வழியைப் போதிக்கிறார்." சங்.25:9.**

"சாந்தகுணம் = தெய்வீக சித்தத்திற்கு பொறுமையுடன் ஒப்புக்கொடுத்திருப்பது." R. 2586, c.1.

"துணிகரமானவர்களை தவறான கருத்துகளில் விழவும், அவைகளைப் பரப்புவதில் வெற்றி பெற தேவன் அனுமதித்தாலும், அதற்கு நேர்மாறாக சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்கு தமது வழியைப் போதித்து, அவர்கள் சத்தியத்தைக் கண்டுகொள்ளவும், அதைத் தப்பறையினின்று வேறுபடுத்தி காணும்படியாகவும் அவர் அவர்களுக்கு ஒரு நியமத்தையும் ஏற்படுத்தியுள்ளார். மேலும், இந்தப் 'பொல்லாத நாளில்' ஆயிரக்கணக்கானோர் அந்தத் தப்பறைகளுக்குள் **விழுந்தாலும்,** கர்த்தர் வழிநடத்துவார் என்றும், விழாதபடிக்கு காப்பார் என்றும் வாக்குறுதியைப் பெற்றுள்ள சாந்தகுணமுள்ளவர்களை இந்தத் தப்பறைகள் மேற்கொள்ளமுடியாது." R. 1268, c.1, p.3.

"யார் ஒருவர் (சாந்தகுணத்தின்) இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்கிறாரோ, அவர் தெய்வீக ஊழியத்திற்கான மிக முக்கியமான ஆயத்தமாகுதலைப் பெற்றுக்கொள்கின்றார்." R. 5261, c.1, p.5.

---

**"கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்." சங். 25:12.**

"அன்பானவர்களே, தப்பறையானது மிக விஷத்தன்மையுடனும், வஞ்சனையுடனும் தன்னுடைய தோற்றத்தை எடுக்கிறதுமானதும், இது உங்கள் நடுவில் உள்ள கள்ள சகோதரர் மற்றும் சகோதரிகள் மத்தியில் இருந்து சுறுசுறுப்பாய் செயல்படும் பிரதிநிதிகளைக் கண்டெடுக்கிறதுமானதும், சத்தியத்திற்கு உண்மை காட்டுவதினிமித்தம், உங்களுக்கு இருந்த சில இனிமையான சமுதாய பந்தங்களையும், ஒருகாலத்தில் விசுவாச வீட்டிற்கு நீங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து வருகையில், நீங்கள் இனிமையாக பழகினவர்கள் மத்தியிலிருந்தும்கூட சிலரை விட்டுப் பிரிய நேரிடுகிறதுமான இந்த கொடிதான காலங்களில் உங்களுக்கான நம்முடைய ஆலோசனை என்னவெனில்—ஆம், இம்மாதிரியான காலங்களில், 'நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறாய்,' காரணம்,

எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்' என்று எழுதப்பட்டிருக்கிறதான (யோவான் 6:45)—அப்போஸ்தலர் பவுலின் ஆலோசனையையே நாம் மீண்டுமாக பரிந்துரைக்கின்றோம்."
R. 1320, c.2, p.6.

---

**"கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்." சங். 25:14.**

"இங்குத் தேவனுடைய உடன்படிக்கையைத் தெளிவாக புரிந்துகொள்வது மிக முக்கியமான விஷயம் என்பது போல் உரைக்கப்பட்டுள்ளது; அது முக்கியமான விஷயம்தான். காரணம், தேவனுடைய உடன்படிக்கையே உண்மையில் முழு தெய்வீக திட்டத்திற்கான திறவுகோலாகும். 'உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்' என்று தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த உடன்படிக்கையானது, நேரடியாகவும், மறைமுகமாகவும் சகல தெய்வீக கிருபையின் ஐசுவரியங்களை உள்ளடக்கினதாக இருக்கின்றது. . . . நம்முடைய கண்கள் அபிஷேகிக்கப்பட்ட நிலையிலும், கர்த்தரிடத்தில் நம்முடைய இருதயங்கள் முழுமையாக அர்ப்பணித்துள்ள நிலையிலும், அவருடைய சித்தம் என்னவென்றும், அவருடைய வழி என்னவென்றும் மாத்திரமே அறிந்துகொள்வதற்கான முழுமையான வாஞ்சையில், மாபெரும் உடன்படிக்கையை நாம் நோக்கிப் பார்க்கையில், இதோ, அது மகிமையுடன் நமக்கு முன்பாக மூன்று பாகங்களாக வெளிப்படுகின்றது: அதாவது, (1) பூமியின் சகல குடிகளும்—மனுஷகுடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் ஓர் ஆசீர்வாதத்தைப் பெற இருக்கின்றனர். (2) ஆபிரகாமின் சந்ததியானது, ஒவ்வொரு சிருஷ்டிக்குமான இந்தத் தெய்வீக ஆசீர்வாதங்களின் **வழியாக** இருக்கப்போகிறார்கள். (3) இந்தச் சந்ததி முதன்மையாக நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், இரண்டாவதாக இந்த உடன்படிக்கையிலும், சகல தெய்வீக இரக்கங்களிலும் அவருடன் உடன்பங்காளிகளான 'ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியைக்' குறிக்கின்றது." R. 2209, c.1, p.5; c.2, p.1.

**"கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?" சங். 27:1.**

"இப்பொழுது விசுவாசத்தில் நல்ல போராட்டம் போராடிக்கொண்டிருக்கிற கர்த்தருடைய ஜனங்கள் அனைவரிடமும் காணப்பட வேண்டிய சரியான மனநிலையையே இவ்வசனம் முன்வைக்கின்றது. இது, சூழ்நிலைகள் இருளாகவும், ஆபத்து நிறைந்ததாகத் தோன்றினாலும், சத்துருக்கள் பெருகினாலும், குழப்பங்கள் அதிகரித்தாலும் அவர்கள் பயப்பட வேண்டாம் என்று கூறுகின்றது." R. 2016, c.2, top.

"வேதவாக்கியங்கள் முழுவதிலும் பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த ஆறுதல், நம்முடைய உச்ச தேவைகளுக்கான காலக்கட்டத்தில், அதன் முழு ஆற்றலுடன் வெளிப்படுகின்றது. . . . விசுவாசத்தினால் பிறப்பிக்கப்பட்டு, சகிப்புத்தன்மையால் வலுவூட்டப்பட்ட திடமனதானது மிகவும் குழப்பமான இடர்பாடுகளின், ஆழமான இருளின் மத்தியிலும், கோர புயலின் மத்தியிலும், மிகவும் பயமுறுத்தும் ஆபத்துக்கள் மத்தியிலும், 'கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானார், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?' என்று தாழ்மையுடன்கூடிய துணிவில் கூறும்."
R. 1915, c.1, p.1; c.2, p.3.

---

**"தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்." சங். 27:5.**

"உச்ச தேவைகளின் காலக்கட்டத்தில் தான், விசேஷமாக கர்த்தருடைய ஜனங்கள் கிறிஸ்தவனுக்குரிய ஆயுதத்தினுடைய (விசுவாசம்) இந்தப் பாகத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொள்ள வேண்டும். மேலும், தங்கள் விசுவாசத்தின் கதவுகள், தங்களை முற்றிலுமாக உன்னதமானவரின் மறைவிடத்தில் முழுமையாக மறைத்துக் கொள்ளும்படியாகவும் பார்க்க வேண்டும். அவதூறுகள் கடுமையாகவும், வலுவாகவும் இருக்கும்போதும் . . . அவர்களுடைய நாமங்கள் பொல்லாங்காய்ப் பேசப்படும்போதும் . . . ஆ, இதுவே

விசுவாசம் எனும் கேடகத்தை இறுக பற்றிக்கொள்வதற்கும், (மேற்கூறப்பட்டபடி) சங்கீதக்காரனின் ஜெயமுள்ள வார்த்தைகளைக் கூறுவதற்கான காலம்." R. 1788, c.1, p.5.

---

**"என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்." சங். 27:10.**

"தேவனுடைய ஜனங்களில் ஒருவராகக் கருதப்படுவது மிகப் பெரிதான சிலாக்கியமாகும். ஆனாலும், அநேகர் இதைப் புரிந்துகொண்டதைக் காட்டிலும்—இதிலுள்ள தங்களுடைய பங்கு மற்றும் தேவனுடைய பங்கு பற்றி புரிந்து கொண்டதைக் காட்டிலும் ஆழமான அர்த்தம் இதற்கு உண்டு. அவர்களுடைய பங்கைப் பொறுத்தவரையில் . . . அவர்கள் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய புத்திரரும், சுதந்தரருமாயுள்ளனர். மேலும், அவர்கள் அவருடைய நேச குமாரனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படிக்கு தேவனுக்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்துள்ளார்கள். . . தேவனுடைய பங்கைப் பொறுத்த வரையில், தற்காலத்து ஜீவியத்திற்கும், வரவிருக்கிற எதிர்கால ஜீவியத்திற்கும் அவர் அளித்துள்ள சகல கிருபையான வாக்குத்தத்தங்களை அத்தகையவர்களுக்கு கிறிஸ்து மூலமாய் நிறைவேற்றுவார். இன்னுமாக, இது தற்காலத்து ஜீவியத்தில் முடிவு பரியந்தமும் நமக்கு தகப்பனைப் போன்ற அவருடைய அன்பும், பராமரிப்பும், ஒழுக்கப்படுத்துதலும், ஆலோசனையும், போதனையும், பாதுகாப்பும், உற்சாகமூட்டுதலும் இருக்கும் என்பதையும், பிற்பாடு நாம் அவருடைய மகிமையான பிரசன்னத்திற்குள்ளும், முடிவில்லா இளைப்பாறுதலுக்குள்ளும், சந்தோஷத்திற்குள்ளும், சமாதானத்திற்குள்ளும் ஏற்றுக்கொள்ளப்படுவோம் என்பதையும் குறிக்கின்றது. ஓ, தேவனுடைய ஜனமாய் இருப்பது எத்துணை பாக்கியம்! தற்காலத்து ஜீவியத்திலும்கூட அவருடைய கிருபையின் பலன் கணக்கிட முடியாததாய் இருக்கின்றது." R. 1787, c.2, p.5; R. 1788, c.1, p.1.

---

**"கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு." சங். 27:14.**

"கர்த்தருடைய ஜனங்கள் பூமிக்குரிய விஷயங்களில் விசேஷமாக பாதுகாக்கப்பட மாட்டார்கள் என்று கர்த்தர் குறிப்பிட்டுள்ளதை நாம்

அறிவோம். ஒருவேளை நம்முடைய போதகருக்கு சம்பவித்தது போன்று நம்மை எந்த விதத்திலாவது காயப்படுத்துவதும், நிந்தனைக்குள்ளாக்குவதும் நன்மையானது என அவருடைய ஞானம் காணுமாகில், நாம் திடமனதாயிருக்க வேண்டும். மேலும் அவர், நாம் அவரிடத்தில் விசுவாசமும், நம்பிக்கையும் கொண்டிருக்கும் காரணத்தினால், அவர் நம்முடைய இருதயங்களைப் பலப்படுத்துவார். அவர் தவறு விளைவிக்க முடியாத அளவுக்கு ஞானமுள்ளவர் என்பதையும், அவர் அனுமதித்துள்ளது எதுவாயினும், அவ்வனுமதிக்கு ஏதாகிலும் ஒரு காரணம், நோக்கம் காணப்படும் என்பதையும் நாம் அறிவோம். பரிசுத்தவான்கள் கர்த்தருடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்கள்—அவருடைய கண்ணின் கண்மணி போன்றவர்கள் என்பதை நாம் நிச்சயமாக அறிந்திருந்தபடியால் சகலமும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாகவே நடந்தேறுகிறது என்பதை அறிவோம்.” R. 5330, c.2, p.7.

---

**“கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்: கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்.” சங். 29:11.**

“இவ்வசனத்தில் வருகிற **பெலன்** என்பதற்கான விரிவான அர்த்தம் **தைரியமாகும்.**” R. 4817, c.1, p.9.

“நாம் உண்மையுடன், ‘அவருடைய ஜனங்களாக’ இருந்து, வாக்களிக்கப்பட்டுள்ள **பெலத்தைப்** பயன்படுத்துவதற்கு உண்மையுடனும், ஊக்கத்துடனும் வாஞ்சிப்போமாக. வாக்களித்தவர் உண்மையுள்ளவரானபடியால், அதை நிறைவேற்றவும் செய்வார். ஆகவே, ஒருவேளை உங்களுடைய தாலந்துகளை உண்மையுடன் பயன்படுத்துவதற்கான பெலன் உங்களிடத்தில் இல்லையெனில், அது உங்களுடைய தவறு, தேவனுடையதல்லவே. ஒன்றில் நீங்கள் அவருக்கான ஊழியத்தை இருதயத்தில் போதுமான அளவு எடுத்துக்கொள்ளவில்லை; இல்லையேல், அவர் அளித்துள்ள பெலத்தை நீங்கள் பயன்படுத்தவில்லை. அவருக்கு விசுவாசமும், உண்மையும் உள்ள ஊழியக்காரர்களுக்கு—தங்களுடைய போதகருக்கென்று அர்ப்பணித்துள்ள தாலந்துகளை அவருடைய கீர்த்திக்காகப் பயன்படுத்துகின்றவர்கள், அநேகமானவர்களாகவோ அல்லது சிலராகவோ அவர்கள் காணப்பட்டாலும்—‘கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்.’” R. 3697, c.1, p.2.

**"மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்திலே ஒளித்துவைத்துக் காப்பாற்றுகிறீர்." சங். 31:20.**

"ஓ! எத்துணை அருமையாய், இம்மறைவிடம் உள்ளது! இப்பொழுது முழு உலகத்தையும், விசேஷமாக கிறிஸ்துவ மண்டலத்தின் தேசங்களை கலக்கிக் கொண்டிருக்கிற குழப்பத்தின் மத்தியில் நாம் எத்துணை இளைப்பாறுதலையும், புத்துணர்வையும் கண்டடைந்துள்ளோம்—அதாவது, தற்கால திருப்தியற்ற சமுதாய ஒழுங்குகளை மறுசீர்படுத்துவதற்கான பயனற்ற முயற்சியை ஏறெடுக்கும் மனுஷனுடைய அறிவீனத்திலிருந்தும், அகங்காரத்திலிருந்தும் ஓய்வு கண்டடைந்துள்ளோம். மற்றும், தற்கால குழப்பம் நிறைந்த மனுஷரின் பாரம்பரியத்திலிருந்து, சத்தியம் மற்றும் நீதியின் தெளிவான கொள்கைகளைத் தோற்றுவிப்பதற்கான மனுஷனுடைய வீணான முயற்சிகளிலுள்ள நாவுகளின் சண்டையிலிருந்தும் ஓய்வு கண்டடைந்துள்ளோம் (சங்கீதம் 31:20). இங்கு, உலகம் தரக்கூடாததும், எடுத்துப்போட முடியாததுமான இளைப்பாறுதலையும், சமாதானத்தையும், வெளிச்சத்தையும், சந்தோஷத்தையும் நாம் கண்டடைகின்றோம்." R. 1788, c.1, p.3.

---

**"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள், அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்." சங். 31:24.**

"உலகப் பிரகாரமான ஜனங்களுடன் நாம் தொடர்புக்குள் வருகையில், அவர்கள் நம்மிடம் ஒரு வார்த்தைகூட கூறாமல் இருந்தும், நம்முடைய எளிமையான நம்பிக்கை தளர்ந்துபோகச் செய்யப்படுவதை நாம் அனுபவித்திருக்கிறோம். நம்முடைய ஆதார வசனம் கட்டளையிடுவது போன்று . . . நாம் திடமனதாயிருந்து, கர்த்தருக்குக் காத்திருக்க வேண்டும். . . . **நீதியான** கொள்கைகளிலிருந்தும், கர்த்தர் மேலுள்ள விசுவாசத்தின் அடிப்படையின் பேரில் உருவாகும் திடமனதானது, தற்பெருமையானதல்ல, மாறாக, அது நீதியானதும், தேவனுக்குப் பிரியமானதுமாய் உள்ள தைரியமாகும். இதன் ஆதாரம், **தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார்** என்றும், தேவன் கவனித்துக் கொண்டிருக்கின்றார் என்றும், நாம் அவருடைய குமாரனோடு,

அவருடைய இராஜ்யத்தில் உடன்பங்காளிகள் ஆக வேண்டுமென விருப்பம் கொண்டுள்ளார் என்ற உணர்ந்துகொள்ளுதலிலேயே காணப்படுகின்றது. நாம் உண்மையுள்ளவர்களாக இருப்போமா என்பதை பார்க்கவே அவர் நம்மை பரீட்சிக்கின்றார். மேலும், நமக்குள் காணப்படும் இந்தத் தைரியம், சரியான விதத்தில் விஷயங்களைச் செய்திடுவதற்கும் நமக்கு உதவிட வேண்டும்.”
R. 5329, c.2, p.5; R. 5330, c.1, p.4.

---

**“நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.” சங். 32:8.**

“பூமிக்குரிய பெற்றோர் தங்களிடத்தில் பணிவாக, உடனுக்குடன் கீழ்ப்படிகிற பிள்ளைகளிடத்தில் மிகுந்த சந்தோஷமடைகிறார்கள். இத்தகைய பிள்ளைகள் சீர்பொருத்தப்படுவதற்குக் கடிந்துகொள்ளுதலின் வார்த்தையோ அல்லது பார்வையோ போதுமானதாக உள்ளது. இதைப் போன்றுதான் பரலோகத்தில் இருக்கிற நம்முடைய பிதாவும் ‘தம்முடைய வசனத்திற்கு நடுங்குகிறவர்களுக்கு’ (ஏசாயா 66:5) தம்முடைய அங்கீகரிப்பை அளிக்கின்றார். இத்தகையவர்கள் தங்களுடைய சொந்தக் குறைவுகளை உணர்ந்து அவைகளை சரி செய்து கொள்ளும்படியாக நாடியும்,— பிதாவுடைய வழிநடத்தும், போதிக்கும் அல்லது அன்புடன் கூடிய கடிந்து கொள்ளுதலுமாகிய சத்தத்தைக் கேட்கும்படியாக நாடியும், அவருடைய அங்கீகரிப்பின் புன்முறுவலை என்றென்றுமாக நாடியும், தங்களுடைய சொந்த குணநலன்களை வளர்த்துவதில் தேவனுடன் ஒத்துழைப்பார்கள். . . . கீழ்ப்படிதலும், விழிப்புமுள்ள இந்த வகுப்பாருக்கே, ‘என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்’ என்கிறார் கர்த்தர். அடிக்கடி கசையடிகளால் மாத்திரமே வழிநடத்தப்படக் கூடியவர்கள், ஜெயங்கொள்ளுகிற வகுப்பினராய் இருப்பதில்லை.” E. 233, 234, top.

---

**“கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.” சங். 34:7.**

“பாளையம் இறங்குவது என்பது—நிரந்தரமாகவும், நிலையாகவும் கூடவே இருத்தலாகும்.” R. 3441, c.1, p.2.

"சுவிசேஷ யுகத்தில், ஆவிக்குரிய இஸ்ரயேல் வீட்டார், தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது. ஆகவே, சபை முழுமையாய் நிறைவடைந்த பின்னர், தேவதூதர்கள் தோன்றுவார்கள் என்றும், அவர்கள் தங்களை பிரத்தியட்சமாய் வெளிக்காட்டுவார்கள் என்றும் எதிர்பார்ப்பது சரியானதல்ல. . . . கிறிஸ்துவின் பின்னடியார்களுக்குரிய தேவைகளை சந்திப்பதற்கும், அவர்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களுடைய காரியங்களை வழிநடத்துவதற்குமென்று அவர்களுக்கு வேதமும், கண்களுக்குப் புலப்படாத பரிசுத்தமான தேவதூதர்களின் ஊழியங்களும் அருளப்பட்டுள்ளது. இது நமக்கு மிக உறுதியான மாபெரும் ஆறுதலாகும். இவைகளையெல்லாம் தேவன் தாமாகவே செய்து கொண்டிருக்கின்றார் என்று நாம் எண்ணுவோமேயானால், அவர் **நம்மை** நிச்சயம் மறந்திருப்பார் என்று நாம் எண்ணுவதற்கு ஏதுவாகும். ஆனால், நம்முடைய பிதாவை அறியாமல் நம்முடைய தலையிலுள்ள ஒரு தலைமயிர் கூட கீழே விழுவதில்லை என்ற அவருடைய வார்த்தையில் உள்ள வாக்குத்தத்தத்தைப் பெற்றிருப்பதால், தம்முடைய பிள்ளைகளுக்கு, பரிசுத்த தேவதூதர்களின் ஊழியங்களின் மூலம் கிறிஸ்துவுக்குள்ளான தமது நோக்கங்களை அவர் நிறைவேற்றுவார் என்ற உண்மையினால் நம்முடைய மனம் இளைப்பாறலாம்." R. 5635, c.1, p.1; c.2, p.2.

---

**"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்." சங். 34:8.**

"கர்த்தருடைய பந்தியில் என்னென்ன நல்ல விஷயங்கள் உள்ளன என அறிந்துகொள்ள வேண்டும் என்று மாத்திரம் இருப்பவர்களால் அவைகளை ஒருபோதும் அறிந்துகொள்ள முடியாது. யார் ருசித்துப் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டுமென உண்மையான இருதயத்தோடு வருகின்றார்களோ, அவர்கள் மாத்திரமே அறிந்துகொள்ள முடியும். இவர்களுக்குரியதே 'மறைவான மன்னாவாகும்.'. . . இவர்கள் மாத்திரமே கர்த்தருடைய இந்தப் பந்திக்கு—ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கும், தேவனுடனான உறவிற்கும் ஐக்கியத்திற்கும், தேவனைப் பற்றின ஆழமான விஷயங்களையும், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களையும் பற்றியதான அறிவிற்கும், அவருடைய இரட்சிப்பின் திட்டத்தில் அவரோடு ஒத்துழைப்பதின்

சந்தோஷமாகிய இந்த விருந்துக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்— இவர்களே மற்ற பந்திகளை விட்டுவிட வாஞ்சையாய் இருப்பவர்கள். . . ஆழமாய் உணர்ந்துகொள்பவர்கள் மாத்திரமே—அதாவது, இந்த ஈவை அனுபவிப்பதற்கென்று சகலத்தையும் மகிழ்ச்சியுடன் விட்டுவிடுபவர்களே இந்தப் பந்திக்கு ஏற்றவர்களாகக் கருதப்படுகிறார்கள்." R. 1957, c.2, p.4, 6.

---

**"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது." சங். 34:15.**

"நம்முடைய சகல சோதனைகளிலும், குழப்பங்களிலும், அவைகளை ஜெபத்தில் கர்த்தரிடம் நாம் எடுத்துச்செல்லக் கூடுமா? ஆம், ஆம்; மெய்யாகவே நாம் எடுத்துச் செல்லலாம். கர்த்தரிடத்தில் சகலத்தையும் கூறும் சிலாக்கியத்தைக் காட்டிலும் மனக்குழப்பம் அல்லது வேதனை நிறைந்து காணப்படுபவர்களுக்கு வேறு எந்த ஆறுதலும் பெரியதாய் இருக்காது. இந்த அவருடைய 'சிறியவர்களின்' கூப்பிடுதலுக்கு அவருடைய செவிகள் எப்போதும் திறந்திருக்கின்றன. மேலும், நாம் அவரிடம் அவைகளைக் கூறுவதும், நம்முடைய சகல விஷயங்களிலும் அவர் அக்கறையுள்ளவராக இருக்கின்றார் என்ற உணர்வும் நம்மை புத்துணர்வும், மகிழ்ச்சியும் அடையச் செய்கின்றது. இது, அவர் நம்மை விட்டுவிலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதுமில்லை என்பதான அவருடைய வாக்குத்தத்தத்தையும், அவருடைய ஞானத்தையும், அன்பையும் நினைவில் கொண்டு வருகின்றது. . . மேலும், நம்முடைய சகல பாரத்தையும் அவர் மேல் வைக்கையில். . . . நாமே நம்முடைய சொந்த விஷயங்களைச் சரிசெய்ய முயற்சிக்கும் போது இருப்பதைக் காட்டிலும் நம்முடைய முழங்கால்கள் பெலப்பட்டு, மகிழ்ச்சியுடனும், அதிக நம்பிக்கையுடனும், கர்த்தருடனான உறவிலும், ஐக்கியத்திலும் அதிக நெருக்கத்துடனும் காணப்படும்." R. 1999, c.2, p.5.

---

**"நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்." சங். 34:18.**

"வீடுகளும், நிலங்களும், கவனமாக சேமித்து வைக்கப்பட்ட

உடமைகளும் மாவட்ட அதிகாரியின் ஆணையினால் பறிமுதல் செய்யப்படலாம். நெடுங்காலமாய் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருந்த நண்பர்கள் திடீரென மனமிரக்கமற்று போய், உங்களுக்கு தங்கள் முதுகை காட்டுகிறவர்களாக ஆகிவிடலாம், ஏன், உங்கள் சத்துருக்களாகக் கூட மாறிவிடலாம். நீங்கள் நேசிக்கும் குடும்பம் சிலசமயம் பிரியலாம், குடும்பத்தினர் சிதறடிக்கப்படலாம் அல்லது குடும்பத்தில் மரணம் சம்பவிக்கலாம். குடும்பம் எனும் பீடத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அன்பு விட்டு, விட்டு, எரிந்து, மங்கியோ அல்லது அணைந்தோ போகலாம். எத்தனை பேர்களுடைய வாலிபத்தின் மற்றும் ஆரம்ப கால ஜீவியத்தின் உயர்வான குறிக்கோள்கள் ஒரு சில வருடங்களிலோ அல்லது மாதங்களிலேயே சாம்பலாகிப் போய் விடுகின்றது. இவர்கள் (அனைவரையும்) தங்கள் பாரங்களையும், தங்கள் நொறுங்குண்ட இருதயங்களையும் கர்த்தரிடத்தில் கொண்டு வரும்படி அழைக்கப்படும் போது, இத்தகையவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தையானது விசேஷித்த ஆற்றலோடு மனதை தொடுகின்றதாய் இருக்கும். (மேற்கூறிய வசனத்தைப் பார்க்கவும்). ஜீவியத்தின் போராட்டத்தினால் வேதனையும், சோர்வும் அடைந்து, கிறிஸ்துவினிடத்தில் இளைப்பாறுதலுக்காகவும், ஆறுதலுக்காகவும், ஜீவனுக்காகவும் மற்றும் சுகத்திற்காகவும் வருகிறவர்களுக்கு அவருடைய அன்பும், அவருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களும் சுகமான கீலேயாத்தின் தைலம் போன்று இருக்கின்றது.'' R. 5862, c.1, p.3, 4.

---

**"நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்." சங். 34:19.**

"நம்முடைய அன்றாட வாழ்க்கையின் அனுபவங்கள் நமக்கு சில முக்கியமான திட்டங்களை வைத்திருக்கின்றன. இந்த அனுபவங்களை நாம் எந்த விதத்தில் ஏற்றுக்கொள்ளுகிறோமோ அதுவே முக்கியம். இதை நாம் பயன்படுத்தும் அடிப்படையில்தான் நம்முடைய ஒவ்வொரு நாளின் வளமை அல்லது பாதகமான நிலை மற்றும் சோதனைகள் நமக்கு ஆசீர்வாதத்தை அல்லது சாபத்தைக் கொண்டு வருகின்றது. . . . துன்பங்கள் மற்றும் ஆழ்ந்த கவலைகள் வரலாம், சில சமயம் தொடர்ச்சியாகக் காணப்படும், வெள்ளம்போல வரலாம்—ஆனால், நமக்கு கர்த்தர் அளிக்கும் ஒவ்வொரு அனுபவங்களிலும் அவர் கூடவே இருக்கிறார், நமக்கு பெலனாகவும் இருக்கிறார். எந்த ஆத்துமா

துன்பம் மற்றும் இன்னல்களால் நெறிமுறைப்படுத்தப்படவில்லையோ, அந்த ஆத்துமா கர்த்தருடைய அன்பு மற்றும் உதவியின் மகிழ்ச்சி மற்றும் மதிப்பை இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். துயரமும், நசுக்குகின்ற வருத்தமும் நிறைந்த காலங்களில், நாம் கர்த்தரை நெருங்கிச்சேருகின்ற அந்த வேளைகளில்தான் அவர் நமதண்டைக்கு விசேஷமாக நெருங்கிச்சேருகிறார்." R.5802,c.1,p.4,6.

---

**"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." சங். 37:4, 5.**

"கர்த்தரிடத்தில் நீடித்த நம்பிக்கையும், நம்முடைய ஜீவியத்தில் நம் விண்ணப்பங்களுக்கான அவருடைய அநேக வழிநடத்துதல்களும் விலையேறப்பெற்ற தனிப்பட்ட உறவாகவும், நெருக்கமாகவும் முதிர்ச்சி அடைகையில், அவரிடத்தில் மனமகிழ்ச்சியாயிருக்க நாம் கற்றுக்கொள்வோம். . . . அப்பொழுது நம்முடைய பாதை எவ்வளவு இருளாக இருப்பினும், . . . தெய்வீக பாதுகாப்பு பற்றின எண்ணம் நம்மோடு என்றென்றும் காணப்படும் . . . இவர்களுக்கே அவர் முற்றிலும் அழகுள்ளவராய் இருக்கின்றார். அவருடைய பிரமாணம் அவர்களின் மகிழ்ச்சியாய் இருக்கின்றது. அவருடைய தோழமையும், அன்புமே அவர்களின் ஜீவனாக இருக்கின்றது. இவ்விதமாக இருதயம் தேவனிடத்தில் மையம்கொண்டிருந்தால், இருதயத்தின் வழிகளை, அவரிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடுவதே இயல்பாக இருக்கும் . . . நிச்சயமாக இவர்கள் தங்கள் இருதயத்தின் வேண்டுதல்களைப் பெற்றுக்கொள்வார்கள். மேலும், எந்த நல்ஈவுகளும் இவர்களுக்கு விலக்கப்படுவதில்லை."R.5803,c.2,p.2,3,5.

---

**"நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்." சங். 37:23.**

"இந்த வாக்குத்தத்தத்தையும் மற்றும் இதை போன்ற வாக்குத்தத்தங்களையும் விசுவாசத்தினால் சரியாகப் பற்றிக்

கொள்ளாததே, அநேக கர்த்தருடைய ஜனங்களின் பெலவீனத்திற்குரிய காரணமாய் உள்ளது. காரணம், எந்த அளவிற்கு அவர்கள் இந்த விசுவாசம் பெற்று, இந்த வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொள்கிறார்களோ, அந்த அளவிற்கு அவர்கள் அதினால் உற்சாகமூட்டப்பட்டு, இலக்கை நோக்கி தொடர்வதற்கு தைரியமூட்டப்படுவார்கள்.” R. 3157, c.1, p.1.

“இந்த வழி, முட்கள் நிறைந்ததாகவும், இடுக்கமானதாகவும், கரடுமுரடாய் இருப்பினும் இவர்கள் தேவனுடைய ஞானம் மற்றும் அன்பின் மேல் நம்பிக்கை கொண்டிருப்பதினாலும், தங்களிடத்தில் கிரியை ஆரம்பித்தவர் அதை முடிப்பார் என்றும், அவர்களின் நன்மைக்கு எனத் தெய்வீக ஞானமானது காணும் அனுபவங்களினால் தங்களை ஆசீர்வதிப்பார் என்ற நம்பிக்கையினாலும், இந்த வழியில் மகிழ்ச்சி அடையலாம்.” R. 2762, c.2, p.4.

---

**“அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.” சங். 37:24.**

“இதைக் கவனிக்கத் தவறக்கூடாது—சில சமயம் தேவனுடைய பிள்ளைகள் தடுக்கி விழுந்தாலும் அது முழுமையான வீழ்ச்சி அல்ல. ஏனென்றால், அவனுடைய கையை கர்த்தர் இன்னும் பிடித்திருக்கிறார்! எத்துணை ஆறுதலான எண்ணம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது! தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய பலவீனத்தினால் விழும்போது ஏற்படும் மன அழுத்தத்திலிருந்து அவர்களை விடுவிக்க இவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது. மனதில் வைக்க வேண்டிய முக்கியமான எண்ணங்கள்—நான் இன்னும் கர்த்தருடையவன்தானா? நான் இன்னும் அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீது விசுவாசம் வைக்கிறேனா? நான் இப்பொழுது கர்த்தருக்கும் அவருடைய நீதியின் வழிகளில் செல்ல தத்தம் செய்த நிலையில் உள்ளேனா? இந்தக் கேள்விகளுக்கு நம்மில் உறுதியான பதில்கள் இருக்குமாயின், நாம் இன்னும் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளலாம், நமது கரங்கள் அவருடைய கரங்களில் இருப்பதையும், புது சிருஷ்டியாக ஜெநிப்பிக்கப்பட்ட நிலை . . . இன்னும் அழியவில்லை என்பதையும் உணரலாம். நாம் எதினால் தடுக்கி விழுந்தோம் என்பதை கண்டு உணர்ந்து, எவ்வளவு சீக்கிரமாக எழும்ப முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாய் எழும்ப வேண்டும் என்றுதேவன் சித்தம் கொண்டுள்ளார். எந்த இடர்பாடுகள் மற்றும் சோதனைகள் நம்மை விழ நடத்தியது

என்பதை கவனிக்க வேண்டும். எதிர்காலத்தில் நாம் விழாதபடி நம்முடைய குணங்களை அந்த இடர்பாடுகளிலிருந்து பாதுகாத்து, பலப்படுத்திச் செல்ல வேண்டும்." R. 3157, c.2, p.1.

---

**"நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை." சங். 37:25.**

"'கர்த்தரை நம்பி நன்மை செய்; நிச்சயமாய் நீ போஷிக்கப்படுவாய்'. . . . இந்த வாக்குத்தத்தங்கள் நிச்சயமானவைகளே. மேலும் நன்மை செய்யும்போதும், நம்பிக்கைக்கொள்ளும்போதும் நாம் களிகூர வேண்டும். இவ்வாக்குத்தத்தம் உங்களுக்கு வியாபாரத்தில் பிரச்சனைகள், தொந்தரவுகள், ஏமாற்றங்கள் மற்றும் சோர்வுகள் இருக்காது என்று பொருள்படுவதில்லை. இந்த அனுபவங்கள் உங்களுடைய கிறிஸ்துவ குணலட்சணங்களாகிய—சாந்தம், பொறுமை, சகோதர சிநேகம்,—அன்பு ஆகியவற்றில் வளர்வதற்கு உங்களுக்கு அவசியமானவைகளே. சாறிபாத் ஊரின் விதவைக்கு நடந்தது போன்று உங்களுடைய ஆகாரமும், எண்ணெயும் குறைந்து போகலாம். ஆனாலும், தேவன் அதை அறிவார். மேலும், ஒருவேளை நீங்கள் அவரை நம்பி, உங்களால் முடிந்ததைச் செய்தால், இவைகளோடுகூட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் சேர்த்துக் கொடுப்பார். நமக்கு தேவையானவைகளை கர்த்தர் நம்முடைய சொந்த வேலையின் மூலமாகவோ அல்லது நண்பர்களின் தயவினாலோ அல்லது மற்றவர்களின் உதவி மூலமாகவோ அருளுவார். முன்குறிப்பிட்ட ஆவிக்குரிய விஷயங்கள் வாஞ்சிக்கப்பட வேண்டும், நாடப்பட வேண்டும். பின்னர் குறிப்பிடப்பட்ட மாம்சீக விஷயங்களோ வெறுக்கப்பட அல்லது புறக்கணிக்கப்பட வேண்டும். இவ்விதமான முறைகள் எதுவும் தர்மம் வாங்குவதாகாது. அன்புடன் வழங்கப்பட்ட உதவிகளை ஏற்றுக்கொள்வது, தர்மம் கேட்பதாகாது."
R. 2021, c.2, p.2.

---

**"குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்." சங். 45:10,11.**

"மிக நேர்த்தியானதும், அழகானதுமான சொல் நடையில்

இதுவரை திருமண கோரிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளதா? பிரம்மிப்பில் அதை மீண்டும் மீண்டுமாக நான் வாசித்தேன். இதன் அர்த்தமாவது: நான் இராஜாதி இராஜாவால் அவருடைய இராஜரீக குமாரனுக்கு—அவருடைய ஒரே பேறான குமாரனுக்கு, சகலத்திற்கும் சுதந்தரவாளியானவருக்கு மணவாட்டி ஆகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றேன். மேலும், அவருடைய நீதியினால் கொடுக்கப்பட்ட வஸ்திரமானது, என்னுடைய சொந்த வஸ்திரத்தின் அநீதிகளை மறைத்து மூடினபடியால், இராஜாவின் கண்களில் நான் உண்மையில் அழகுள்ளவளாகக் கருதப்படுகின்றேன். மேலும், நான் என் சொந்த ஜனங்களையும் என்னுடைய தகப்பன் (ஆதாமின்) வீட்டையும்— உலகத்தையும் அதன் நம்பிக்கைகளையும், நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அவருக்காக மறக்க நான் விருப்பமுள்ளவளாய் இருந்தால்—என்னை அவருடைய மணவாட்டியாக்கிக்கொள்ள அவர் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் என்று என்னிடம் கூறப்பட்டுள்ளது."R. 1494, c.2, p.5.

---

**"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், நாம் பயப்படோம்." சங். 46:1, 2, 3.**

"கர்த்தருக்கு உண்மையாய் இருப்பவர்கள் இந்த வசனத்தை ஆறுதல் அளிக்கிறதும், தாங்குகிறதுமான வல்லமையாக மனதில் கொள்ளவேண்டும். இது புதிய ஏற்பாட்டில் உள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு முழு இசைவுடன் காணப்படுகின்றது. அதாவது, 'அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய், தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்' என்பதேயாகும்."
R. 3232, c.2, p.2.

---

**"கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாட வொட்டார்." சங்.55:22.**

"நம்மில் அடித்து உருவாக்கப்பட வேண்டிய குணலட்சணங்கள் உண்டு. இவைகளை வாழ்க்கையின் கடுமையான அனுபவங்களே சாத்தியப்படுத்தும். உதாரணமாக, சில சமயங்களில், நம்மை திணறச் செய்கிற பிரச்சனைகளை எதிர்கொள்ள அனுமதிக்கப்படுவோம். அப்படி அனுமதிக்கப்படாவிட்டால், நம்முடைய சொந்த புரிந்து

கொள்ளுதலின் மேல் அதிகமாய்ச் சார்ந்து நிற்பவர்களாகவே இருந்திருப்போம். 'அதிகமாய் அலைக்கழிக்கும் விஷயங்களைச் சந்திப்பதற்கு நாம் அஞ்சி' மனபாரத்தில் இருக்கும் போதுதான், 'கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்' என்று அன்பாக கூறினவரிடம் நாம் வந்து, நமக்காக பொறுப்பேற்றுக் கொள்ளும்படியாக அவரிடம் கேட்டுக்கொள்வோம். நம்முடைய மாம்ச கரம், நம்மை ஒருபோதும் தோல்வியடையச் செய்யாமலும், நம்முடைய ஏமாற்றங்கள் கர்த்தருடைய செட்டைகளின் நிழலை நாடுவதற்கு நம்மை நடத்தாமலும் இருக்குமேயெனில், அந்த மாம்ச கரத்தின் மேல் நாம் அதிக நம்பிக்கை வைக்க நேர்ந்திருக்கும். ஒருவேளை நம்மிடமுள்ள சிறிதும் (அ) அதிகமான பூமிக்குரிய உடைமைகளை திருடன் கொள்ளையடிக்காமலும், பூச்சியும், துருவும் அவைகளை கெடுக்காமலும் இருந்திருக்குமேயெனில், நிலையற்ற ஐசுவரியங்களின் மீது நம்பிக்கை வைப்பதற்கு ஏதுவாய் இருந்திருக்கும். ஒருவேளை நம்முடைய பூமிக்குரிய நட்புகளும், அன்புக்குரியவர்களும் நம்மை கைவிட்டு, தேவனுடைய ஆறுதலின் இனிமையை உணர்ந்துகொள்ளத்தக்கதாக அவர் மாத்திரமே நமக்கு உண்டு எனும் நிலை ஏற்படவில்லையெனில், நாம் பூமிக்குரிய நட்புகளிலும், அன்புக்குரியவர்களிடத்திலும் திருப்தியடைந்திருந்திருப்போம்."
R. 2130, c.1, p.2.

---

**"நானோ உம்முடைய வல்லமையைப் பாடி, காலையிலே உம்முடைய கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன்; எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர்." சங்.59:16.**

"தேவனுடைய, 'தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்' கூட்டிச்சேர்க்கப்படும் தேவனுடனான இந்த நெருக்கமே அவர்களின் பாதுகாப்பிற்கான ஆதாரமாகும். இந்த அரணிலிருந்து, இந்தக் கோட்டையிடமிருந்து, இந்தப் பலமுள்ள மாபெரும் பாதுகாப்பு கோட்டையிலிருந்து எவ்வளவாய் விலகி இருக்கிறார்களோ, அவ்வளவாய் அவர்களுக்கு ஆபத்தும் காணப்படும். . . . நமது கர்த்தர் கடந்துபோன காலங்களைக் காட்டிலும் தற்காலத்தில் நடைமுறையிலேயே சகல பூமிக்குரிய விஷயங்களைக் கண்காணிப்பதில் தலைமை ஏற்றுள்ளார். . . . ஓ! இந்தக் கருத்தை

நம்முடைய மனங்களில் நேர்த்தியாய் பதிய வைக்க வேண்டும். மேலும், அறுவடை காலத்தில் ஏற்கனவே கடந்துள்ள முப்பத்து நான்கு வருடங்களில் சபையினிடத்திலான அவருடைய கிருபையினை நாம் பார்க்கவில்லையா? மேலும், அவருடன் நிச்சயிக்கப்பட்டவர்கள் முழுமையடைவதற்கு ஏதுவான விஷயங்களில் உள்ள அவருடைய தொடர்ச்சியான மேற்பார்வையையும் நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோமா? 'நம்மில் நற்கிரியையை ஆரம்பித்தவர் அதை நிறைவேற்றவும் வல்லமையுள்ளவராக இருக்கின்றார்.' . . . 'இதுவரையிலும் நம்மை வழிநடத்தினவர், இன்னும் நம்மை நடத்துவார், அமைதலுடன் இருந்து அவருடைய சித்தத்திற்குள்ளாக மறைந்துவிடுங்கள்.'" R. 4379, c.2, p.2, 4.

---

**"ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது; என் உதடுகள் உம்மைத்துதிக்கும்." சங். 63:3.**

"தற்கால ஜீவியத்தை நேசிப்பவர்கள், தங்களுடைய உதடுகளை மூடிக்கொண்டு, அவருடைய அன்பைக்குறித்து பேசுவதை தவிர்த்துவிடுவார்கள். ஆனால், தங்கள் உடன்படிக்கையில் உண்மையுள்ளவர்களும், 'ஜீவனைப் பார்க்கிலும் உமது கிருபை நல்லது' என்று உணர்ந்து கொண்டவர்களுமே பூமிக்குரியவைகள் எல்லாவற்றையும், எதையும் இழந்து அவருக்கு துதி செலுத்துவார்கள்." R. 2853, c.1, top.

"**பூமிக்குரிய ஜீவனைப் பார்க்கிலும்** தேவனுடைய அன்பான கிருபையே **நல்லது** என்று நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இல்லையெனில், நாம் அவருக்கு உரியவர்களாகவும், அவரைத் தேடுகிறவர்களாகவும் இருக்கமாட்டோம். . . . தேவனுடனான ஐக்கியத்தையும் மற்றும் இது தொடர்பான நித்தியத்திற்குரிய நம்பிக்கைகளையும், நாம் பூலோக சிநேகத்தோடும், குடும்ப பந்தங்களோடும், பூலோக குறிக்கோள்களோடும், சந்தோஷங்களோடும் ஒப்பிட்டுப்பார்க்க ஆரம்பிக்கையில், பூமிக்குரிய அனைத்துமே முக்கியத்துவம் அற்றதாகவும், சுத்தமான பொன்னோடு ஒப்பிடுகையில் தூசியாகவுமே உள்ளது. இக்கண்ணோட்டத்தில் நாம் மகிழ்ச்சியோடு சகலத்தையும் துறந்து, தேவனுடைய கிருபைக்காக ஜீவனையே கையளிக்கிறவர்களாகி விடுவோமாக." R. 2852, c.1, top.

**"உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்." சங். 73:24.**

"எவ்வளவு ஆச்சரியமாக கர்த்தர் தம்முடைய ஜனங்களை வழிநடத்தியுள்ளார்! அவருடைய பிள்ளைகளின் மீதே தொடர்ந்து அவருடைய கவனம் இருந்தது. எந்த நன்மையான விஷயங்களையும் அவர் அவர்களுக்குத் தடுப்பதில்லை. மேலும், அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தால் சகலமும் அவர்களின் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படிக்கு ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. கர்த்தரை வருடக்கணக்காகவும், வெயிலிலும், நிழலிலும், மகிழ்ச்சியிலும், கண்ணீரிலும், அமைதியான தண்ணீர்களிலும், மழையோடு கூடிய கடும்புயலிலும் நம்பின யார்தான் அவருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தின் உண்மை தன்மையையும், அவருடைய உறுதியான உண்மையையும் உணர்ந்துகொள்ளாமல் இருந்தார்கள்!"
R. 5538, c.1, p.8.

"மிகுந்த ஞானமுள்ளவரான ஒரு தேற்றரவாளன் இருக்க வேண்டியதை நாம் வரவேற்கிறோம். மிகச்சிறந்த பூமிக்குரிய ஆலோசனையாக இருப்பினும் அது, தெய்வீக ஆலோசனையால் வழிநடத்தப்பட்டிருக்கும் அளவிற்கே மதிப்புள்ளதாக இருக்கும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம் . . . இதற்கும் அதிகமாக . . . இந்த ஆலோசனை நமக்குப் போதுமானதாக இருந்து இறுதியில் இதற்கு செவி சாய்ப்பதின் மூலம் பந்தய சாலையின் முடிவில் கிடைக்கும் நித்திய பரிசை நாம் சென்றடைவோம் என்கிற நிச்சயம் இருக்கிறது."
R. 2240, c.1, p.5.

---

**"என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்." சங். 73:26.**

"நம்முடைய அருமையான கர்த்தரின் விஷயம் போன்று, பாரமான சோதனை வேளைகளில் இருளானது நம்பிக்கையின் நட்சத்திரங்களை மறைத்துப் போடத்தக்கதாக, ஆத்துமாவை ஆழமாய் மறைத்துவிடுவது உண்மையே; என்றாலும், கர்த்தர் போன்று நாம் பிதாவாகிய தேவனுடைய சர்வவல்லமையுள்ள கரங்களைப் பற்றிப்பிடித்து, 'ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்று தாழ்மையுடன் கூறுவோமேயானால், அவருடைய கிருபை என்றும் போதுமானதாய் இருக்கும். மேலும், சங்கீதக்காரனோடு சேர்ந்து நாமும், 'என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாய்

இருக்கிறார்' என்று கூற இயலும். மேலும், கர்த்தரோடு சேர்ந்து நம்முடைய இருதயமும்—'என் பிதா எனக்கு அருளின பாத்திரத்தில் பானம் பண்ணாதிருப்பேனோ?' என்று கூறும்." R. 1802, c.2, top.

---

**"தேவனாகிய கர்த்தர் சூரியனும், கேடகமுமானவர்." சங். 84:11.**

"கிறிஸ்துவின் அங்கங்களுக்கும், அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுக்கும், பிரியமான வகுப்பினர்களுக்கும், தாவீது வகுப்பாருமானவர்களுக்கு நம்முடைய ஆதார வசனம் மாபெரும் உற்சாகமூட்டுதலாகும். இவர்களுக்கு தேவனாகிய கர்த்தர் சூரியனும், கேடகமுமாயிருக்கின்றார். அவர் அவர்களை பிரகாசிப்பிக்கச் செய்வதோடு மாத்திரமல்லாமல், அவர் அவர்களுக்கு அருளும் ஆசீர்வாதங்களினால், அவர்கள் பாதிப்பிற்குள்ளாகாதபடிக்கும் அவர்களைப் பாதுகாக்கின்றார். அவர்களின் சகல சத்துருக்களிடமிருந்தும், எந்த விதத்திலும் அவர்களைப் பாதிப்புக்கு உள்ளாக்கும் எல்லாவற்றிலிருந்தும் அவர்களைப் பாதுகாப்பார். மேலும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும். இத்தகைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தத்துடன் நாம் சந்தோஷத்தோடும், நம்பிக்கையோடும் உண்மையுள்ளவர்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள மகிமையான பலன்களில் பங்கடையும் நம்பிக்கையோடும், எதிர்காலத்தை நாம் நோக்கக்கடவோமாக." R. 4219, c.2, p.4.

---

**"என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்." சங். 89:34.**

"கர்த்தர் போன்று ஒவ்வொரு விஷயத்திலும் பிரதிபலிக்கவும், அவரை ஒத்த முழுமையான குணலட்சணங்களை அடையும்படி நாடுகையில், இந்த வசனத்தின் படிப்பினையை, அதாவது, தம்முடைய பொருத்தனைகளில் தேவன் உண்மையுள்ளவர் என்பதை இப்பொழுது விசேஷமாக நம்முடைய மனதில் கொள்வோமாக; மேலும், கர்த்தர் தம்மைக் குறித்து, 'என் உடன்படிக்கையை மீறாமலும், என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன்' என்று கூறினது போன்று, நாமும் நம்முடைய உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் குறித்ததான விஷயங்களில் நம்மை குறித்துச் சொல்லத்தக்கதாக—அவருடைய சாயலிலும், இந்தப் பண்பிலும், அவருடைய உதவியினாலும்,

கிருபையினாலும் அன்றாடம் வளருவோம் என்று அவருடைய ஜனங்களாகிய நாம் தீர்மானம் எடுப்போமாக." R. 3109, c.2, p.2.

---

**"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில்தங்குவான்." சங்.91:1.**

"உன்னதமானவராகிய நேசமானவரின் இந்த மறைவிடமானது, ஆசீர்வாதமான சிலாக்கியமாகிய ஜெபத்தின் மூலமாகவும், அவருடைய விலையேறப்பெற்ற வார்த்தைகள் மீதும், அவர் வாக்களித்துள்ள முன்னேற்பாடான பராமரிப்பின் மீதும் உள்ள விசுவாசத்தின் மூலமாகவும் தேவனோடு கொள்ளும் நெருக்கமான ஐக்கியம் மற்றும் உறவைக் குறிக்கின்றது. . . . ஆ, இந்த மறைவிடம் எத்துணை விலையேறப்பெற்றது! முழு உலகத்தையும் இப்பொழுது மேற்கொண்டிருக்கிற அமைதியின்மையின் மத்தியில் நாம் எத்துணை இளைப்பாறுதலையும், புத்துணர்வையும் பெற்றுள்ளோம். . . . இங்கு, உலகம் நமக்கு அளிக்க முடியாததும், எடுத்துப்போட முடியாததுமாகிய இளைப்பாறுதலையும், சமாதானத்தையும், வெளிச்சத்தையும், சந்தோஷத்தையும் நாம் கண்டடைகிறோம்." R. 1788, c.1, p.2, 3.

"நிழலான ஆசரிப்புக்கூடாரத்தை மூடியிருக்கும் மேகம் கர்த்தருடைய பிரசன்னத்தையும், பாதுகாப்பையும் அடையாளப்படுத்தும் காரியம்—'சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்' என்பதற்கு நிழலாய் இருக்கின்றது." R. 1913, c.2, p.1.

---

**"நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்."சங்.91:2.**

"நம்முடைய நம்பிக்கையை நாம் உறுதியாய்க் காக்க வேண்டும். காரணம், இது தேவன் நம்முடைய பிதா என்று நமக்கு உறுதியளிக்கின்றது. கடலிலும், நிலத்திலும் வியக்கத்தக்க விதத்தில் இப்பொழுது பயன்படுத்தப்படும் கம்பியில்லா தந்தி மூலம் செய்தி அனுப்பும் முறை (Wireless telegraphy) நாம் அனைவரும் ஓரளவிற்கு அறிந்த விஷயமே. மேலும், இந்தக் கம்பியில்லா செய்தி தொடர்பு முறையானது, உண்மையான கிறிஸ்தவனுக்கும், பரலோகத்தின் கர்த்தருக்கும் இடையிலான செய்தி தெடர்புக்கான சிறு மாதிரியே ஆகும். ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் இந்த நம்பிக்கையானது,

கர்த்தர்மேல் சார்ந்து, அவரை நோக்கிப் பார்க்கும் தகப்பனுக்கும், பிள்ளைக்கும் இடையே கம்பியில்லா தொடர்பு பரிமாற்றம் காணப்படும்." R. 5595, c.1, p.6.

---

**"அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளைநோய்க்கும் தப்புவிப்பார்." சங். 91:3.**

"நம்பிக்கையின்மை என்னும் கொள்ளைநோய் ஒளிந்து மறைந்து பின்தொடர்ந்துக் கொண்டிருக்கிறது." R. 844, c.1, p.6.

"ஒவ்வொரு தப்பறைகளும் தெளிவற்ற தன்மைகளைக் கொண்டுள்ளது; மேலும், சில உண்மைகளுக்கு இடையூறாகவும் இருக்கின்றது; தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைகளும் சத்தியத்தின் சகல கவசங்களையும்—தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களையும் தரித்துக்கொள்வதற்கு அவசியமான காலக்கட்டத்தில் இப்பொழுது நாம் வந்திருக்கிறோம். தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களைத் தரித்திராத எவனும், இந்தப் 'பொல்லாத நாளில்' அதாவது, இந்தச் 'சோதனை காலத்தில்' தப்பறைக்குள் விழுவது நிச்சயமே. . . . மேலும், 'நியாயத்தீர்ப்பானது முதலாவது தேவனுடைய வீட்டில் துவங்க ஆரம்பிக்க' வேண்டியதாயிருக்கின்றது. யாரால் நிலைநிற்கக் கூடும்? விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் மற்றும் தேவனுடைய வார்த்தைகளில் உள்ள முக்கியமான உபதேசங்களின் அடிப்படையில், 'மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் தங்களை உறுதிப்படுத்திக் கொள்கிறவர்களைத்' தவிரவேறு எவராலும் நிற்கக்கூடாது."
R. 5801, c.2, p.4.

---

**"அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்." சங். 91:4.**

"நம்முடைய பரம பிதாவின் அன்பும், பராமரிப்பும், பாதுகாப்புமே அவருடைய செட்டைகளாக, சிறகுகளாக நம்மைச் சகல தீங்குகளிலிருந்தும் மறைத்து, நம்மைச் சுகத்துடனும், பாதுகாப்புடனும் காக்கின்றது." R.5438, c.2, p.1.

"ஆம், அவருடைய சத்தியம்—யுகங்களைக் குறித்த தெய்வீக

திட்டத்திற்குள் உள்ளடங்கியுள்ள மாபெரும் சத்தியமானதை எளிமையான இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதற்கு உண்மையாய் இருக்க முயற்சிப்பவர் யாவருக்கும் இது மாபெரும் பரிசையாகவும், கேடகமாகவும் இருக்கும். இதுவே தேவனுடைய ஆயுதவர்க்கமாகும்." R. 3332, c.1, top.

"தற்போது முன்வைக்கப்படும் ஒவ்வொரு தவறான நிலைபாடுகளுக்கும் எதிரான கருத்துக்களைப் பெற்றிருக்கும் ஒவ்வொரு சத்தியமும், அறுவடை சத்தியத்தின் வெவ்வேறு அம்சங்களுமே தேவனுடைய பாதுகாக்கும் வல்லமையாகும். இதன் மூலம், அவருடைய உத்திரவாதத்திற்கு ஏற்ப உண்மையான 'கிறிஸ்துவினுடைய சரீரத்தின்' 'பாத' அங்கங்களை இடறச்செய்யாது என்பதை நாம் அறிவோம்." R. 3444, c.2, p.1.

---

**"இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்."சங். 91:5, 6**

"தீர்க்கதரிசியான தாவீது, அம்புகளும், கொள்ளைநோய்களும், இடறுதலுக்கு ஏதுவான விஷயங்கள் முதலியவைகளுடைய நம் நாட்களைக் குறித்து விவரிப்பதையும், நம்முடைய பக்கத்தில் ஆயிரம் பேர் விழுவார்கள் என்று கூறுவதையும் (அறிவிப்பதையும்) நினைவில் கொள்ளுங்கள். ஆனாலும் கர்த்தர் தமக்கு சொந்தமானவர்களை, தாம் தெரிந்துகொண்டவர்களை—தங்களுடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்ளுகிறவர்களை காத்துக்கொள்வார் என்ற கர்த்தருடைய நிச்சயமான வாக்குத்தத்தங்களையும் நாம் மறந்துவிடக் கூடாது. . . . மறைத்து பாதுகாக்கப்படுபவர்கள்—வெளியரங்கமாக மாத்திரமல்லாமல் தங்களுடைய இருதயபூர்வமாகவும் கர்த்தரோடு மிகவும் நெருங்கி ஜீவிக்கிறவர்களாய் இருப்பவர்கள் ஆவார்கள். தெரிந்துகொள்ளப்பட்ட இவர்கள், தங்கள் பாதங்கள் இடறலின் கற்கள் மீது மோதிவிடப்படாமல், தெய்வீக ஆணையின் கீழ் இயங்கும் பிதாவாகிய தேவனுடைய பிரதிநிதிகளால் தாங்கி, மேலே உயர்த்தப்படும்படிக்கு, இவர்களுக்காக தேவன் தம்முடைய ஊழியர்களுக்குக் கட்டளையிடுவார் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கின்றனர்." (சங்கீதம்91) R.4438,c.2,p.5.

**"உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது." சங். 91:7.**

"நாம் நினைவில்கொள்ள வேண்டியதாவது, இவ்வாக்குத்தத்தம் கர்த்தரையும், உன்னதமானவரையும் தங்களின் அடைக்கலமாகவும், தாபரமாகவும் கொண்டிருக்கும் குறிப்பிட்ட வகுப்பாருக்கே உரியதாகும்." R. 4167, c.2, bottom.

"நாம் காயப்படப் போகிறவர்களையும், விழப்போகிறவர்களையும் . . . உலகத்திற்குரியவர்கள் என்று எண்ணப்படாமல் மாறாக, சபையின் நண்பர்கள் என்றும், சபையுடன் நெருங்கிய உறவு கொண்டவர்கள் என்றும் எண்ண வேண்டும். உலகம் தெய்வீக கிருபையினின்று விழுந்துபோவது என்பது கூடாதகாரியம். காரணம், அது தெய்வீக கிருபையை அடையவே இல்லை. . . . இவ்வசனம் உண்மையில் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கு அல்லது பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டது போன்று பாவனையான நிலையில் இருப்பவர்களுக்கு, அதாவது உதாரணமாக, கோதுமை மணி போன்று பாவிக்கும் களைகளுக்கே பொருத்தமாய் உள்ளது. . . . ஒரு பக்கத்தில் ஆயிரம்பேரும், வலது புறத்தில் பதினாயிரம்பேரும் விழுவதற்கு இடையில் வித்தியாசம் உள்ளது. நாம் நிதானிப்பது என்னவெனில், ஆயிரம்பேர் என்பது, முழுமையான அவிசுவாசத்திற்குள் விழுபவர்களையும், பதினாயிரம்பேர் என்பது, தங்களுடைய வஸ்திரத்தை வெண்மையாய் தோய்த்துக்கொள்ளும்படி தங்களை சுத்திகரித்துக்கொள்ள மகா உபத்திரவத்திற்குள் பிரவேசிக்கிற 'திரள்கூட்டத்தினரையும்' குறிக்கும். இவர்கள் பாபிலோனோடு அவளுடைய பாவங்களில் பங்குகொள்கிறவர்களாகக் காணப்பட்டு, அவளுடைய மாபெரும் விழுகையிலும் பங்குகொள்வார்கள். . . . கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், தேவனுடைய நேச குமாரனின் சாயலாய் இருப்பவர்கள் மாத்திரமே அவருக்குள் முழுமையாக நிலை நிற்க முடியும்." R. 4926, c.1, p.5; c.2, p.1.

---

**"எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய்." சங். 91:9.**

"இது பரிசுத்தவான்களுக்குரிய பாதுகாப்பைக் குறித்ததான ஒரு குறிப்பை நமக்கு அளிக்கின்றது. இவர்களுடைய பலமானது,

தற்காலத்தைக் குறித்ததான அப்போஸ்தலரின் எச்சரிப்புகளுக்கு இவர்கள் **செவிசாய்ப்பதில்** அதிகரிக்கும். ஆகவே, எதிராளியானவனின் தந்திரங்களுக்கு எப்படி ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்வார்கள். இவ்விதமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கர்த்தருடன் மிக இசைவாகவும், அவருடைய வார்த்தையின் ஆவியினால் மிகவும் நிரப்பப்பட்டவர்களாகவும், இந்த அறுவடையில் அறுவடை ஊழியருக்குரிய தங்களுடைய சிலாக்கியங்களினால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், சத்தியத்திற்காகவும் அதன் ஊழியங்களுக்காகவும் தங்களுடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்க மிகவும் உந்தப்பட்டவர்களாயும் இருப்பவர்களானபடியினால், எதிராளியானவனின் இவ்விதமான கண்ணிகள் மற்றும் மாய்மாலங்களில் எதுவும் . . . இவர்களுக்கு விசேஷமான ஈர்ப்புக்களாக இருக்கமாட்டாது." R. 2770, c.2, p.4.

---

**"ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது." சங். 91:10.**

"புது சிருஷ்டிகளுக்கு - பொல்லாப்பு நேரிடாது." R. 4767, c.1, p.3.

"ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களில் இரண்டு வகுப்பார் இருக்கின்றனர் என்பதை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். மேலும் நம்முடைய ஆதார வசனம், இந்த வகுப்பாரில் ஒரு வகுப்பாரை மாத்திரமே குறிக்கின்றது. . . . இவர்கள் தங்களுடைய அன்பிலும், பக்தியிலும் எவ்வித குறைவும் காட்டவில்லை; இவர்களுடைய மாம்சீக விஷயங்களில் விபரீதங்கள் நிகழலாம். ஆனாலும், 'இவர்கள் மாம்சத்துக்கு உட்பட்டவர்களாயிராமல் ஆவிக்கு உட்பட்டவர்களாயிருப்பதை' நினைவுகூர்ந்து, எவ்விதமான வெளிப்புற தாக்கங்களும் புது சிருஷ்டிக்குரிய தங்களுடைய நன்மைக்கேதுவான விஷயங்களைக் கெடுக்க முடியாது என்றும், உண்மையாய் இருக்கும் பட்சத்தில் இராஜ்யத்திற்குரிய மகிமையை அடைவதிலிருந்து இவர்களைத் தடுக்கவும் முடியாது என்றும் உணர்ந்து கொள்வார்கள்....இந்த வகுப்பாருக்கும், இவர்களுக்கு நேரிடும் சகல விஷயங்களுக்குமே—'பொல்லாப்பு உனக்கு நேரிடாது' என்ற வாக்குத்தத்தமானது அருளப்பட்டுள்ளது. இரண்டு வகுப்பாரில், ஒரு

வகுப்பாருக்கு—'திரள் கூட்டத்தினருக்கு'—சில பொல்லாப்புகள் நேரிடும். அவர்கள் மகா உபத்திரவத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்." R. 4767, c.2, p.4, 5.

---

**"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்." சங். 91:11.**

"அறுவடை செய்தி (சத்தியம்) தேவனுடைய காக்கும் வல்லமையாக உள்ளது." R. 3441, c.2, p.1.

"சகல 'பாத' அங்கங்களுக்கும் மிகவும் உதவியாய் இருக்கும் செய்தியாளர்களையும், நிறுவனங்களையும் கர்த்தர் எழுப்பியுள்ளார் என்பதை நாம் நம்புகின்றோம். இந்த நிறுவனங்கள் பல வகையில் உள்ளன. தற்கால சத்தியத்தின் செய்திகளுடைய அச்சிடப்பட்ட பக்கங்கள் . . . கிறிஸ்துவின் 'பாத' அங்கங்களைக் கண்டடைந்தது, அவர்களைத் தாங்கும்படி பூமியின் சகல பகுதிகளுக்கும் சென்றுள்ளது. . . . அவர் இந்த நிறுவனங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவார். மேலும், முடிவுபரியந்தம் அவருடைய ஜனங்கள் பலப்படுத்தப்படுவார்கள். இவ்விதமாக ஒருவர் வழிநடத்தப்படவில்லை என்றால், இதன் அர்த்தம் என்னவெனில், அவர்களுக்குள் ஏதோ குறைவு உள்ளது என்பதேயாகும். நாம் ஒருவருக்கொருவர் **'உன்' வகுப்பாராக** இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். 'பொல்லாப்பு **உனக்கு** நேரிடாது.' இதன் அர்த்தமானது, நம்முடைய ஓட்டத்தின் முடிவுபரியந்தமும் தெய்வீக பாதுகாப்பு இருக்கும் என்பதேயாகும்." R.5817, c.2, top; and p.1.

---

**"உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்." சங். 91:12.**

"இந்தச் சங்கீதத்தின்படி, நாம் காண்பதென்னவெனில், இக்காலக் கட்டத்திலேயே 'பாத' அங்கங்கள் இடறுவதற்கு ஏதுவான விசேஷமான ஆபத்தில் இருக்கின்றார்கள். ஆகவே, இதினிமித்தம் விசேஷமான உதவியும் தேவைப்படுகின்றது. . . . நம்முடைய கர்த்தருடைய வந்திருத்தலும், அவருடைய வேலையும் யூத அறுவடையின்போது புரிந்துகொள்ளப்படவும் இல்லை, உணர்ந்துகொள்ளப்படவும் இல்லை. மேலும், இப்பொழுதும் இப்படியாகவே காணப்படுகின்றது.

முன்பில்லாத அளவு இப்பொழுது மிக தெளிவாகவும், பிரகாசமாகவும் காணப்படும் இந்த விஷயங்களும், வேதவாக்கியங்களில் உள்ள முக்கியமான சத்தியங்களும் உலகத்திற்கு இடறுதலின் கற்களாக இருக்கின்றது. ஆனால், உண்மையுள்ளவர்களுக்கும், விழிப்பாய் கவனிப்பவர்களுக்கும் ஆசீர்வாதங்களாக இருக்கின்றது. தேவனுடைய உண்மையான ஜனங்கள் இந்தப் படிக்கற்களில் ஏறுகையில், இன்னும் உயர்வான கண்ணோட்டத்திற்கு உயர்த்தப்பட்டு, இடறுதலிலிருந்து காக்கப்படுகின்றனர். இக்காலத்தில் ஈடுபலியின் உபதேசமும், போதகரின் இரண்டாம் வந்திருத்தலுக்கான ஆதாரங்களும் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்குச் சொல்ல முடியாத அநுகூலங்களாகும்." R. 5816, c.2, p.7; R. 5817, c.1, p.1.

---

**"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்." சங்.91:14.**

"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் (பிதாவாகிய தேவன் கூறுகின்றார்) அவனை (கொள்ளைநோய் முதலியவைகளிலிருந்து) விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் (உணர்ந்திருக்கிறபடியால்) அவனை உயர வைப்பேன் (கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரர் ஆகும்படிக்கு அவனை உயர்த்துவேன், 'இராஜரீக ஆசாரிய கூட்டத்தின்' ஓர் அங்கமாகவும், 'திவ்விய சுபாவத்தில் பங்காளியாகவும்' அவனை ஏற்படுத்துவேன்)." R. 3332, c.2, p.4.

---

**"அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்." சங்.91:15.**

"அவருடைய அன்பின் பராமரிப்புக் குறித்ததான இத்தகைய வாக்குத்தத்தத்திற்காக கர்த்தரைத் துதிப்போமாக! 'என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி!'" R. 3332, c.2, p.6.

"நாம் ஆபத்திற்குள் போகாதபடிக்கு, கர்த்தர் தடுக்கமாட்டார் என்பதே இங்கு கூறப்பட்ட கருத்தாகும். . . . உபத்திரவமானது நமக்கு

மிகுந்த நன்மை உண்டாக்குகிறதாய் காணப்படலாம். நம்முடைய உபத்திரவங்களில் கூட நாம் களிகூர வேண்டுமென, கர்த்தர் ஏற்கனவே தம்முடைய வார்த்தைகளில் நமக்கு கூறியிருக்கின்றார். . . . ஆகவே, நாம் ஆபத்திலிருந்து **தப்பித்துக்கொள்வோம்** என்று கர்த்தர் நமக்கு வாக்களிக்கவில்லை என்றாலும் ஆபத்தின் **போது** தமது பிள்ளைகளுக்கு, அவர்களின் உபத்திரவத்தின் மத்தியில் களிகூருவதற்கு உதவும் இருதயத்தின் ஆறுதலையும், தாங்கும் கிருபையையும் அளிப்பதாக அவர் வாக்களித்துள்ளார்." R. 5758, c.1, p.3; c.2, p.1.

---

**"நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது." சங். 97:11.**

"'சகோதர சகோதரிகளானவர்களில்' அனைவரும் ஒரு காலக்கட்டத்தில், 'தேவனுடைய **சர்வ** ஆயுதவர்க்கத்தையும்' தரித்துக் கொள்ளும்படியாக விழித்தெழுப்பப்படுவார்கள். . . . எவன் நித்திரையிலும் இருளிலும் விடப்பட்டு, இந்தப் பொல்லாத நாளில் 'நிற்பதற்கு' ஆயத்தமில்லாமல் காணப்படுகின்றானோ, அவனுடைய வேலை எதுவாக இருப்பினும், இருதயத்தை ஆராய்கிறவர், இவனை ஏற்றக்கால சத்தியத்தின் வெளிச்சத்திற்குப் பாத்திரவானாக கருதவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். 'நீதிமானுக்காக (சத்தியமும்) வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் (சத்தியத்தை உணர்ந்துகொள்ளுவதன் விளைவாக வரும் மகிழ்ச்சியும்) விதைக்கப்பட்டிருக்கிறது.'" R. 2453, c.1, p.4; R.3648, c.1, p.3.

---

**"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்." சங். 103:13, 14.**

"நம்முடைய சிறு விஷயங்களிலும் கூட காணப்படும் அவருடைய பரிவான பராமரிப்பின் மேல் முழுமையாக நம்பிக்கை கொண்டு, . . . பிள்ளைகள் போன்று அவரிடத்தில் நம்பிக்கைகொள்ள அவர் நம்மை அழைக்கின்றார்." R. 3161, c.2, p.1.

"தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட மற்றுமொரு வார்த்தையானது, நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிந்திருக்கிறார் என்பதையும், நாம் மண்ணென்றும்—பெலவீனர்களும், பூரணமற்றவர்களும், மரித்துக் கொண்டிருக்கிறவர்களும் என்று நினைவுகூருகிறார் என்பதையும் நமக்கு உறுதியளிக்கின்றது. மேலும், நாம் என்றென்றும் நம்முடனேயே போராடுவது—பூரணமற்ற சரீரத்திற்கு எதிராக பூரண சித்தம் போராடிக் கொண்டிருக்க வேண்டும் என்பது அவருடைய நோக்கமாயிராமல்; மாறாக, உயிர்த்தெழுதலில் நம்முடைய புதிய மனதிற்கு முழு இசைவாய் இருக்கும் புதியதும் பூரணமுடையதுமான சரீரங்களை நாம் பெற்றுக்கொள்ளவே, அவர் ஏற்பாடு செய்துள்ளார் என்பவைகளை நமக்கு உறுதியளிக்கின்றது." R. 4897, c.2, p.6.

---

**"கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள்மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள்மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது." சங். 103:17, 18.**

"இந்தப் பாதையின் இடுக்கமான அம்சங்களில் ஒன்று என்னவெனில், தற்காலத்தில் ஒருவன் தேவனோடு ஒரு **நேர்த்தியான உடன்படிக்கைப்** பண்ணாத வரையிலும், ஒருவனும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதேயாகும். ஒருவேளை அவன் இந்த உடன்படிக்கையைப் பண்ணவில்லை என்றால், அவன் தன்னை கிறிஸ்தவன் என்று எண்ணிக்கொண்டாலும் அவன் கிறிஸ்தவன் அல்ல. உலகில் இன்று நானூறு மில்லியன் ஜனங்கள் கிறிஸ்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.... ஆனால், வேதம் மிகவும் தெளிவாகத் தெரிவிப்பது என்னவெனில்: 'ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்' என்பதேயாகும். இந்தச் **சுயத்தை வெறுத்தலும், சிலுவை** சுமத்தலுமே, தற்காலத்தில் கிறிஸ்துவுக்குள்ளான சீஷத்துவத்திற்கு அவசியமான பலிகளாகும். அநேகர் கிறிஸ்தவர்களாக இருப்பதில்லை; காரணம், அவர்கள் தேவனுடனான உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கவே இல்லை. . . . இந்த இடுக்கமான வாசலில், நெருக்கமான வழியில் பிரவேசித்த பின்னர்,—**இடறல்கள்** இருந்தாலும், **தவறுகள் செய்தாலும்** அதில்

தொடர்கிறவர்களாக இருக்க வேண்டும். நாம் தள்ளாடி, தடுமாறி **முன்னேறுகிறவர்களாக** இருந்தாலும், ஒருவேளை நம்மால் இயன்றமட்டும் இருதயத்தில் கர்த்தரிடம் உண்மையுள்ளவர்களாக இருந்து **தொடர்வோமேயானால்,** அவருடைய சிங்காசனத்தில்— அவருடைய மணவாட்டி வகுப்பாரின் அங்கங்களாக உட்காரும்படி நமக்கு அருளப்படும்." R. 5055, c.1, p.7, 8, c.2, p.3.

---

### "அவர்களைச் செவ்வையான வழியிலே நடத்தினார்." சங். 107:7.

"ஆவிக்குரிய இஸ்ரயேலர்களைப் பொறுத்தமட்டில், கர்த்தர் செம்மையான வழியில், மேலான வழியில் வழிநடத்துவது உண்மையே. ஆகவே, அவருடைய ஜனங்கள் அவருடைய வழிநடத்துதலைக் கவனிப்பதில் விழிப்பாக இருப்பதிலும் அதைப் பின்பற்றுவதிலும் தீவிரமாக இருப்பதிலும் முழு உண்மையுடன் காணப்பட வேண்டும். அவருடைய வழி, நாம் நமக்கென்று தெரிந்துகொள்ளக் கூடிய வழியிலிருந்து வேறுபட்டதாய் இருப்பினும், அவர் நம்மைச் செம்மையான வழியில் நடத்தியுள்ளார் என்பதை நாம் கண்டிப்பாக இறுதியில் காண்போம். அநேகரின் பிரச்சனை என்னவெனில், அவர்கள் தெரிந்துகொள்ளும் வழி கர்த்தர் வழிநடத்தும் வழியாக இருக்காது. ஆகவே, பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அவர்களுடைய சிறுபிள்ளைத்தனம் அவர்களுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தாதவாறு கர்த்தர் அதை நன்மைக்கு ஏதுவாக மாற்றினாலும், அது சிறந்த வழியல்ல. . . . ஆகவே, இந்நேரம் வரையிலும் நம்மை வழிநடத்தின அவர்மேல் முழு விசுவாசம் வைத்து, . . . நம்மேல் தைரியம் கொண்டவர்களாக அல்லாமல், மாறாக நம்மை அழைத்தவரும், நம்மை இந்நேரம் வரையிலும் வழி நடத்தினவருமாகிய அவர்மேல் தைரியம் கொண்டு, வரவிருக்கிற நாட்களில் ஜெயங்கொண்டு முன்னேறுவோமாக." R. 4064, c.2, p.2.

---

### "கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்குகின்றது." சங்.107:29.

"மற்ற அநேக வேதவாக்கியங்களைப் போன்று, இந்த வசனமும் கிறஸ்துவின் சபைக்கு விசேஷமாகப் பொருந்தக்கூடியதாக இருக்கின்றது. அப்போஸ்தலனாகிய பவுல், இவைகளெல்லாம்

நமது எச்சரிப்புக்காகவும், போதனையாகவும் முன்னதாகவே எழுதப்பட்டவைகள் என்று நமக்குக் கூறுகின்றார் (1 கொரிந்தியர் 10:11). அநேகமாக அனைத்து தீர்க்கதரிசனங்களும், முதலாவதாக கர்த்தரையும், அவருடைய சரீரத்தையும் அடையாளம் காட்டுகின்றது என நாம் நம்புகின்றோம். தம்முடைய பின்னடியார்கள் மீது—அநேக கொந்தளிப்புகள் வரும்படி கர்த்தரால் அனுமதிக்கப்படுகின்றது. சிலசமயம் வாழ்க்கைப் பயணம் முழுமையாக கொந்தளிப்பு நிறைந்ததாகக் காணப்படுகின்றது. சில சமயங்களில் நாம், 'வாழ்க்கையின் சீற்றங்கள் கொந்தளிக்கையில்' எனப் பாடல் வரிகள் பாடுகின்றோம். அப்போஸ்தலன் தன்னுடைய நிருபங்களில் யாரெல்லாம் கொந்தளிப்புகளும், சோதனைகளும், கஷ்டங்களும் இல்லாமல் காணப்படுகின்றார்களோ அவர்கள் எல்லாரும் தேவனுடைய பிள்ளைகள் அல்ல; காரணம், தேவன் தம்முடைய பிள்ளைகளிடம் இப்படியாகச் செயல்படமாட்டார் என்று குறிப்பிட்டுள்ளார் (எபிரெயர் 12:7, 8). நாம் தேவனுடைய பிள்ளைகளானால், 'நாம் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைய நம்மை தகுதியுள்ளவர்களாக்கும்' பரீட்சைகளும், சோதனைகளையும் பெற்றுக்கொள்வது அவசியம் (கொலோசெயர் 1:12). இந்தச் சகல அனுபவங்களிலும், நம்மை கர்த்தரிடத்தில் நெருங்கச் செய்வதும், நமக்குத் தெய்வீக பாதுகாப்பும், பராமரிப்பும் தேவை என்று நம்மை உணரும்படி செய்வதே சோதனைகளின் இயல்பாக உள்ளது. இவ்விதமாக இந்தக் கொந்தளிப்புகளிலிருந்து ஆசீர்வாதமே வருகின்றது." R. 5239, c.1, p.2, 3.

---

**"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது." சங். 116:15.**

"இவ்விதமாகவே தங்களுடைய மீட்பரின் அடிச்சுவடுகளில் நடந்து கொண்டிருக்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அனைவருக்கும் இருப்பதாக. அவருடைய நீதியின் வஸ்திரத்தினால் மூடப்பட்டவர்கள் அனைவரும் பிதாவிற்கு அருமையானவர்கள். மேலும், எவ்வித சூழ்நிலையின் கீழ் இவர்களுடைய மரணம் சம்பவித்திருந்தாலும், அது தற்செயலாய் நடந்ததாய் இராமல், அது தெய்வீக அங்கீகரிப்பின் முத்தமாகவும், வரவிருக்கிற உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதத்திற்குரிய முத்திரையாகவும் உள்ளது." R. 4054, c.2, p.1.

"அவருடைய சித்தம் இல்லாமல் இவர்களுடைய தலையிலிருந்து ஒரு மயிர் கூட கீழே விழுவதில்லை." F. 646.

"நமக்கான தேவனுடைய நேரம் வரும் வரையிலும், நம்மை தொடுவதற்கு மரணத்திற்கு வல்லமையில்லை." R. 5546, c.2, p.3

---

**"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." சங்.119:105.**

"விழித்திருக்கிறவர்கள், தேவனுடைய திட்டத்தைக் குறித்து அதிகமதிகமாய் கற்றுக்கொள்ள வேண்டும் என தேவன் விரும்புகின்றார். இவர்கள் விழித்திருக்கும்போது, கிருபையிலும் அறிவிலும் வளருவார்கள். இவர்கள் உலகத்தார் போன்று இருப்பதில்லை. உலகத்தார் உணர்வற்ற நிலையில் இருப்பார்கள்— இவர்கள் அந்த நாளுக்கு ஆயத்தமற்று இருப்பார்கள். தற்காலத்தில் இருள் பூமி முழுவதையும் மூடிக்கொண்டிருக்கிறது. ஆனால், தேவனுடைய ஜனங்களுக்கோ விசேஷமான வெளிச்சம் அருளப்பட்டுள்ளது. இவர்கள் வெளிச்சத்தை விரும்புகின்றார்கள். 'உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது' இது அதிக தொலைவில் பிரகாசிக்கும் சந்திரனுடைய வெளிச்சம் போன்ற வெளிச்சமாயிராமல்; மாறாக, வெளிச்சத்திற்காக கவனிப்பவர்களின் கால்களுக்குரிய சிறு வெளிச்சமாக மாத்திரமேயுள்ளது. தூங்குகிறவர்களின் வெளிச்சமோ அணைந்து விடுகின்றது." R. 5256, c.2, p.5.

---

**"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை." சங். 119:165.**

"இடறல்" - (அ) அவர்களைத் தடுமாறும்படி செய்தல்."
R.1356, c.2, p.3.

"தேவனுடைய பிரமாணத்தை நேசிப்பது என்றால், தேவன் ஒரு மாபெரும் நோக்கம் கொண்டுள்ளார் என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுவதாகும். இன்னுமாக, தேவனுடைய சித்தம் என்ன என்று கண்டறிவதில் சந்தோஷம் கொள்வதாகும். இன்னுமாக, அவருடைய நீதி, ஞானம், அன்பு மற்றும் வல்லமையின் மீது முழுமையான நம்பிக்கைகொள்ளுவதாகும். இப்படியாக செய்கிற அனைவரும் மிகுந்த சமாதானம் அடைவார்கள். இவர்கள் தெய்வீக நீதியின் ஒவ்வொரு செயல்பாட்டையும் புரிந்துகொள்வதில்லை என்றாலும், இவர்களுடைய

விசுவாசம், தேவன் மிகுந்த ஞானமுடையவரானபடியினால் தவறுவதில்லை என்ற உண்மையைப் பற்றிக்கொள்கின்றது. இவ்வாறாக தங்களுடைய விஷயங்களை அவரிடத்தில் நம்பிக்கையுடன் வைப்பதின் விளைவாக சமாதானம் அடைகிறார்கள்." R. 4898, c.1, p.2.

---

**"வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்." சங். 121:2.**

"எல்லோரும் கடந்து போகுமட்டும் உடன்படிக்கைப் பெட்டியானது ஆற்றுப்படுகையிலே தரித்து நின்றது என்ற விஷயத்திலிருந்து ஒரு பொதுவான பாடம் கற்பிக்கப்படுகிறது. இது அவர்களுக்கு, அவர்களுடைய பிரயாணத்தின் பாதுகாப்பைக் குறித்ததான கர்த்தருடைய உத்திரவாதமாகும் . . . . சகல ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கான பாடமானது, 'உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்' என்பதேயாகும் (நீதிமொழிகள் 3:6). 'என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' . . . 'கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்' . . . 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு' . . . 'எல்லாம் உங்களுடையது, நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள், கிறிஸ்து தேவனுடையவர்' . . . இந்தத் தெய்வீக வாக்குத்தத்தங்களின் பலத்தினால், நாம் நாளுக்கு நாள் அதிகமதிகமாய் கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்குள் பிரவேசித்து, கடந்துபோனதும், தற்போதைய காலத்திலுள்ளதுமான அவருடைய வழிநடத்துதல்கள் எதிர்காலத்தில் நமக்கு தைரியமும், மனோவலிமையும், இன்னும் நடத்துவார் என்ற அமைதலுடன் இருந்து, அவருடைய சித்தத்திற்குள்ளாக மூழ்கிவிடுங்கள்." R.4064,c.1,p.1,2.

---

**"உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்." சங். 121:3.**

"உண்மையில், இஸ்ரயேலின் தேவன் தம்முடைய உண்மையான ஜனங்களோடு என்றென்றும் இருக்கின்றார். அவர் ஒருபோதும் நம்மை மறந்து போவதில்லை; மாறாக, நம்முடைய நன்மைகளுக்காக தொடர்ந்து கவனம் கொண்டவராகவும், ஆபத்தான ஒவ்வொரு நேரங்களிலும் நம்மைப் பாதுகாக்கிறவராகவும், புது சிருஷ்டியின் நன்மைக்கேதுவானது எதுவாகிலும், அதாவது பூமிக்குரியதும் மற்றும்

ஆவிக்குரியதுமாகிய இரண்டையுமே நம்முடைய ஒவ்வொரு தேவைகளிலும் அருளுகிறவராக இருக்கின்றார். அவர் நம்முடைய இருதயங்களின் ஒவ்வொரு நினைவுகளையும் ஆராய்கிறார்; அவர்பால் நாம் கொண்டிருக்கும் அன்பு மற்றும் பயபக்தியின் ஒவ்வொரு உணர்வுகளையும் அவர் அடையாளம் காண்கின்றார்; நம்மை ஒழுங்குபடுத்துவதற்கும், புடமிடுவதற்கும் ஏதுவாக, நம்முடைய ஜீவியத்தைச் சூழ்ந்துள்ள சகல செல்வாக்குகளையும் அவர் வனைகின்றார். உதவிக்காகவும், ஆறுதலுக்காகவும், இரக்கத்திற்காகவும், அவருடன் ஐக்கியத்திற்காகவுமான நம்முடைய ஒவ்வொரு கூக்குரலுக்கும் செவிகொடுக்கின்றார். அவர் ஒருபோதும், ஒரு நொடிபொழுதாகிலும் மறந்தவராகவோ அல்லது பாதுகாப்பில் தவறுகிறவராகவோ இருப்பதில்லை. 'இஸ்ரயேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை.'" R. 5548, c.2, p.7.

---

**"கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்." சங். 121:7.**

"நாம் எந்த அளவிற்கு கர்த்தரோடு நெருங்கி ஜீவிக்கிறோமோ மற்றும் நம்முடைய விசுவாசம் எவ்வளவு அதிகமாய் இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாய் நம்மில் தெய்வீக வழிநடத்துதலை உணரவும், நம்மைப் பெலப்படுத்துவதற்கும், தாங்குவதற்குமென அவர் அளித்துள்ளவைகளை அதிகமாய் பயன்படுத்தவும் முடியும். நாம் ஆபத்து நேரத்தில் அவரை அழைக்கலாம்; ஜெபத்தில் அவரிடத்தில் செல்லலாம்; மேலும், அவர் மேல் தங்களுடைய விசுவாசத்தை வைத்து, அவர் நியமித்த பாதையில் நடப்பதற்கு உண்மையாய் நாடும் எவரையும் அவர் ஒருபோதும் கைவிடுவதில்லை. இது உண்மையாய் இருப்பதினால் பூரண விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் யாத்திரையை நாம் தொடரலாம். நம்முடைய அனைத்தையும் கர்த்தருக்கென்று அர்ப்பணித்துள்ளதால், நாம் அவருடைய வழிநடத்துதலுக்காக நாடவேண்டும்; காரணம், நம்முடைய ஜீவியத்தின் சகல விஷயங்களிலும் அவர் நம்மோடு கூட இருக்கின்றார்." R. 5548, c.1, p.6.

---

**"கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்குங்காப்பார்." சங். 121:8.**

"பிதாவாகிய தேவனுடைய அறிவும், ஞானமும், அவருடைய

உலகளாவிய இராஜ்யத்தின் சகல நெருக்கடிகளைக் காட்டிலும் மேலானது என்றும், மனுஷனுடைய கோபமும், இருளின் சகல அதிகாரங்களும் தெய்வீக திட்டத்தை சிறிதளவு கூட தடுக்க முடியாது என்றதுமான ஆறுதலளிக்கும் உண்மையை அறிந்துகொள்ளும் சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கின்றோம். ஆவியின் நிலையில் காணப்பட்ட தேவனுடைய குமாரனை, மனித சுபாவத்திற்கு மாற்றின அதே வல்லமை, அவருடைய இயலாத நிலையான குழந்தைப் பருவம் முதல், உலகின் மீட்பிற்காக அவருடைய பலியை ஏறெடுக்கும் நியமிக்கப்பட்ட காலம் வரையிலும், சகல எதிராளிகளிடமிருந்து அவரைப் பாதுகாத்தது." R. 1681, c.1, p.6.

---

**"கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள்." சங். 125:1.**

"இப்பொழுது நம்மீது இருக்கும் மகா நாளானது ஒவ்வொரு மனுஷனுடைய குணலட்சணத்தையும், அதன் நிலையையும் சோதித்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், அர்ப்பணித்துள்ள கிறிஸ்தவர்களில் கூட வெகுசிலரே சோதனையில் நிலைத்திருப்பார்கள். இந்த நெருக்கடியான சோதனையில் தோல்வி இல்லாமல் பாதுகாப்புடன் கடந்து செல்லும் இந்தச் சிலர் மாத்திரமே தேவனுடைய சத்தியத்தில் 'வேரூன்றி நிலைத்திருப்பவர்களும், கிறிஸ்துவுக்குள் கட்டப்பட்டவர்களும் ஆவார்கள்.' வலிமையும், உறுதியுமுள்ள கிறிஸ்தவனுக்கும், மதவெறி உள்ளவருக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்னவெனில், ஒருவன் சத்தியத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறான், மற்றவன் தவறானவைகளில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறான். இந்த நாளின் 'அக்கினியானது' அனைவரும் பரீட்சிக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, தகுதியுடையவர்களா அல்லது தகுதியற்றவர்களா என்று கண்டறிந்து, இரண்டு வகுப்பாருக்கிடையேயுள்ள மாபெரும் வித்தியாசத்தை வெளிப்படுத்தும் வரையிலும் தொடர்ந்து எரியும்." R. 5558, c.2, p.4, 5.

---

**"பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்." சங். 125:2.**

"மலைகளின்மேல் காணப்படும் எருசலேம் பட்டணமானது

அனைத்து திசைகளிலும் மலைகளினால் சூழப்பட்டிருப்பதின் நிமித்தம், வெற்றிகரமாக எதிரி தாக்குவது கடினமான காரியமாக இருக்கும் என்பதை நாம் நன்கு காணலாம். மலைகளில் உள்ள சாலைகளை அணுகுவது கடினம்; காரணம், அவைகள் பாதுகாப்பாய் உள்ளது. ஒவ்வொரு எதிர்மாறான சூழ்நிலைகளிலும் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்குக் கோட்டையாகவும், பாதுகாப்பாகவும் இருக்கின்றார்என்ற தீர்க்கதரிசியின் கருத்து, அனைவரும் உணர்ந்து கொள்ளக்கூடிய அருமையான கருத்தாகும்.”R.4623,c.1,p.4.

---

**“தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.” சங். 145:18, 19.**

“நம்முடைய போதகருக்கே பலப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் இருந்தது எனில், நமக்கும் நிச்சயம் அது அவசியமே; மேலும், அந்தப் பலப்படுத்தப்படுதலை, பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் அவர் விண்ணப்பம் பண்ணினதற்குப் பதிலாகப் பெற்றிருந்தார். மேலும் இக்காரியமானது, அவருடைய நாமத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் எல்லாவற்றையும், எதையும் சகிக்கும் நல்ல போர்ச்சேவகர்களாக நம்மைப் பலப்படுத்தும் விசுவாசத்தின் முழு நிச்சயத்தை, தேவன் மேற்கூறப்பட்ட வழியின் மூலமாகக் கொடுப்பதற்குப் பிரியப்படுகிறார் என்பதை நமக்குத் தெரிவிக்கின்றது. . . . ஆனால், பலம் எவ்விதத்தில் வந்தாலும், அது மனிதனுடையதாகவோ அல்லது தேவதூதர்களுடையதாகவோ இராமல் மாறாக, அது நாம் தேவனுக்கு பிரியமாகவும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்கிறோம் என்பதன் நிச்சயமாக, தேவனிடமிருந்து வந்ததாக இருக்க வேண்டும்— இதினிமித்தம் அவரை அன்புகூருகிறவர்களுக்கென்று அவர் வைத்துள்ள மகா மேன்மையும் அருமையுமான விஷயங்களை நாம் உரிமைபாராட்டலாம், எதிர்பார்க்கலாம்.” R. 2775, c.1, p.4.

---

**“கர்த்தர் தம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி...” சங். 145:20.**

“இந்தத் ‘தீங்கு நாளில்’ உள்ள “கொடிய காலங்களில்” ஆபத்தான வேளைகளின் மத்தியில், மற்றும் பரிசுத்த தீர்க்கத்தரிசிகள் அப்போஸ்தலர்களின் எச்சரிப்பான குரல்கள் சுட்டிக்காட்டின

எத்திசையிலுமுள்ள கண்ணிகள், கொள்ளை நோய்கள் மற்றும் தந்திரமான ஆபத்துகளின் மத்தியில்—இத்தகைய தீமைகளும் ஆபத்துகளும் இருக்கின்றது என்ற உணர்வின் மத்தியில்—தெய்வீக பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் தனிப்பட்ட அன்பு குறித்ததான வாக்குத்தத்தங்கள் பரிசுத்தவான்களுக்கு எவ்வளவு விலையேறப்பெற்றவைகள் ஆகும்!" R. 5257, c.1, p.4.

---

**"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." நீதி. 3:5, 6.**

"சில வேளைகளில் நாம் வலதுபக்கம் அல்லது இடதுபக்கம் சாயவேண்டும் என்றோ, எப்பக்கம் நடக்க வேண்டும் என்றோ அறியாமல் இருக்கையில் கர்த்தரிடத்தில் நம்முடைய இருதயங்களை உயர்த்தி, 'கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.' 'உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்' என்ற வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்து, அவருக்கு முன்பாகக் காத்திருப்போமாக. இவ்விதமாக அவருடைய நேசகுரல், நம் பாதையில் வரும் சகல சிக்கல்கள் மற்றும் கவலைகள் மத்தியில், ஆறுதலையும், பலத்தையும், இளைப்பாறுதலையும் கொண்டு வருகின்றது. 'இந்தப் பிரமாணத்தின்படி நடக்கிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரயேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக!'(கலாத்தியர் 6:16)" R. 5807, c.2, p.3.

---

**"நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்." நீதி. 4:18.**

"இவ்வார்த்தையானது, மாபெரும் போதகர் வந்து 'அறுவடையின்' வேலையை மேற்பார்வையிடுகின்றார் என்ற உண்மையை மேலும் உறுதியளிக்கின்றது என நாம் நம்புகின்றோம். அவருடைய கண்கள்,

அவருடைய கோல் மற்றும் அவருடைய தடி அவருடைய ஆட்டை கிருபையிலிருந்து கிருபைக்கும், அறிவிலிருந்து அறிவிற்கும் வழிநடத்திக் கொண்டிருக்கின்றது என்ற சிந்தையினிமித்தம் நாம் நம்மையே ஆறுதல்படுத்திக் கொள்கின்றோம். ஆகவே, 'நீதிமான்களுடைய பாதை நடுப்பகலவரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற—சூரியப்பிரகாசம் போலிருக்கும்' என்று முன்னுரைக்கப்பட்ட விஷயத்தை நாம் காண்கையில் வியப்படையவில்லை. சில விஷயங்கள் நாள்பட தெளிவடைய வேண்டும் என நம்மால் எதிர்பார்க்கப்பட்டாலும், நம்முடைய விசுவாசத்தின் சகல அடிப்படை அம்சங்களும் மாறாதவைகளே ஆகும்." R. 3856, c.2, p.1.

---

**"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்." நீதி. 10:22.**

"இராஜரீக ஆசாரியக்கூட்டத்தினர் தங்களுடைய சுயத்தைப் பலி செலுத்துகையில், உண்மையாய் இருக்கும் பட்சத்தில் மற்றொரு விதமான ஐசுவரியம், இவர்களுக்கு வருகின்றது. அவைகள் பரிசுத்த ஆவி என்னும் ஐசுவரியங்களாகும். இவர்கள் சுயநலமான விருப்பங்களையும், பூமிக்குரிய நோக்கங்களையும், பூமிக்குரிய திட்டங்கள் முதலியவைகளைக் கர்த்தருடைய ஊழியத்திற்கென்றும், சத்தியத்திற்கென்றும் பலி செலுத்துகையில், இவர்கள் தங்கள் பரம பிதாவிற்கும், தங்கள் கர்த்தருக்கும் ஒத்த விஷயங்களில் —சாந்தம், பொறுமை, நற்குணம், சகோதர அன்பு போன்ற பரிசுத்த ஆவியின் கனிகள் அவர்களுக்குள் அதிகமதிகமாய் வளருவதையும், இவர்களால் காணமுடிகின்றது. இன்னுமாக, முன்பு அறிந்திராத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கூட இவர்கள் அடைகின்றனர். . . . இவர்கள் தங்களுடைய அனைத்தையும் கர்த்தருக்குக் கொடுத்ததினிமித்தம், மகா மேன்மையும் அருமையுமான அவருடைய சகல வாக்குத்தத்தங்களும் தங்களுக்குச் **சொந்தமாயுள்ளது** என்பதை உணருவதன் மூலமாகவே இந்தச் சமாதானமும், சந்தோஷமும் வருகின்றது. இப்பொழுது இவர்களுடைய விசுவாசம், இந்த வாக்குத்தத்தங்களை, தங்களுக்குச் சொந்தமானது போன்று உறுதியாய்ப் பற்றிக் கொள்ளலாம்." R. 2762, c.2, p.2, 3.

**"மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்; கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்." நீதி. 29:25.**

"உண்மையும், கீழ்ப்படிதலுமுள்ள இருதயத்தைக் கொண்ட எவரும் விசுவாசம் வைக்கும்போது, தேவையான ஒவ்வொரு வேளைகளிலும், ஒவ்வொரு சோதனையான நேரங்களிலும், ஒவ்வொரு இடர்பாடுகள், குழப்பங்களிலும், ஜீவியத்தின் சகல விஷயங்களிலும் அவன் கிருபையையும், பெலத்தையும் அடைந்துள்ளான்—அதாவது இன்பத்திலும், கசப்பின் மத்தியிலும், ஜீவியத்தின் சகல அனுபவங்களிலிருந்தும் நாம் பயன் அடைவதற்கான உதவியையும், கப்பல் சமநிலையில் நிற்பதற்காகப் போடப்படும் அடிச்சுமையைப் போன்று, நாமும் அடைவோம்." R. 3545, c.1, top.

---

**"உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்." ஏசா. 26:3.**

"தன்னுடைய சத்துருக்கள் தன்னைக் கொல்லும்படி கல்லெறிந்தபோதும், இதே சமாதானத்தையும், சந்தோஷத்தையும் ஸ்தேவான் பெற்றிருந்தார். இதையே, தங்களுடைய ஏழ்மை, வியாதி, உபத்திரவம் மற்றும் சோதனைகளின் மத்தியிலும், எப்பக்கமும் சூழ்ந்துள்ள சத்துருக்களின் மத்தியிலும், கடுமையான துன்பங்களின் ஜூவாலைகளின் மத்தியிலும்—இவர்போன்ற ஆயிரக்கணக்கான தேவனுடைய பரிசுத்தவான்களால் சாட்சி பகர முடியும். எங்கிருந்து இது வருகின்றது அல்லது இத்தகைய சூழ்நிலைகளுடன் எவ்வாறு அமைதியும், சந்தோஷமும் இணைகின்றது (ஒத்துபோகின்றது). அமைதியான மனமே இதற்கான விடையாகும்—'உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்' என்பதாகும். இந்த அமைதியை (இளைப்பாறுதலை) அனுபவியாத வரையிலும், இவ்வமைதியின் ஆசீர்வாதத்தை எவராலும் உணர முடியாது. உபத்திரவங்கள் எனும் பரீட்சைகளில் அனுமதிக்கப்படாத வரையிலும், இதனுடைய மாபெரும் முக்கியத்துவத்தை ஒருவராலும் உணர்ந்துகொள்ள முடியாது." R. 1961, c.2, p.6

**"அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்." ஏசா. 30:15.**

"'நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்'—இந்த வார்த்தைகளில் உள்ள இந்த அமைதியை (இளைப்பாறுதலை) அடைவதற்கான திறவுகோலை கர்த்தர் அருளுகின்றார். உண்மையில், சாந்தமும் அமரிக்கையின் (அமைதி) ஆவியுமே அமைதியின் (இளைப்பாறுதலின்) இரகசியமாகும். பொறுமை, தேவனுடைய சித்தத்திற்கு அன்புடன் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தல், அவருடைய அன்பிலும், பராமரிப்பிலும் மற்றும் அவருடைய வழிநடத்தும் ஆலோசனையிலும், நன்மைக்கு ஏதுவான வழிநடத்துதலிலுமுள்ள ஞானத்திலும், நம்பிக்கை வைத்தல் ஆகிய பண்புகளை விருத்தி செய்வதும்; தீமையான பெயர்கள் மற்றும் நற்சாட்சிகள் பெற்றுக்கொள்வதின் மத்தியிலும் அல்லது சாதகமான அல்லது சாதகமில்லாத சூழ்நிலைகளின் மத்தியிலும் இந்த ஓட்டத்தை (முயற்சியை) விடாமுயற்சியுடன் தொடர்வதுமே சாந்தமாய் இருத்தலாகும். தேவனுடைய அன்பார்ந்த பிள்ளைகள், கிறிஸ்துவின் சாந்தமும், அமரிக்கையின் (அமைதி) ஆவியையும் பெற்றுக்கொள்ள அதிகமதிகமாய் நாடி, தேவனுடைய வழிநடத்துதல்களை ஏற்றுக்கொண்டு, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவர் வழிநடத்துகிறபடி நடந்து, அவருடைய நுகத்தை ஏற்றுக்கொண்டு, அவரிடத்தில் கற்றுக்கொள்கிற அனைவருக்கும் அவர் மாத்திரமே அருளுகிறதும், அருள விரும்புகிறதுமான பலத்தினால் தரிப்பிக்கப்பட்டிருப்போமாக." R. 1962, top.

---

**"அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்." ஏசா. 33:16.**

"(நாமல்ல) தேவனே தேவைகள் மற்றும் சூழல்கள் என்ன என்று காண்பதால், நம்முடைய உண்மையான தேவைகளுக்கு அப்பாற்பட்ட எதையும் கேட்காமல் இருப்போமாக—வாக்களிக்கப்பட்ட 'அப்பத்திற்காகவும், தண்ணீருக்காகவும்,' மற்ற ஒவ்வொரு சௌகரியத்திற்காகவும் எப்பொழுதும் நன்றியுள்ளவர்களாக இருப்போமாக. தேவனுடைய மேலான ஞானத்தையும், நம்மீதான அளவில்லாத அன்பையும் எப்போதும் உணர்ந்தவர்களாக, அவருடைய கரங்களிலிருந்து நம்முடைய விஷயங்களை எந்த விதத்திலும் எடுத்துப்போடாதபடிக்கு நாம் அச்சம் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வாறாக நமக்கு என்ன நடந்தாலும், சகலமும் நம்முடைய நன்மைக்கு ஏதுவாக நடக்கின்றது என்பதை உணருகையில் நாம் எப்பொழுதும் சந்தோஷத்துடன் ஜீவிக்கலாம். தேவையான அனுபவங்களையோ அல்லது பரீட்சைகளையோ அல்லது சிட்சைகளையோ பெற்றுக்கொள்வதற்கு, நாம் வலியை பெற்றுக்கொள்வதோ அல்லது குழப்பத்தை அடைவதோ அவசியமாயிருக்கும். மேலும், சிட்சைகளை அல்லது படிப்பினைகளை உடனடியாக ஆராய்வதற்கும், உணர்ந்து கொள்வதற்கும் நாம் கற்றுக்கொண்டு, கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் தகுதியான மாணவர்கள் என்று நம்மை நிரூபித்துக்காட்டவும் வேண்டும்.”
R. 2009, c.2, p.5.

---

**“உன் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும்.” ஏசா. 33:17.**

“ஓ, அமைதிக்கும், சமாதானத்திற்கும், மகிமைக்கும், ஆசீர்வாதத்திற்கும், சந்தோஷமான ஐக்கியத்திற்கும், முடிவில்லா அன்பிற்கும், கறைபடாத பரிசுத்தத்திற்கும், முடிவில்லா பேரின்பத்திற்கும் உரிய எத்துணை தரிசனம்! இதன் மகிமையை சிறிதளவு கண்டவர்களாலே, பரிசுத்தமான வைராக்கியத்தைத் தூண்டிவிடுகிறதற்கும், உண்மையாய் முயற்சிப்பதற்கும், இந்தத் தரிசனம் வழிநடத்தும். ஒழுக்கமுறையின் பாதையில் வரும் சகல இழப்புகளையும், சிலுவைகளையும் பொறுமையோடு சகித்து தொடர்ந்து நிலைத்திருப்பதற்குமென இந்தத் தரிசனத்தின் வல்லமையை மதிப்பிட முடியும். கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்ட அனைவரும், இந்த ஆசீர்வாதமான தரிசனத்தின் எண்ணங்களினால் நிரப்பப்படவில்லை என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. காரணம், இவ்விஷயங்களை அறிவுப்பூர்வமாக அறிந்தவர்களில் கூட வெகுசிலரே, தரிசனத்தை உண்மையாய் கண்டு, அதில் தங்களுக்கும் ஒருபங்கு இருப்பதை விசுவாசத்தினால் உணர்ந்துகொள்கின்றனர்.... நீ தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கிறவனாய் மாத்திரம் இராமல், அதன்படி உண்மையாய் செய்கிறவனாகவும் இருப்பாயானால், இப்பொழுதே, ‘உன்னுடைய விசுவாசக்கண்கள்,’ வெளியாக்கப்படப் போகிற மகிமையின் பிரஸ்தாபத்தைக் காணும். மேலும், நீதியின் பாதையில் நடக்கும்படி உன்னுடைய அடிகள் உயிர்ப்பிக்கப்படும்.”
R. 2087, c.2, p.3.

**"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்." ஏசா. 40:31.**

"யாராவது தங்களின் மீதே நம்பிக்கைக் கொண்டு, தங்களுடைய சொந்த பலத்தின் மீதே பிரதானமாய் சாய்ந்திருப்பார்களானால், இவர்களின் நன்மைக்கு ஏதுவாக, இவர்கள் அதிகமதிகமாய் துணிவை இழப்பதற்கும், சுயத்தின் மீதான சகல நம்பிக்கையை இழப்பதற்கும், தங்களுடைய இயலாமையையும், பலவீனங்களையும் உணர்ந்துகொள்வதற்கும் கர்த்தர் மீது முழுமையாய் சாய்ந்திருப்பதற்காகவும் வழிநடத்துதலுக்காகவும், ஆதரவிற்காகவும் அவரைத் தொடர்ந்து நோக்கிப்பார்க்க வேண்டியதற்குமான தங்களுடைய தேவையை உணர்ந்துகொள்வதற்கும் இவர்களை கர்த்தர் ஏமாற்றத்திற்குள் அனுமதிப்பார். கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்குக் காத்திருக்கக் கற்றுக்கொள்ளும்போது, இவர்களுக்கே, 'கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; . . . அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்' என்ற வாக்குத்தத்தம் நிறைவேறுகின்றது."
R. 5712, c.2, p.6.

---

**"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்." ஏசா. 41:10.**

"நம்முடைய வனாந்தர பிரயாணத்திலுள்ள ஒவ்வொரு அனுபவங்களிலும் தேவனுடைய உண்மையான இஸ்ரயேலனும், கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கமும், கர்த்தருடைய தொடர்ச்சியான வழிநடத்துதலைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கின்றனர். பரலோக மன்னா, நம்முடைய அன்றாட புத்துணர்ச்சிக்காக அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து ஜீவதண்ணீர் நம்மிடத்தில் புறப்பட்டு வருகின்றது. நம்முடைய பிதாவின் சிட்சிக்கும் கோலானாது, நாம் ஆபத்தில் இருக்கும் போதோ அல்லது தடை செய்யப்பட்ட பாதை ஏதோ ஒன்றில் நாம் அலைந்து

திரியும்போதோ, நம்மை கட்டுப்படுத்துகின்றது. அவர் எவ்வளவு அன்புடன் நம்மை மீண்டுமாக சரியான பாதைக்குக் கொண்டு வந்து, நம்முடைய காயங்களை ஆற்றி, நம்முடைய இடறல்களையும், பலவீனங்களையும் தயவாய் மன்னிக்கின்றார். உறுதியுடனும் நாம் நம்முடைய பரலோக வழிகாட்டியின் மேல் நம்பிக்கை கொள்ளலாம். இவ்வாறாக நாம் அவரில் இளைப்பாறி, பூரண சமாதானத்தில் காக்கப்படலாம்.” R. 5548, c.2, top.

---

**“உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.” ஏசா. 41:13.**

“இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களில் சோதனை நேரங்களுக்கான எத்துணை பலமும், ஆதரவும், கிறிஸ்துவின் நல்ல போர்ச் சேவகனாக தீங்கநுபவிக்கும் ஆற்றலும், அமைதலான ஆவியும், ஆசீர்வாதமான சமாதானமும் உள்ளது . . . இதை எந்த நாவும் வர்ணிக்க முடியாது. இது (இந்த வாக்குத்தத்தமானது) கடந்த காலங்களில் அவருடைய உண்மையுள்ள ஜனங்களை அநேக இருளான, சோதனையான அனுபவங்களினூடே அனுமதித்து உலகம் ஆச்சரியப்படும் விதத்தில் மனோவலிமையுடன் கடந்து செல்லச் செய்தது. உலகம் இவர்களை எரிகிற அக்கினி சூளைக்குள் கண்டாலும், இவர்களோடு தேவபுத்திரனின் சாயலுக்கு ஒப்பானவர் இருக்கிறதைக் காணவில்லை (தானியேல் 3:25). இவர்கள் அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்தார்கள். (எபிரெயர் 11:27)” R. 4784, c.2, p.4.

---

**“நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது.” ஏசா. 43:2.**

“இஸ்ரயேல் யோர்தான் வழியாகப் போகையில், அவர்கள் பயப்படுவதற்கு எதுவுமிருக்கவில்லை. காரணம், தெய்வீக பிரசன்னத்தின் அடையாளமாகிய கர்த்தருடைய பெட்டியானது, பயமுறுத்தும் சூழ்நிலைகள் மத்தியில் காணப்பட்டது. இதுபோலவே, கிறிஸ்தவனும் தெய்வீக பிரசன்னத்தையும் அங்கீகரிப்பையும் உணரும்வரையில் அச்சம் கொள்ளத்தக்கதாக அவனுக்கு எதுவும்

இருப்பதில்லை. அவன் உபத்திரவமெனும் ஆறுகளையும், கடலையும் கஷ்டப்பட்டு கடந்து போகலாம்; அவன் பாடுகள் எனும் அக்கினிச் சூளையைக் கடந்து போகலாம்; என்றாலும், கர்த்தர் அவனோடு இருக்கையில் இவைகளில் ஒன்றும் அவனுக்குத் தீங்கு விளைவிக்க முடியாது. மற்ற சாதாரணமான சூழ்நிலைகளில் உணர முடியாததும், மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளிலே உணரப்பட்டும் கர்த்தருடைய பிரசன்னமும், அன்பும் வேறு எந்த விதத்திலும் அடைய முடியாத பெலத்தை (ஆற்றலை) விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும் மற்றும் அன்பிற்கும் அளிக்கின்றது. அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதவாய் நடக்கும்." R.1857, middle

---

**"என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளை எல்லாம் செய்வேன். . . . அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன்." ஏசா. 46:10, 11.**

"அவர்களை (கர்த்தர் மற்றும் அப்போஸ்தலர்களை) இவ்வளவு உறுதியாக நிலைநிறுத்தியதும், அவர்கள் பாடு அனுபவித்த போது அத்தகைய இளைப்பாறுதலையும் அவர்களுக்கு அளித்ததும் எது? அது **அவர்களுடைய விசுவாசமே**—தேவனுடைய ஞானம், வல்லமை மற்றும் அன்பின் மீதான அவர்களுடைய விசுவாசமேயாகும். அவர்கள், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவர் என்றும், அவருடைய நீதியும், இரக்கமான திட்டம் தோல்வியைத் தழுவுவதில்லை என்றும் **நம்பினார்கள்.** காரணம், அவர் தமது தீர்க்கதரிசிகளின் வாய் மூலமாக, 'என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளை எல்லாம் செய்வேன் . . . அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன்' என்று கூறியுள்ளார். 'சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்?' தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிமித்தம் அவர்கள் இளைப்பாறினார்கள். அவரில், அவர்களுடைய விசுவாசம் நங்கூரமிடப்பட்டுள்ளது. மேலும், அவர்களுடைய நங்கூரம் தேவனுடைய சிங்காசனத்தைப் பற்றிக்கொண்டிருக்கையில், எவ்வளவு கடுமையான புயல் கொந்தளித்தாலோ அல்லது வாழ்க்கையின் சீற்றங்களால் எவ்வளவாக தூக்கி எறியப்பட்டாலும் என்ன வாயினும் இவைகள் அவர்களுக்கு ஒன்றுமேயில்லை."
R. 1834, c.2, p.7.

**"ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது." ஏசா. 49:15, 16.**

"நம்முடைய பரம பிதாவின் பட்சமுள்ள இரக்கம் நிறைந்த அன்பிற்குரிய இந்த வாக்குத்தத்தங்களை நாம் வாசித்து, நம்முடைய இழிவான நிலையைக் குறித்து சீர்தூக்கிப் பார்க்கையில், நாமே உண்மையில் அவ்வன்புக்கு உரியவர்கள் என்பதை உணர்வதே ஆச்சரியமாய் இருக்கும். இருப்பினும் இடுக்கமான வழியில் நாம் தாழ்மையுடன் நடந்தால், இந்த வாக்குத்தத்தங்கள் நமக்கான ஆறுதலாயும், தேறுதலாயும் இருக்கும்." R. 957, c.1, p.1.

---

**"கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப் போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கினேன்." ஏசா. 50:7.**

"உலகத்தின் பார்வையில் கிறிஸ்தவனின் பாதை, சமாதானமற்றதாகத் தோன்றுகின்றது. காரணம், கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அடிக்கடி சீற்றம் நிறைந்த பிரயாணத்தையே மேற்கொள்கின்றனர். ஆனால், நம்முடைய இருதயங்கள் விசுவாசத்தின் வாயிலாக கிறிஸ்துவில் தொடர்ந்து நிலைத்திருந்தால், நாம் நம்முடைய நங்கூரத்தை விட்டுவிடாதிருந்தால், நாம் எவ்வளவு கடுமையாக தூக்கி எறியப்பட்டாலும் சரி, புயல்கள் எவ்வளவு கடுமையாக வீசினாலும் சரி, ஜீவியத்தின் அனைத்து சீற்றங்களிலும் நாம் காக்கப்பட்டிருப்போம். விசுவாசமானது, ஏசாயா தீர்க்கதரிசியோடு சேர்ந்து (ஆதார வசனம் போன்று) கூறலாம். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களினால் நாம் இளைப்பாறலாம்; ஏனெனில், நம்முடைய நங்கூரமானது தேவனுடைய சிங்காசனத்தைப் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கின்றது. நம்முடைய போதகரின் இருதயத்தின் பாஷையானது, 'நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்' என்பதே. இவர் ஆதிமுதல் பிதாவோடு இருந்துள்ளார். அவருடைய அன்பையும், நற்குணத்தையும் இவர் அறிந்திருந்தார்; அவருடைய வல்லமையின்

வெளிப்படுத்தல்களை இவர் கண்டிருந்தார்; அவருடைய இரக்கம் நிறைந்த அன்பை இவர் கவனித்திருந்தார். ஆகவே, தேவனோடு இதைப் போன்றதான உறவிற்குள் வந்திருக்கும் நாமும், இவ்வாறாக (மேற்கூறிய வண்ணமாக) அறிந்துகொண்டு, அவருடைய அன்பிலும், உண்மையிலும் நம்பிக்கைகொள்ளலாம்." R. 5432, c.1, p.2, 3.

---

**"நீதியை அறிந்தவர்களே, என் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களே, எனக்குச் செவி கொடுங்கள்; மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருங்கள். நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்; சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும்பயப்படுகிறதற்கும்,. . . நீ யார்?" ஏசா. 51:7, 12.**

"சத்துருக்கள் எய்யும் ஆயுதங்கள் நம்முடைய இருதயங்களைக் காயப்படுத்துகையில், நம்முடைய பலவீனங்களை அவர் கண்டு, அவருடைய ஆறுதலின் தைலத்தை ஊற்றுவது, சர்வ வல்லமையுள்ளவரின் சார்பில் எத்துணை அன்பாக உள்ளது. கிறிஸ்துவினால் விடுவிக்கப்பட்ட அவருடைய பிள்ளைகளில் ஒருவரையும் அவர் மீண்டுமாக 'மனுஷனுக்குப் பயப்படும் பயம் வருவிக்கும் கண்ணியாகிய' அடிமைத்தனத்திற்குள் செல்ல விட்டுவிடுவதில்லை. அவர் கிறிஸ்துவுக்குள்ளான ஒவ்வொரு மனுஷனையும், பாவம் மற்றும் மூடநம்பிக்கைகளிலிருந்து விடுதலையையும், அவனுடைய சகல எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் கிரியைகளுக்கு அவனே பொறுப்பாளி என்பதையும் உணரச் செய்கின்றார்.—'**படைகளின் ஆண்டவர் ஒருவரையே** தூயவர் எனப் போற்றுங்கள்; **அவருக்கே** அஞ்சுங்கள்; **அவர்** திருமுன்னேயே நடுங்குங்கள்.'" (திருவிவிலியம்) R.1788, c.2, p.2.

---

**"நான் வானத்தை நிலைப்படுத்தி, பூமியை அஸ்திபாரப்படுத்தி, சீயோனை நோக்கி: நீ என் ஜனமென்று சொல்வதற்காக, நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்." ஏசா. 51:16.**

"விசுவாசத்தை ஊக்குவிக்கவே... கர்த்தரானவர், நமக்கு தமது

சகல விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களோடு கூட, அவர் மேல் குழந்தை போன்று எளிமையான நம்பிக்கை வைக்கத்தக்கதாக அநேக உற்சாகமூட்டுதலையும் கொடுத்துள்ளார். மேலும், மனுஷர்களுடைய நிந்தைகளுக்குச் செவியை அடைத்துக் கொள்ளும்படியாகவும் கட்டளையிட்டுள்ளார். . . . 'வானத்தை (புதிய வானத்தை) நிலைப்படுத்தி, பூமியை (புதிய பூமியை) அஸ்திபாரப்படுத்தி, சீயோனை (புதிய வானமும், புதிய பூமியும்—புதிய இராஜ்யத்திற்கு தகுதியான சுதந்தரர்களாகும்படிக்கு இந்தத் துன்பங்களால் பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்ட ஜனங்களை) நோக்கி **நீ என் ஜனமென்று** சொல்லுவேன் என்றார்.'" R.1788, c.2, p.1.

---

**"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்." ஏசா. 54:17.**

"கர்த்தருடைய சீயோனிலுள்ள சகலருக்கு எதிராகவும், ஒவ்வொரு தனிப்பட்ட அங்கங்களுக்கு எதிராகவும் அநேக நாவுகள் எழும்பியுள்ளது—'விரியன் பாம்பின் விஷம்' கொண்ட நாவுகள், வைராக்கியம், துர்க்குணம், பகை மற்றும் விரோதத்தினால் ஆன கசப்பான நாவுகள்—அவதூறு பேசுவதற்கும், தவறாய்ப் பேசுவதற்கும், சகல விதமான தீமையைத் தவறாய்ப் பேசுவதற்கு எவ்விதத்திலும் தயக்கமுறாத நாவுகள் எழும்பியுள்ளது. பெரிய அளவில் இந்த ஆயுதங்களும், நாவுகளும் வெற்றியடைந்துள்ளது. மேலும், மேய்ப்பனுக்குச் சம்பவித்தது போன்று ஆடுகளுக்கும் இவைகள் பெரும் சேதத்தைக் கொண்டு வந்தது; தேவன் இதை அனுமதித்தார்—அவர் ஆயுதத்தைத் தடுக்கவோ அல்லது நாவை அமைதிப்படுத்தவோ முற்படவில்லை. என்றாலும், இதற்கு முரண்பாடானதையே நம்முடைய ஆதார வசனத்தில் நமக்கு வாக்களித்துள்ளார். சரியான விளக்கம்தான் என்ன? . . . 'நீங்கள் மாம்சத்துக்கு உட்பட்டவர்களாயிராமல் ஆவிக்கு உட்பட்டவர்களாயிருப்பீர்கள்' . . . நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டியாய் இருக்கீன்றீர்கள் என்பதே விளக்கமாகும் (ரோமர் 8:9; 2 கொரி. 5:17). ஆயுதங்களும், நாவுகளும் எல்லா விதத்திலும் நாம் மரணத்திற்கு ஏற்கனவே அர்ப்பணித்துள்ள, மாம்சத்துக்கு—பழைய சிருஷ்டிக்கு மாத்திரமே பாதிப்பை உண்டாக்குகின்றது." R. 3050, c.2, p.8, 9.

**"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்." ஏசா. 55:11.**

"பிதாவாகிய தேவன் ஆறாயிரம் ஆண்டுகளாக உலகத்தை மாற்ற முயற்சித்தும், எல்லாவற்றிலும் தோல்வியையே அடைந்தார் என்று கூறுகிறவர்களுக்கு, தேவனுடைய அனைத்து நோக்கங்களும் நிறைவேற்றப்படும் என்றும், அவருடைய வார்த்தைகள் வெறுமையாய் அவரிடத்தில் திரும்பாது என்றும், அது அவர் விரும்புகிறதைச் செய்து, அவர் **அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்** என்று வேதாகமம் அளிக்கும் வாக்குத்தத்தங்களை ஒத்துக்கொள்வது கடினமாயிருக்கும். உலகம் இதுவரையிலும் மாறாமல் இருப்பதும், கர்த்தரை அறிகிற அறிவு இதுவரையிலும் பூமியை நிரப்பாமல் இருப்பதுமான காரியம், இந்த வேலைக்கான வசனம் (வார்த்தை) இதுவரையிலும் **அனுப்பப்படவில்லை** என்பதற்கான நிரூபணமாகும்." A.95, p.2.

---

**"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி. . ." ஏசா. 58:11.**

"ஒருவேளை வழிநடத்துதல்களில், நம்முடைய பூமிக்குரிய காரியங்கள் தொடர்புடைய ஏதோ சூழ்நிலைகள் இத்திசையிலோ அல்லது வேறுதிசையிலோ இப்பக்கமாகவோ அல்லது வேறுபக்கமாகவோ திரும்பினால் நம்முடைய இருதயங்கள், அதிலிருந்து எடுக்க வேண்டிய பாடங்களை எதிர்நோக்கி இருந்து, மேலும் அதன் மூலம் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். கிறிஸ்தவன் எந்த அனுபவங்களையும் அதிர்ஷ்டம் அல்லது அதிர்ஷ்டமில்லை என்றோ ஒருபோதும் கருதாமல், மாறாக தான் கர்த்தரோடு நெருங்கி சஞ்சரித்தால் தன்னுடன் தொடர்புடைய அனைத்து விஷயங்களும் கர்த்தரால் ஒழுங்குப்படுத்தப்பட்டு, வழிநடத்தப்படும் என்றே நினைவுகூர வேண்டும்." R. 4628, c.2, p.3.

---

**"...புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய். நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் இராஜ முடியுமாயிருப்பாய்." ஏசா. 62:2, 3.**

"ஆகவே, **தேவனுடைய** கரத்தில் இருக்கும் சபையானது, தெய்வீக வல்லமையின் கரத்தில் இருக்கும் சபையாகும். அந்த வல்லமை

சபையைப் பயன்படுத்தும்; மேலும், இவள் அலங்காரமான கிரீடமாய் இருந்து, **சதாகாலமும் நம்முடைய தேவனுடைய செய்கையின் மகிமையைப் பிரதிபலிக்கும்** அழகான ஒருவளாகவும் இருப்பாள். அது எத்துணை மகிமையாய் இருக்கும்! எத்துணை அழகு! பிதாவாகிய தேவன் இந்த விலையேறப்பெற்ற சம்பத்தை ஒன்றின் மேல் மற்றொன்று பிரதிபலிக்கத்தக்கதாக அந்த அலங்காரமான கிரீடத்திலும், இராஜமுடியிலும் பதித்து வைப்பார்; கர்த்தர் இயேசுவையோ பிரதான இடத்தில் வைப்பார்; காரணம், பிதா, தாம் கர்த்தருக்கென்று கொடுக்காத எந்த மகிமையையும் சபைக்கு கொடுக்கமாட்டார். சபை, மனுஷர்களுக்கு முன்பாக 'அழகும், என்றென்றும் சந்தோஷமும் உள்ள ஒன்றாக' - தேவனுடைய கைவேலையாகக் காட்டப்படுவார்கள்."
R. 4914, c.1, p.2.

---

**"அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார்." ஏசா. 63:9.**

"கர்த்தருக்கென்று அர்ப்பணித்துள்ள ஜனங்கள் அவருக்கு முழுமையாய் சொந்தமானவர்கள் என்றும், அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும், அவர் நெருக்கப்படுகின்றார் என்ற உண்மையை வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றது. தர்சு பட்டணத்தானாகிய சவுல் ஆதிசபையைத் துன்பப்படுத்தின போது, நமது கர்த்தர், தமஸ்குவுக்குப் போகிற வழியில் அவரை அழைத்து, 'சவுலே சவுலே நீ **என்னை** ஏன் துன்பப்படுத்துகிறாய்? என்றார். அதற்கு அவர்; ஆண்டவரே, நீர் யார்? என்றான். அதற்குக் கர்த்தர், நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார்.' சவுல் மகிமையடைந்த இரட்சகரை நேரடியாக துன்பப்படுத்தவில்லை. மாறாக, அவர் இயேசுவின் பின்னடியார்களையே துன்பப்படுத்தினார்—புது சிருஷ்டிகளை அல்ல, மாம்சத்தையே துன்பப்படுத்தினார்."
R. 5173, c.1, p.7.

---

**"அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்." ஏசா. 65:24.**

"எத்தனை ஜெபங்கள், முதலில் அதைக் கேட்கிறவர் தன்னுடைய சொந்த இருயத்தில் உள்ள பொல்லாப்பைச் சுத்திகரியாததால் கேட்கப்படாமல் அல்லது தடுக்கப்பட்டு இருக்கின்றது? 'நீங்கள்

செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள்;' அதாவது, நீங்கள் சுயநலமாகத் தேவனுடைய சித்தத்திற்கு இசைவில்லாமலும் கேட்கின்றீர்கள். ஆனால் சிட்சிக்கப்பட்டவர்களுக்கும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குமே— 'அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே (இருதயத்தின் விருப்பங்கள் சொல்வடிவங்களில் அறிவிக்கப்படும் முன்னமே, அதை அறிந்து) நான் மறு உத்தரவு கொடுப்பேன் (விடையை விரைவிலோ அல்லது பிற்பாடோ கொடுக்கத்தக்கதாக காரியங்களின் வடிவமைப்பு ஆரம்பிக்கும்); அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்' என்ற வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஆயிர வருட யுகத்தில், கர்த்தருடைய ஜனங்கள் தொடர்புடைய தீர்க்கதரிசனமாய் இருந்தாலும், இந்த யுகத்தில் அவருக்கு உண்மையாய் இருக்கும் அனைவருக்கும் கூட பொருந்துவதாய் இருக்கின்றது. அவருடைய எளிமையான பிள்ளைகளிலேயே மிக சிறியவர்களிடமும் கூட காட்டப்படும் அவருடைய சகல அன்பான இரக்கத்திற்காக கர்த்தருக்குத் துதி உண்டாவதாக!" R.1866, c.2, p.2.

---

**"ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்." ஏசா. 66:13.**

"கர்த்தருடைய ஜனங்கள், சத்தியத்தை ஏற்றுக்கொண்டதினிமித்தம் பொல்லாங்கனிடமிருந்தும், அவருடைய ஊழியக்காரர்களிடமிருந்தும் வரும் எதிர்ப்புகளினால் சகல திசைகளிலும் சூழப்பட்டுள்ளனர். மேலும், இவர்கள் வேதவாக்கியங்களின் ஆறுதலையும், தேறுதலையும் மற்றும் உலகம் கொடுக்க முடியாததும், எடுத்துப்போட முடியாததுமான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றிருக்கவில்லையெனில் இவர்களின் நிலை உண்மையில் கவலைக்குரியதாய் இருக்கும். ஆனால், கர்த்தர் இவர்களுக்கென்று ஒழுங்குபடுத்தியுள்ள சூழ்நிலைகளின் கீழ், நீதியினிமித்தம் பூமிக்குரிய விஷயங்களில் இழப்புகளை சந்திக்கையிலும், உபத்திரவங்களில் களிகூர்ந்து, சகலவற்றிலும் நன்றி ஏறெடுக்கும் சிலாக்கியத்தை இவர்கள் பெற்றிருக்கின்றனர். உபத்திரவத்தில் இந்தக் களிகூருதலின் இரகசியம் தான் என்ன? எங்கிருந்து இம்மாதிரியான மாபெரும் ஆறுதல் வருகின்றது? நம்முடைய பதில் என்னவெனில், இது பரிசுத்த ஆவியினால், வெளிச்சமூட்டப்பட்ட வேதவாக்கியங்களின் ஆறுதல் மூலம் வருகின்றது." R. 3436, c.1, p.3, 4.

**"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்." எரே. 33:3.**

"முற்காலத்து அநேக தீர்க்கதரிசிகளும், அநேக நீதிமான்களும் காண சிலாக்கியம் பெறாத தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்த இரகசியங்களை அறியும்படிக்கு நமக்கு அருளப்பட்டுள்ளது. தற்கால சத்தியத்தின் வெளிச்சத்திற்காக தேவனுக்கு நன்றி! இப்பொழுது நம்மால், தேவனுடைய **ஒரு திட்டத்தை**—அவருடைய கடந்த கால வரலாற்றையும், எதிர்கால வெளிப்படுத்தல்களின் ஒவ்வொரு அம்சத்தையும் உள்ளடக்கும் ஒரு திட்டத்தைப் பார்க்க முடிகின்றது; எவ்விடத்திலும் குறைவும், தொடர்பற்ற தன்மையும் இல்லாத— முழுமையான ஒரு திட்டமாகும்; தெய்வீக நீதியோடும், ஞானத்தோடும், வல்லமையோடும், அன்போடும், தெய்வீக வார்த்தையின் ஒவ்வொரு சொற்களோடும் முழுமையாய் ஒத்திருக்கும் ஒரு திட்டமாகும்; மேலும், இது நியாயமான திட்டம் என்பதை மாத்திரம் நிரூபிக்காமல், **இந்தத்** தேவனுடைய திட்டத்தோடு, மற்ற சகல கூற்றுகளையும், திட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், இவைகள் குறைவுள்ளதாகவும் (அரைகுறையானதாகவும்) தப்பறைகளுக்கான சான்றுகளாகவும், தெய்வீக காரணங்களுக்கும், தெய்வீக வார்த்தைகளுக்கும் இசைவற்றதாகவும் உள்ளது என்று நிரூபிக்கின்றது. யுகங்களைக் குறித்த திட்டத்தைப் புரிந்துகொள்ளுகிறவர்களால், அது மனுஷனால் ஏற்படுத்தப்படாதது என்றும், தெய்வீகம் தொடர்புடையது என்றும் உணர்ந்துகொள்ள முடியும்." R.1867, c.1, p.5, 6.

---

**"அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரியதாயிருக்கிறது." புலம். 3:22, 23**

"நம்முடைய தேவனை அறிந்துகொள்ளவும், அவருடைய உண்மையுள்ள வார்த்தைகளை நம்புவதற்கும் நாம் கற்றுள்ளோம். அழுத்தமான, ஆபத்தான அநேக நேரங்களில் அவருடைய கிருபை நிறைந்த வாக்குத்தத்தங்கள் நமக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது; மேலும், அவர் நம்மை கைவிடுவதில்லை . . . ஒரு வேளை நாம் இந்த நம்பிக்கையை, நம்முடைய ஆத்துமாவுக்கான இந்த நங்கூரத்தை விட்டுவிட்டால், நாம் கரையே இல்லாத கடலில் அலைக்கழிக்கப்பட்டு,

அதன் பலத்த பேரலைகளால் நித்தியமான மரணத்திற்கு இழுத்துச் செல்லப்படுவோம். ஒரு மகா உபத்திரவக் காலமானது முழு உலகத்தின் மீது இப்பொழுது வரவிருக்கின்றது. மேலும், கர்த்தருடைய ஜனங்களில் யாருடைய விசுவாசமும், நம்பிக்கையும் கற்பாறையின் மீது உறுதியாய் நங்கூரமிடப்படவில்லையோ, யார் அவருடைய வாக்குத்தத்தத்தின் மீது நம்பிக்கை வைக்க பயப்படுகின்றார்களோ, இவர்கள் புயலில் மூழ்கடிக்கப் படுவார்கள். இப்படியான அனுபவம் நமக்கு வேண்டுமா? . . . கர்த்தருடைய உண்மையான பிள்ளைகளில் சிலர், இந்த மகா உபத்திரவக் காலத்தில் தங்கள் பங்கைப் பெற்றிருப்பார்கள், என்றாலும் உண்மையும், கீழ்ப்படிதலும் உள்ள எவரும் இவ்வனுபவங்களுக்குள் கடந்து செல்லுவதில்லை. இவர்களின் ஓட்டம் முடிவு வரையிலும் இவர்கள் பூரண பாதுகாப்பிற்குள் வைக்கப்படுவார்கள். மேலும், இவர்கள் மாபெரும் புயல் பெரும் சீற்றத்துடன் வருவதற்கு முன்பு 'திரைக்குள்ளாகச்' சேர்க்கப்படுவார்கள் என்று நாம் நம்புகின்றோம்." R. 5497, c.2, p.2, 3, 4.

---

**"கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடும், அமைதலோடும் காத்திருக்கிறது நல்லது." புலம். 3:26.**

"தேவனுக்கு முழுமையாக சொந்தமானவர்களாகிய அவருடைய ஜனங்களுக்கு மாத்திரமே உரியதாகிய தேவனுடைய வார்த்தைகளிலுள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள், இவர்கள் நம்புவதற்கு ஏதுவான காரணமாயிற்று; இவர்கள் பலமுடன் இருப்பதற்கும், தைரியத்துடன் இருப்பதற்கும் முழு அதிகாரமுடையவர்கள். தேவனுடைய பிள்ளைகளும், உலகத்தாரைப் போன்ற சோதனைகளையும், அனுபவங்களையும் பெறுவார்கள்; இது தவிர கிறிஸ்துவின் பின்னடியார்களாகிய தங்களுக்கே உரிய அனுபவங்களையும் பரீட்சைகளையும் பெறுவார்கள். இவைகள் உலகத்தார் மீது தற்செயலாய் வராதது போன்று, நம்மேலும் தற்செயலாய் வராமல், கர்த்தருடைய நேரடி கண்காணிப்பின் கீழ் வருகின்றது. . . . ஆகவே, கர்த்தருடைய வார்த்தை இவர்கள் தங்கள் பாதையில் முன்னேறுகையில் தைரியமுடன் இருக்க வேண்டும் என்று வழிநடத்துகையில் இவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். அநேக இடர்பாடுகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது. மேலும், இடர்பாடுகளைச் சமாளிக்க தைரியம் அவசியமாய் உள்ளது. ஆனால் தேவன் மீதும், அவருடைய 'மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்' மீதும் வைக்கும் விசுவாசத்தினால் உண்டாகும்

தைரியமானது அவர்களைப் பெலப்படுத்துகின்றது; இவ்வாறாக இல்லையெனில் அவர்கள் மூழ்கடிக்கப்பட்டிருப்பார்கள். இது மற்ற அனைவரும் அனுபவித்திராத ஒரு பலத்தை அவர்களுக்கு அளிக்கின்றது." R. 5712, c.1, p.4, 7.

---

**"கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கின்றார்." நாகூம் 1:7.**

"அவர்கள் (பரிசுத்தவான்கள்) தேவ திட்டத்தின்படி முழு உலகத்தையும் ஆசீர்வதிக்கும் பணிக்குத் தயார்படுத்துவதற்காகவே உபத்திரவம் அனுமதிக்கப்பட்டிருப்பதைப் புரிந்துகொண்டு, இவையனைத்திலும் ஆறுதலும், மகிழ்ச்சியும் அடைவார்கள். . . . இவ்வாறாக தெய்வீக வாக்குத்தத்தங்களால் தேற்றப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற பரிசுத்தவான்களின் முதல் கடமை என்னவெனில், எங்கும் சூழ்ந்திருக்கும் துன்பங்களிலும், அதிருப்தியின் மத்தியிலும் உபத்திரவங்களையும், பாடுகளையும் இவர்களும் அனுபவித்தாலும், தேவனுடைய வசனத்தில் முன்னுரைக்கப்பட்ட, மகிமையான முடிவின் பொருட்டு நம்பிக்கையுடையவர்களாயிருந்து, எப்பொழுதும் சந்தோஷமும், மகிழ்ச்சியும் உடையவர்களாக இருப்பதை உலகம் காணும்படி செய்வதேயாகும்." A. 338, p.2, 3.

---

**"என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறது போல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்." மல்கி. 3:17.**

"இந்த சம்பத்துக்களில் முதலாவது நமது கர்த்தர் இயேசு ஆவார். . . 'நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்' என்று எழுதியிருக்கிறபடி, (யேகோவா) அவர் அந்த மற்ற சம்பத்துக்களைத் தமது குமாரனுக்கு ஒப்பாக செதுக்கப்படவும், மெருகூட்டப்படவும் ஏற்பாடு செய்துள்ளார். இந்த விலையுயர்ந்த கற்கள் அனைத்தும், இந்த சம்பத்தைச் செய்கிறவராகிய தேவனால் கண்டுபிடிக்கப்பட வேண்டும். ஆனால் அவரால் கண்டுபிடிக்கப்பட்டு, விலையுயர்ந்த கற்களைப் பட்டைதீட்டும் மகா பெரியவராகிய நமது கர்த்தர்

இயேசுவின் கைகளில் அவைகள் செதுக்கப்படவும், மெருகூட்டப்படவும், இராஜ்யத்தில் தன்னோடு, பிரகாசிக்கும்படியான மகிமையான வேலைக்கு, அவைகள் பொருத்தப்படும்படியாக, அவருடைய கைகளில் வைக்கப்படுகின்றது....சகலபாடுகளிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற விதத்தில் அவர் இந்த வகுப்பினரை கடாட்சிக்கவில்லை. காரணம், இவர்கள் இவ்வாறாக கடாட்சிக்கப்பட்டால் இவர்கள் இந்தப் பரீட்சையின் காலத்தைத் தொடரும் மகிமையில் பங்கடைய முடியாது. அவர் தலையாகிய இயேசுவையும் கடாட்சிக்கவில்லை. . . . ஆனால் அவர்கள் தாங்கிக்கொள்வதற்கும் மேலாக அவர்கள் சோதிக்கப்படுவதற்கும் அவர் அனுமதிப்பதில்லை. அவர் அவர்கள் மேல் அக்கறை கொண்டுள்ளார்; அவர்களுக்காக அனுதாபம் கொண்டுள்ளார்; மேலும், அவர்களுக்கு மிகவும் பாரமானதாய் இருக்கும் விஷயங்களிலிருந்தே அவர்களை விடுவிப்பார்." R.5119, c.1, p.2,3,4.

---

# “மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்”

## “புதிய ஏற்பாடு”

**“மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.” மத். 4:4.**

“தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் வார்த்தையினால் நாம் எப்படிப் பிழைக்கக்கூடும்? இயேசு இங்கு எதைக் குறிப்பிடுகின்றார்? எப்படித் தேவனுடைய வார்த்தை ஜீவனைக் கொடுக்கும்? நித்திய ஜீவனை அடைவதற்கான எல்லா நம்பிக்கையும் தேவன் மீது —தெய்வீக திட்டம் மற்றும் அதன் வாக்குத்தத்தங்கள் மீது சார்ந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வாக்குத்தத்தங்களை நாம் பார்க்கும்போது தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட சகல சிருஷ்டிகளும் அவருடன் இசைந்து காணப்பட்டும், விசுவாசம், அன்பு மற்றும் கீழ்ப்படிதலில் தொடர்ந்து நிலைத்திருந்தால் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதே, உலகம் உண்டாவதற்கு முன்னதாகக் காணப்பட்ட தெய்வீக திட்டமாகத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகின்றது. இதுவே இக்கருத்தைக் குறித்ததான தேவனுடைய வார்த்தையாக உள்ளது. அதாவது, **கீழ்ப்படிதலே** நித்திய ஜீவனைப் பெறுவதற்கான நிபந்தனையாக உள்ளது. இந்தக் காரியங்களை உள்ளடக்கியே கர்த்தர் இந்த வார்த்தைகளைச் சொல்லியிருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.”
R. 4896, c.2, p.5, 6.

---

**“ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.” மத். 5:3.**

“கர்த்தர் மீது நம்பிக்கையையும், அவரைச் சார்ந்து இருக்கும் தன்மையையும் வளர்த்துக் கொள்பவர்களுக்கு தற்கால சூழ்நிலைகள் விசேஷித்த வண்ணமாக உதவியாய் உள்ளது. இதன் அடிப்படையில் நாம் பார்க்கும்போது பணக்காரர்களைக் காட்டிலும் ஏழைகளுக்கே சாதகமான சூழ்நிலைகள் உள்ளன. ஆனால், இங்குக் கர்த்தர் வயல்களில் வளரும் லீலிபுஷ்பங்களைப் போன்ற

எளிமையானவர்களையே குறிப்பிடுகின்றார். . . . ஆவியில் எளிமை உள்ளவர்களே, தங்களால் ஒன்றும் முடியாது என்று உணர்ந்துகொள்கிறார்கள். இவர்களே, இயேசு மாத்திரம் கொடுக்கக்கூடிய இளைப்பாறுதல் மற்றும் சமாதானத்திற்காக ஏங்குகின்றனர். இவர்களே, இந்த இளைப்பாறுதலுக்காக அவரண்டை வருபவர்கள். இவர்களுக்குப் போதகருடைய எல்லா கிருபையான வாக்குத்தத்தங்களும், ஞானத்துக்கேதுவான படிப்பினைகளும், ஆறுதலும், போதனைகளும் கொடுக்கப்படும்." R. 5991, c.2, p.3.

---

**"துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்." மத். 5:4.**

"சுயம், உலகம் மற்றும் பாவத்தை ஜெயங்கொள்ள யாரெல்லாம் உண்மையாகப் போராடுகின்றார்களோ, அவர்கள் கண்டிப்பாக தங்களுடைய பாதையில் அநேக முறை தோல்வி அடைகின்றனர். மேலும், இவ்வழிவிலகுதலின் காரணமாக துயரப்படுகிற அனுபவங்களையும் அதிகமாகப் பெற்றுக்கொள்கின்றனர்—இது, ஒருவேளை அவர்களுடைய இருதயங்கள் கர்த்தரிடத்தில் சரியான மனப்பான்மையோடு காணப்படும் பட்சத்திலேயே ஆகும். 'அவர்கள் ஆறுதலடைவார்கள்' என்று இத்தகையவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமானது உண்மையில் கிருபை நிறைந்ததேயாகும். அவர் அவர்களது பாவத்திற்கு எதிரான கண்ணீர் மற்றும் பாவத்திற்கு எதிரான அவர்களது முயற்சிகளையும் கவனிக்கிறார் என்றும், இக்கால அனுபவங்கள் மூலம் அவர் அவர்களை தயார் செய்து, இராஜ்யத்திற்குரிய குணநலன்களை அவர்களில் வளரச் செய்கிறார் என்ற நம்பிக்கையில் நமது கர்த்தர் இத்தகையவர்களுக்கு ஆறுதல் அளிக்கின்றார்." R. 2250, c.1, p.4.

---

**"சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்." மத். 5:5.**

"சென்சுரி (Century) அகராதியின்படி, சாந்தம் என்ற வார்த்தையின் பொருளானது—'சுயத்தைக் கட்டுக்குள் வைத்தல் மற்றும் நற்குணம் வாய்ந்த சாந்தமான தன்மை; எளிதில் சினமடையாத அல்லது எளிதில் கோபங்கொள்ளாத் தன்மை; பாதிப்பு அல்லது எரிச்சலூட்டும்போது அமைதியாகப் பொறுத்துக்கொள்ளுதல்.' வெப்ஸ்டர் (Webster)

அகராதியின்படி சாந்தகுணத்தின் பொருள்—‘தெய்வீக சித்தத்திற்குக் கீழ்ப்படியும் தன்மை; நன்மை தீமை சார்ந்த கொள்கைகள் மற்றும் மதம் சார்ந்த நம்பிக்கையின் தூண்டுதலினால் வெளியாகும் பொறுமை மற்றும் நற்குணம் வாய்ந்த தன்மையாகும்.’” R. 3734, c.2, p.2.

“மற்றவைகளைப் போல... இதற்கான பலனும் எதிர்காலத்தில் தான் உள்ளது. . . . இவர்கள் தேவனுடைய சுதந்தரர்களும், இயேசு கிறிஸ்துவின் உடன் சுதந்தரர்களாகவும் இருப்பார்கள். பூமியும் அந்த மாபெரும் சுதந்தரத்தின் பாகமாக இருக்கிறது. இதை இவர்கள் தெய்வீக ஏற்பாட்டின் கீழ் ஆயிரவருட யுகத்தின் முடிவில் மனுக்குலத்திற்கு ஒப்புக்கொடுப்பார்கள்.” R. 2586, c.1, p.5

---

**“நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.” மத். 5:6.**

“‘அவர்கள் திருப்தியடைவார்கள்’—அவர்கள் மனநிறைவு அடைவார்கள் . . . அவர் அளிக்கும் ஆவிக்குரிய, வலுவூட்டும் சிற்றுண்டிகளைப் பயன்படுத்தவும், அவற்றை நாடவும் யாருக்கெல்லாம் இருதயம் உள்ளதோ, அவர்களுக்கெல்லாம் இந்த ஆசீர்வாதம் உண்டு என்ற கர்த்தருடைய உத்தரவாதம் நமக்குண்டு.” R. 3735, c.1, p.1, 2.

“‘உங்கள் **விசுவாசத்தின்படியே** உங்களுக்கு ஆகக்கடவது’ என்பதே வாக்குத்தத்தமாகும். தேவனுடன் நெருங்கிச் செல்ல வேண்டும் என்ற ஆவல் நம் **உள்ளத்தில்** இருக்க வேண்டும். இவ்வாறு இல்லையெனில், நாம் இன்னும் தொடர்ந்து செல்லவும் முடியாது. கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சிலாக்கியங்களையும் நாம் பெற முடியாது. இத்தகைய ஆவல் நம்மில் இருந்தால், அது நீதியின்மேல் நமக்கு உள்ள பசிதாகத்தின் வெளிப்பாடாகும். அவரோடு ஒப்பந்தம் செய்தவர்களுக்கு நன்மை செய்யவும் அவர்களை **திருப்தி படுத்துவதற்கு** முன்பாக, நமது கர்த்தர் இந்த ஓர் ஆவலை அவர்களிடம் எதிர்பார்க்கின்றார்.” R. 5425, c.1, p.1.

---

**“இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.” மத். 5:7.**

“உங்களுக்கு மற்றவர்கள் செய்த தவறுகளை நீங்கள் மனப்பூர்வமாய்

மன்னிக்கக்கூடிய இருதயம் இல்லாதிருந்தால் உங்கள் பரமபிதாவும் உங்களை மன்னியாதிருப்பார்" என்று நமது கர்த்தர் கூறியுள்ளார். இவ்வாறாக, நமது இரக்கம் என்பது சடங்காச்சாரத்தைக் காட்டிலும் மேலானதாகவும், வெளித்தோற்றமான மன்னிப்பைவிட மேலானதாகவும் இருக்க வேண்டும்—இருதயப்பூர்வமாகவும், நேர்மையுடனும் இருக்க வேண்டும் என்று அவர் நமக்குக் கற்றுத்தந்துள்ளார். நமக்குகிறிஸ்துவின் மூலம் வரும் தெய்வீக இரக்கம் எவ்வளவாய் தேவை என்று உணருகின்றோமோ அவ்வளவாய் நாம் மற்றவரிடமும் இரக்கம் பாராட்ட வேண்டும்—விசேஷமாக சகோதர, சகோதரிகளிடம் இரக்கம் காட்ட வேண்டும்." R. 3735, c.1, p.5.

---

**"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்." மத். 5:8.**

"சுத்தமுள்ள இருதயம் என்பது **முழுவதும் அர்ப்பணம் செய்த** இருதயமாகும்—முழு மனதும் தேவனுடைய சித்தத்திற்கு என்று, ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ள நிலையாகும்." R. 5277, c.2, p.1.

"நாம் முழு மனுக்குலத்திடமும், கர்த்தரிடமும் நோக்கம், அன்பு முதலியவைகளில் முழு பரிசுத்தம் அடைவோம்" என்றும், "உள்நோக்கம் இல்லாத பெலவீனங்கள் மற்றும் நம்மில் நாம் உணர்ந்த கறைகள் மற்றும் நம்மைக்காட்டிலும் மற்றவரால் நம்மில் உணரப்பட்ட கறைகளையும் அவர் எண்ணாமல், அவருடைய பிரியமானவருக்குள் நம்மையும் அவர் ஏற்றுக்கொள்வார்" என்கிற எண்ணம் எவ்வளவு அன்பிற்குரிய எண்ணமாய் உள்ளது. இவர்கள் தேவனை தரிசிப்பார்கள் என்றும், இவர்கள் இப்பொழுது தேவனுடைய குணநலன் மற்றும் திட்டம் பற்றித் தெளிவாகப் புரிந்துள்ளனர் என்றும், இவர்கள் உயிர்த்தெழுதல் மூலம் மறுரூபம் அடையும்போதும் தங்களுடைய அன்பான இரட்சகரின் சாயலில் விழித்தெழும்போதும் அவரை தரிசிப்பார்கள் என்ற கருத்து எத்துணை ஆசீர்வாதமாய் உள்ளது." R. 3735, c.2, p.4.

---

**"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்தரர் என்னப்படுவார்கள்." மத். 5:9.**

"யாரெல்லாம் உண்மையானதையும், அன்பானதையும்,

கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் ஒருவருக்கொருவர் பேசும்போதும் இவைகளையே பேசுவார்கள்; எனவே, இருதயத்தின் நிறைவிலிருந்து நமது வாய் பேச நமது இருதயங்கள் நன்மைகளால் நிரப்பப்பட்டு இருப்பது அவசியம் . . . இப்படிப்பட்டவர்களுக்கு அவர்களது முயற்சிக்குரிய ஒரு விலையேறப்பெற்ற வாக்குத்தத்தம் உள்ளது— 'அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்'—இவர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்றவர்கள், தம்முடைய அருமை குமாரனுடைய சாயலையும் சிறிதளவு தேவன் இவர்களுடைய இருதயத்தில் கண்டார். . . . இந்தப் பரீட்சையே குறிப்பாக நமக்கு உள்ளது என நாம் உணரலாம்; இன்னும் சொல்லப்போனால், மற்றவர்களுக்கும் இந்தப் பரீட்சையே உள்ளது. அது, தேவனுடைய புத்திரர்களாக தாங்கள் வளர்வதைக் குறித்த அடையாளமாகும் — நமது சமாதானத்திற்கு ஏதுவான பண்புகள் மற்றும் நம்முடைய வாழ்க்கையில் சமாதானத்திற்கு ஏதுவான செயல்களைத் தொடர்ந்து நடத்துவதில் நம்முடைய ஜாக்கிரதை உணர்வுக்கான அடையாளமாகும்." R. 2588, c.1, p.4, 5.

---

**"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது." மத். 5:10.**

"கர்த்தர் மீதும், எதிர்கால வாழ்க்கையைக் குறித்ததான அவருடைய கிருபையான வாக்குத்தத்தங்கள் மீதும் உள்ள நமது விசுவாசம் மற்றும் நம்பிக்கை பலமாய் இருக்க வேண்டும். இதினிமித்தம் உலகத்திலிருந்தும், கள்ள சகோதரர்களிடமிருந்தும், சாத்தானால் குருடாக்கப்பட்ட வேலையாட்களிடம் இருந்தும் வரும் எதிர்ப்புகளைச் சமாளிக்கும் வலிமையைக் கொடுப்பதோடு அல்லாமல்,—இந்தத் துன்பங்கள் அனைத்தும் தேவன் கட்டி எழுப்பும் மகிமையான ஆலயத்தின் ஜீவனுள்ள கற்களாக நம்மை உளியால் செதுக்கவும், வடிவமைக்கவும், மெருகூட்டுவதற்கும், தெய்வீக ஏற்பாட்டின் கருவிகளாக இருக்கின்றது என்று உணரவும்படுகின்றது. நமக்கு வரும் சோதனைகளை இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கையில், நம்மால் உண்மையாக நம்முடைய ஆத்துமா மற்றும் வாழ்க்கையை நம் ஆளுகைக்கு உட்படுத்தி, துன்பங்கள் மத்தியிலும், **சந்தோஷத்தோடு சகித்து** நிலையான மகிழ்ச்சியை அடையலாம்." R. 2791, c.1, p.5.

**"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்." மத். 5:11.**

"'பாக்கியவான்களாயிருப்பீர்கள்' என்பது **துன்பங்கள்** தேவனிடமிருந்து வரும் கிருபை என்பதைக் குறிக்கின்றது. . . . அது நிந்தனையின் காரணமாய் அல்ல, மாறாக கிறிஸ்துவினிமித்தம் உங்கள் பேரில் **பொய்யாய்ச்** சொல்வார்களானால் நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். . . அவர் நிமித்தமாய் நமக்கு வரும் பாடுகள், உபத்திரவங்கள் மூலம், பெரிதான, நித்திய மகிமை நமக்கு சேர்த்து வைக்கப்படுகின்றது. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது நாம் துன்பப்படுவதற்காக ஆவல் கொள்ளவேண்டும். . . . ஒருவேளை அது இல்லை என்றால், கர்த்தரின் உண்மையான சீஷத்துவத்தின் ஓர் அடையாளத்தை நாம் இழக்கிறோம் என்று உணர வேண்டும். தேவனுடைய திட்டத்தில் இது நம் பங்கு என்று பார்க்கும்பொழுது சந்தோஷப்படுகின்றோம்." R. 5544, c.1, p.4-6.

---

**"சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே." மத். 5:12.**

"இத்தகைய அனுபவங்கள் நேரிடும்போது வாட்டமும், ஊக்கம் இழந்த உணர்வும் கொள்ளாமல், அவைகளை விநோதமாக எண்ணாமல், தேவன் நம்மை எதிர்க்கிறார் என்பதற்கு அடையாளமாக எண்ணாமல், அதற்கு மாறாக எண்ண வேண்டும். 'இதைப் போன்ற அனுபவங்கள் கர்த்தருக்கும், கடந்த காலத்தில் வாழ்ந்த அவருடைய ஜனங்களுக்கும் இருந்தது' என்று நமக்குள்ளே நாம் சொல்ல வேண்டும். . . . ஊக்கம் இழந்த நிலையில் இல்லாமல், நாம் சந்தோஷப்பட வேண்டும்—துன்ப நேரத்தில் யாராலும் சந்தோஷம்கொள்ள முடியாது. ஏனென்றால், துயரப்படுதல் என்பது இடர்பாடு தருவதாகும். ஆயினும், 'பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருப்பதினால்' சந்தோஷப்பட வேண்டும்." R. 5545, c.1, p.5.

---

**"அற்ப விசுவாசிகளே இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?" மத். 6:30.**

"வறுமை உங்களை நசுக்குகின்றதா? அது பெரும் கவலையுடன்

கூடிய எண்ணங்களை உருவாக்குகின்றதா? அதையும் கர்த்தரிடம் ஜெபத்தில் கொண்டுச் செல்லுங்கள். பின்னர் கையில் உள்ளவற்றைக் கொண்டு தகுந்த வாழ்க்கையைத் தளரா உழைப்பின் மூலம் நடத்திச்சென்று . . . பொறுமையோடும், நம்பிக்கையோடும் அவருடைய பராமரிப்பிற்கான அறிகுறிகளுக்காகக் காத்திருந்து கண்காணியுங்கள். . . . "அவர் காட்டுப் புல்லுக்கு இவ்விதமாய் உடுத்துவித்தால் . . . அவர் உன்னையும், உன்னுடையவைகளையும் உடுத்துவிக்கவும், போஷிக்கவும் வல்லமையும், சித்தமும் கொண்டவராகவும் இருக்கிறார் என்று அவர் வாக்களித்துள்ளார்." R. 1865, c.2, p.6.

---

**"இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." மத். 6:32, 33.**

"நாம் தேவனுடைய இராஜ்யத்தை நம்முடைய வாழ்க்கையில் பிரதானமாக நாட வேண்டும்....நாம் அவருடைய இராஜ்யத்தை நாடித் தேடும்போது, அந்த நாடுதல் நம்முடைய சில பூமிக்குரிய வாய்ப்புகளுக்கு இடையூறாய் இருக்குமாயின் அது நன்மையே. இராஜ்யத்தை நாடுவதில் நம்முடைய **எல்லாவற்றையும்** இழக்க வேண்டும் என்று போதகர் கூறியுள்ளார்." R. 5048, c.2, p.5.

"இராஜ்யத்தை நாம் **முதன்மையானதாக** வைப்போமானால், நம்முடைய எல்லா பூமிக்குரிய தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்." R. 5917, c.2, p.4.

---

**"உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது." மத். 10:30.**

"இத்தகைய அன்பு மற்றும் நிலையான பராமரிப்பை உணரும்போது, அது எவ்வளவாய் இனிமையுடையதாய் உள்ளது." R. 5803, c.1, top

"இவர்கள் தங்களுடைய காரியங்களில் எதுவும் தற்செயலாய் நடந்தது என்று கருதக்கூடாது. காரணம், இவர்கள் தங்களையே கர்த்தருக்கென்று முழுமையாகத் தத்தம் செய்துள்ளதாலும், அவரும் இவர்களை முழுமையாக ஏற்றுக்கொண்டதாலும், இவர்களுடைய

எல்லா காரியங்களும், அதாவது சிறியதானாலும், பெரியதானாலும், எல்லாமே—அவர்களது "ஆரோக்கியம் (அ) நோய்பட்ட நிலை, அவர்களது உரிமை (அ) சிலாக்கியங்கள், அவர்களது சந்தோஷம் (அ) துக்கம்" அனைத்துமே தெய்வீக மேற்பார்வையின் கீழுள்ளது." R. 3415 c.2, bottom.

"தலையிலுள்ள மயிர்களெல்லாம் கூட அவர் எண்ணுகிறவராயிருக்கும்போது, எந்த ஒரு காரியம் அவர் பார்வைக்கு மறைக்கப்படத்தக்கதான சிறிய காரியமாய் இருக்கும்? நம்முடைய இன்றைய குடும்பம் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட தேவைகளானாலும், நமக்கு அவருடைய அன்பான உதவி மற்றும் இரக்கம் பெற்றிருக்கிறோம்." R.1865, c.2, p.4.

---

**"பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்." மத். 11:27.**

"ஒரு சராசரி வாசகன், இந்தப் பகுதியை முதல்முறையாக வாசிக்கும்பொழுது, ஓரளவான அர்த்தத்தையே பெறுவான். எந்த ஒரு கிறிஸ்தவன் பல காலங்களாக கிருபையிலும், கர்த்தரை அறிகிற அறிவிலும் முன்னேற்றம் காண்கிறானோ, அப்படிப்பட்டவன் இதை இன்னும் அதிகமாக அர்த்தம் கொள்ளக்கூடும். ஆரம்பத்தில் அவன் இயேசுவையும், பிதாவையும் பற்றிக் குறைவாகவே அறிந்திருந்தான் எனினும், . . . இப்பொழுது பிதாவையும், குமாரனையும் மிகவும் நெருக்கமாக அறிந்துகொள்ள, அதாவது அவர்களோடு நன்கு பரிச்சயமாகி, ஒருவன் தன் நெருங்கிய நண்பனின் மனதை, இருதயத்தை அறிந்துகொள்வது போல அவர்களின் மனதை அறிந்துகொள்வது என்பதும் வெவ்வேறான காரியம் என்று உணர்கிறான். இத்தகைய நெருக்கமான உறவை பெற்றுக்கொள்வது என்பது பெரிய சிலாக்கியம் ஆகும். இது எல்லோருக்கும் கிடைக்காது; கிடைக்க வேண்டும் என்றால் தொடர்ந்து அவரை நாட வேண்டும், கதவை தட்ட வேண்டும். இப்படியான நாடுதல் மற்றும் தட்டுதல் என்பது அவர்களோடு நெருக்கமான தோழமை மற்றும் ஐக்கியம் வைப்பதற்கான உண்மையான ஆவல் ஆகும்." R. 2624, c.2, p.4.

**"இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத். 18:10.**

"நமது போதகரின் வார்த்தையின்படி பார்க்கும்போது, தங்களை தத்தம் செய்தவர்களுக்கு, அதாவது இப்பொழுது விசேஷமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் பாதுகாப்பிற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தூதர்கள் இருப்பது தெரிய வருகின்றது. இதைச் சொல்ல, அவர் வேறுவிதமான சொற்றொடரைப் பயன்படுத்துகின்றார். அதாவது, நம்பிக்கை தரும் விதத்தில் இந்தத் தூதர்கள் இவர்களுக்கடுத்த காரியங்களில் அக்கறை காட்டுவதில் எந்த ஒரு தாமதமும் செய்வதில்லை, வேறு எந்த முக்கியமான பரலோக வேலைகளினால் தடுக்கப்படுவதுமில்லை, மாறாக, தெய்வீக சமுகத்திற்கும், கவனத்திற்கும் நேரடியாகவும் உடனடியாகவும் அணுகுவதால் நமது விருப்பங்களுக்கு போதுமான எல்லா கவனமும் செலுத்தப்படும் என்ற நம்பிக்கையை அவர் அளித்துள்ளார்."
R. 3441, c.1, p.2.

---

**"இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்." மத். 28:20.**

"யாரெல்லாம் அவரிடம் உண்மையாக இருக்கின்றார்களோ? யாருக்கெல்லாம், 'நான் என் நேசருடையவள், என் நேசர் என்னுடையவர்' என்று உண்மையாகச் சொல்லக்கூடுமோ, இவர்களுக்கெல்லாம் வரப்போகிற வாழ்க்கைக்கான வாக்குத்தத்தம் மட்டும் கொடுக்கப்படாமல், இக்காலத்திற்கான வாக்குத்தத்தமும் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்கள், 'இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்' என்ற நமது போதகரின் குரலைக் கேட்கிறார்கள். மேலும், இந்த யுகத்தின் முடிவு காலத்தில் அவர் விசேஷித்த விதமாய் அருகாமையிலும், விலையேறப்பெற்றவராகவும் இருந்து உண்மையாய் இருப்பவர்களுக்கு தன்னை விசேஷமான முறையில் வெளிப்படுத்தப்போகிறார், அதுவும் அவள் அவரை மகிமையில் பார்க்கத்தக்கதாக மறுரூபமாவதற்கு முன்னமே அவர் அவளுக்கு தன்னை வெளிப்படுத்துகிறார். தெய்வீக வார்த்தைகளில் இருந்து பெற்றுக்கொண்ட 'மகா மேன்மையும்

அருமையுமான வாக்குத்தத்தங்களைத் தங்களுக்கு' செயல்படுத்துவதும், அது தங்களுக்கு உரியது என உணர்ந்து கொள்வதும் இவர்களது சிலாக்கியம் ஆகும்." R. 4784, c.1, p.3, 4.

---

**"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிகநிச்சயம் அல்லவா." லூக்கா 11:13.**

"நாம் ஆவல் கொண்டு, இன்னும் அதிகமதிகமான பரிசுத்த ஆவியைக் கேட்பதில் பரலோகப் பிதா மகிழ்ச்சி கொள்கிறார்—இந்த மனோபாவம் அவருடைய ஆவியோடு முழுவதுமாக இசைந்தும் காணப்படுகின்றது. யாரெல்லாம் இவ்விதமாய் ஆவல்கொண்டு, இதைக் கேட்டு, இதை நாடுகின்றார்களோ, இவர்கள், தாம் கொண்டிருந்த நல்ல விருப்பங்களைப் பெற்றுக்கொள்வார்கள். ஆவிக்கு தடையான காரியங்கள், இவர்களிடமோ அல்லது இவர்களது சுற்றுப்புறத்திலும் காணப்படுமாயின் அவைகளை ஜெயம் கொள்ளத்தக்கதாகச் செய்யவும், அதன் காரணமாக அவர்களில் அவருடைய அன்பின் ஆவி அதிகமாக இருக்கும்படிச் செய்வதில் அவர் மகிழ்ச்சி கொள்கிறார்—அவருடைய ஆவியினால் அவர்கள் நிரப்பப்படத்தக்கதாக . . . யாரெல்லாம் உண்மையான ஆவல்கொண்டு, ஜெபத்தின் மூலம் அதை நாடி முயற்சி எடுக்கிறார்களோ, அவர்கள் மட்டுமே பரிசுத்த ஆவியை அதிகமாகப் பெற்றுக்கொள்வார்கள்." E. 223.

---

**"பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." லூக்கா 12:32.**

"பரலோகத்திலும் பூமியிலுமுள்ள வேறு எந்தச் சிருஷ்டியும் இவ்விதமான சிறப்பான கிருபையைப் பெறமுடியாது. மேலும், வேறு எந்தச் சிருஷ்டியாலும் கிறிஸ்துவின் அன்புக்குரிய மணவாட்டியின் இடத்தைப் பெறவும் முடியாது. பரலோகம் மற்றும் பூமியின் குடும்பங்கள், அவர் மூலம், ஆசீர்வதிக்கப்பட்டாலும், அவருடைய வேலையில் அவரோடு ஒத்துழைக்கும் அவருடைய மனைவி மாத்திரமே அவருடைய உடன் ஆளாய், அவளே அவருடைய நம்பிக்கைக்குரியவளும், அவருடைய பொக்கிஷமாகவும் இருப்பாள்." R.5862, c.2, p.4.

"தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்கிற முடிவை வெகு சிலரே எடுத்தாலும், இன்னும் குறைவானவர்களே, **தங்களுடைய இருதயத்தை** எப்பொழுதும் கர்த்தருடைய சித்தத்திற்கே ஒப்புக்கொடுத்திருந்து அந்த அர்ப்பணிப்பின்படி நடைமுறையில் வாழ்கிறவர்களாய் இருப்பார்கள்." R.1563, c.2, top.

---

**"அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." லூக்கா 12:37.**

"யாரெல்லாம் அறுவடை காலத்தில் இருக்கிறோம் என்று ஒப்புக்கொள்கிறார்களோ—அதாவது 1875-லிருந்தே அந்தக் காலத்தில்தான் இருக்கிறோம்—என்று யார் ஒப்புக்கொள்கிறார்களோ அத்தகையவர்கள், அந்தக் காலக்கட்டத்தில் அவர் அவருடைய ஜனங்களை தாராளமான ஆவிக்குரிய உணவிற்கு முன்பு பந்தியிருக்கச் செய்வார் என்றும், அவர் அவர்களுக்கு ஊழியராக இருந்து 'புதியதும் பழையதுமான' சத்தியங்களை அவர்களுக்குக் கொடுப்பார் என்றும் கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணினதைக்கூட உண்மையென்று ஒப்புக்கொள்ள வேண்டும். யாரெல்லாம் இந்தக் காரியங்களை உணர்கின்றார்களோ, அவர்கள் இந்த *வேதாகமப் பாடங்களைப்* பார்க்கும்பொழுது, இந்த வாக்குத்தத்தம் நிறைவேறியுள்ளதை அடையாளம் கண்டு கொள்வார்கள்." R. 4709, c.2, p.5.

---

**"எல்லோரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்." யோவான் 6:45**

"யார் ஒருவர் கர்த்தரால் தொடர்ந்து போதிக்கப்பட்டிருக்க வேண்டுமோ, அவர் தொடர்ந்து கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்க வேண்டும். மேலும், அவருடைய இருதயம் தொடர்ந்து செவி சாய்க்கவும், கீழ்ப்படியவும் கூடிய மனப்பான்மையிலும் இருக்க வேண்டும். சிலரிடத்தில் பிரச்சனை என்னவென்றால், அவர்கள் தங்கள் சுயசித்தத்தை இன்னும் முழுமையாக முடிவுக்குக் கொண்டு வரவில்லை, அதாவது மரிக்கச் செய்யவில்லை—அதாவது அவர்களுடைய அர்ப்பணிப்பு முழுமையாகவில்லை. கர்த்தருடைய

சத்தத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று ஓரளவு அர்ப்பணித்து இருந்தாலும், கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்க வேண்டும் என்று தங்கள் சார்பில் சில எண்ணங்களைக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்க கர்த்தருடைய வார்த்தைகளை விளக்க விரும்புவார்கள். இவர்கள் தங்கள் சுயசித்தத்தையே செய்ய விரும்புவார்கள். மேலும், தங்களுடைய சுயசித்தத்திற்கு இசைவாக, தங்களை வழிநடத்தும் கர்த்தருடைய சித்தத்தைக் கேட்க வேண்டும் என்று விரும்புவார்கள். இது மிகவும் ஆபத்தான சூழ்நிலையாகும். மேலும், இதனுடன் சுய இறுமாப்பும், சுய வற்புறுத்தலும் வரும். இறுதியில், இது கிறிஸ்தவனின் இலக்கை விட்டு பின்வாங்கிப் போகச் செய்திடும். ஆகவே, தேவனுடைய பரிசுத்தமான வார்த்தைகளைக் கேட்கத்தக்கதாக உத்தமமான இருதயத்தோடு தொடர்ந்து நாடுவோம் என்றும், நம்மால் முடிந்தவரை அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியத்தக்கதாக வாஞ்சையோடு நாடுவோம் என்றும் நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய கிருபையினால் தீர்மானிப்போமாக.” R. 4092, c.2, p.3.

---

**“அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்.” யோவான் 7:17.**

“இந்தச் செய்தியானது நம்முடைய போதகரின் உதடுகளிலிருந்து வெளிவந்ததாகும். அவருடைய உபதேசங்கள் பற்றின தெளிவான அறிவு பெற அவர் நமக்குக்கொடுக்கும் திறவுகோலானது, மாணவன் தேவனுக்கு தன்னை முழுவதும் தத்தம் செய்தவனாகவும், அவருடைய சித்தம் மற்றும் திட்டம் என்னவென்று அறிந்துகொள்ள முழுவாஞ்சை உள்ளவனாகவும் இருக்கவேண்டும் என்பதேயாகும். சத்தியத்தைத் தெய்வீக வெளிப்பாட்டின்படி தெய்வீக கோணத்தில் பார்க்கவேண்டும் என்றால் . . . நாம் இருதயத்தில் தத்தம் செய்தவர்களாய் உள்ளத்தின் ஆவியினால் தேவனிடத்தில் நெருங்க வேண்டும். அவர் சித்தத்ததைச் செய்ய நாம் விரும்ப வேண்டும். . . . இப்படி இருக்கிறவர்களுக்கு, மேலே சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் பொருந்தும். தேவனுடைய சித்தத்ததைச் செய்ய . . . நாம் சித்தங்கொள்ள தீர்மானிப்போமா? அப்படித்

தீர்மானிப்போமானால், தேவனுடைய வார்த்தை போதிக்கிறபடியே . . . நாம் சந்தேகமின்றி ஆசீர்வதிக்கப்படுவோம். இந்த வகுப்பாருக்கு கிறிஸ்துவின் உபதேசங்களை—தேவனுடைய ஆவியினால் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய ஆழமான விஷயங்களை முழுமையாக அறிந்துகொள்ள, மதிப்பிட, புரிந்துகொள்ள முடியும்." R.5137, c.2, p.3, 5, 6.

---

**"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்." யோவான் 8:31, 32.**

"ஏவுதலினால் எழுதப்பட்ட வார்த்தைகளில் உள்ள போதனைகளில் நிலைத்திருப்பது, அவைகளைக் கற்று அவைகள் மேல் தியானமாயிருந்து, அவைகள் மீது முழுமையான விசுவாசம் வைப்பது மற்றும் அவைகளுடன் உண்மையாக நம்முடைய குணநலன்கள் இசைந்து இருப்பது என்பதே கர்த்தருடைய வார்த்தைகளில் நிலைத்திருப்பதைக் குறிக்கிறது." R. 3153, c.2, p.2.

"ஆசீர்வாதமான வாக்குத்தத்தம்! . . . அன்புடையோர்களே கர்த்தரிடம் இந்த ஒரு தயவைப் பெற்றுக்கொண்ட பின்னர், அதில் நிலைத்திருக்காமல் இருப்போமா? எல்லா சூழ்நிலைகளிலும் இந்த உபதேசத்திற்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருக்க மாட்டோமா? இதற்கு எதிராக எவ்வித தாக்குதல் வந்தாலும் அதைப் பாதுகாக்க முற்படமாட்டோமா? அதினிமித்தம் வரும் பழி கூறுதல்களையும் தாங்கி சகிக்கமாட்டோமா? இந்த உபதேசத்திற்கு நேர்மை உள்ளவர்களாகவும், உண்மை உள்ளவர்களாகவும் இருந்து நாம் அதன் சிறப்புகளை உணர்ந்துள்ளோம் என்று நிரூபிப்போம்." R. 3154, c.2, p.1.

---

**"அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறான்." யோவான்10:3.**

"கர்த்தருக்குச் சொந்தமான ஒவ்வொருவர் மேலும், கர்த்தர் தனிப்பட்ட அக்கறை காட்டுகின்றார் என்ற காரியத்தை சிலர் உணரத் தவறிவிடுகின்றனர். பலியின் உடன்படிக்கையில், பிரவேசித்த

ஒவ்வொரு தேவனுடைய உண்மையான பிள்ளையும் கர்த்தருடையவர்கள் ஆவார்கள். நாம் இதை எப்பொழுதும் நினைவில் வைக்க வேண்டும். . . . தன்னை பின்பற்றுகிற ஒவ்வொருவரிடமும் எஜமான் சிறப்பான மற்றும் தனிப்பட்ட அக்கறை காட்டுகின்றார். அவர் தன்னை மேய்ப்பன் என்று கூறி, சொல்வது என்னவென்றால், 'அவர் தன்னுடைய ஆடுகளைப் **பேர்சொல்லிக்** கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டுபோகிறார்' இது அவருடைய ஒவ்வொரு உண்மையான சீஷர்கள் மீதும், அவர்களுடைய காரியங்களிலும் உள்ள விசேஷமான மேற்பார்வை மற்றும் அக்கறையைக் குறிக்கின்றது. இவர்களுக்கு என்ன நேர்ந்தாலும் அது எதேச்சையாகவோ (அ) அதிர்ஷ்டவசமாகவோ நடந்தது அல்ல." R. 5711, c.2, p.3.

---

**"அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது . . . அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல்,..." யோவான் 10:4, 5.**

"தேவனுடைய மந்தையில் நாம் வந்த பின்னர், நாம் நம்முடைய எல்லா நம்பிக்கையையும் பெரிய மேய்ப்பனிடம் வைக்க வேண்டும். அவர் தொடர்ந்து நம்மை பராமரித்து வருவதையும், நம்முடைய ஆவிக்குரிய நன்மைக்காக அவர் நம்மேல் காட்டும் உயர்வான அக்கறையையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் நல்ல ஆடுகளாய் இருப்போமாக! மந்தையை விட்டு, வலதுபுறமாகவோ அல்லது இடது புறமாகவோ நாம் வெளியே மேய்ந்து அலைகிறவர்களாக இருக்க வேண்டாம். அல்லது பசுமையான புல்வெளிகளையும், சுத்தமான தண்ணீர்களையும் விட்டு, வெளியே கவர்ந்து இழுக்கப்பட்டு ஒதுக்கு வழி அருகே உள்ள முட்செடிகளையும், விஷச்செடிகளையும் மேயக்கூடாது (அ) சேறு கலந்த தண்ணீரையோ, மனிதனின் யூகம் மற்றும் மாயக்கோட்பாடுகள் கலந்த கலப்படத் தண்ணீரையோ குடிக்கக் கூடாது. . . . நாம் கர்த்தருடைய உண்மையான ஆடுகளாய் இருப்போமானால், நாம் அவர் சத்தத்தை அறிவோம். நாம் அறிந்துகொள்வதில் தவறு செய்வதில்லை. உண்மையான ஆடு . . . அவருடைய அழைப்பிற்கு உடனடியாக விடை அளிக்கும். அவருடைய வழிநடத்துதலுக்காக அவருடைய ஆடுகள் காத்திருக்கும்" R. 5491, c.1, p.2, c.2, p.1.

**"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது." யோவான் 10:27.**

"அநேகர் தங்களை கர்த்தருடைய மந்தையிலுள்ள உண்மையான ஆடுகளாக அறிக்கை செய்துகொண்டிருக்கின்றனர். ஆனால், மேய்ப்பனுடைய வந்திருத்தலின் இந்த நாட்களில், அவருடைய சத்தமாகிய சத்தியமே பரீட்சையாக அமைந்துள்ளது." R 2673, c.1, p.1.

"முன்பு இராத அளவு இப்பொழுது வெவ்வேறான பக்கங்களிலிருந்து வெவ்வேறான சத்தங்கள் ஆடுகளை அழைக்கின்றதை நாம் கேட்கின்றோம். இது அவருக்குச் சொந்தமான 'சிறுமந்தையினரை' மற்றவர்களிடமிருந்து பிரித்தெடுக்கும் நோக்கத்திற்கான கர்த்தருடைய ஏற்பாடாகும். அவருடைய ஆடுகள் அவருடைய சத்தத்தைக் கேட்டு, அவருக்குப் பின்செல்கின்றது—மற்ற ஆடுகள் அதாவது, மனித தலைவர்கள், மனித நிறுவனங்கள், மனித கோட்பாடுகள், மனித முயற்சிகள் ஆகியவைகளுக்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள், தங்கள் விருப்பத்திற்கு வளைந்துகொடுத்து அவைகளுக்குப் பின்செல்வார்கள். இவ்விதமாக இவர்கள் 'சிறுமந்தையிடமிருந்து' பிரித்தெடுக்கப்படுவார்கள். மேலும், இதுவே கர்த்தருடைய திட்டமாக உள்ளது." R. 2673, c.1, p.4.

---

**"நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." யோவான் 14:3.**

"கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களின் இருதயத்தில் இந்த வாக்குத்தத்ததின் பொருட்டு மிகுந்த மகிழ்ச்சியுடன்கூடிய நம்பிக்கைகள் மற்றும் அளவுக்கடந்த மேன்மைமிக்க நம்பிக்கைகள் குவிந்து காணப்படும். தேவனை நேசிப்பவர்களுக்கு அவர் வைத்துள்ள எல்லா நன்மையான காரியங்களைத் தொகுத்து, இந்தச் சில வார்த்தைகளில் அடக்கிக் கூறப்பட்டுள்ளது. . . . எந்த அளவுக்கு தேவனுடைய வார்த்தைகளைக் குறித்ததான சாட்சி நம்மில் சரியான ரீதியில் குடிகொண்டு, தெய்வீக அன்பின் நீளம் மற்றும் அகலம் குறித்து உணர்ந்துகொள்ளவும், நம்முடைய அறியாமையில் செய்யும் தவறுகளை மூடி மறைக்கத்தக்கதான தெய்வீக இரக்கத்தையும்

உணர்ந்துகொள்ளவும் உதவுகின்றதோ—அந்த அளவிற்கு கர்த்தருக்கு உண்மையானவர்கள் இந்த வாக்குத்தத்தத்தின் பொருட்டு களிகூரவும், கர்த்தரைச் சந்திப்பது மாத்திரம் அல்லாமல் நித்திய காலமாய் அவருடைய பிரசன்னத்திலும், தோழமையிலும் இருக்க மகிழ்ச்சியோடு எதிர்நோக்கி இருக்கச் செய்யும். ஆனால், மற்ற அனைவருக்கும் . . . இயேசுவின் அடிச்சுவடுகளில் எச்சரிக்கையற்றவர்களாக நடப்பவர்களுக்கு நமது ஆதார வசனத்தின் வார்த்தைகள் குறிப்பிட்ட அளவு மகிழ்ச்சியைக் குறிப்பிட்ட அளவு நம்பிக்கையைத்தான் கொண்டுவருமே ஒழிய, அளவு கடந்த அளவிலான வழிந்தோடல் இருக்காது." R.3191, c.1, p.5,6.

---

**"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்." யோவான் 14:21.**

"மகிமையின் சுதந்தரவாளியும், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களின் சுதந்தரவாளியும், நம்முடைய கீழான நிலைமையின் மீது திருவுளம் கொண்டிருக்கிற தெய்வீகமானவரின் தற்போதைய கூட்டாளியுமான தேவனுடைய பிள்ளை, எப்பொழுதாவது தனித்துவிடப்பட்டவனாக (அ) கைவிடப்பட்டவனாக (அ) ஆறுதல் அற்றவனாக எண்ணலாமோ? (அ) கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடம் இப்பொழுது கிரியை செய்கிற லோகத்தின் அதிபதியினால் உண்டாகும் துரதிர்ஷ்டம் என்னும் பேரலையில் தூக்கி எறியப்படத்தக்கதாக அவர் விட்டுவிடுவார் என்றோ (அ) கைவிடுவார் என்றோ பயம் கொள்ளலாமோ? இல்லை! நமக்கு எதிராக உள்ள அனைத்தைக் காட்டிலும் அவர் பெரியவராய் இருக்கின்றார். 'நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை' (எபிரெயர் 13:5) என்ற ஆசீர்வாதமான வாக்குத்தத்தம் நமக்கு உள்ளதால், நாம் உலகத்தில் தனியாக இல்லை. நம்முடைய சிறு காரியங்கள் கூட கவனிக்கப்படாமல் போவதில்லை." R.1906, c.2, p.2.

---

**"ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." யோவான் 14:23.**

"கிருபையில் வளர்வது என்பது கர்த்தரோடு நெருக்கமான,

தனிப்பட்ட உறவு மற்றும் ஆவியில் அவரோடு ஐக்கியம் வைப்பதால் வளரும் தயையாகும். இது முதலில் அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் வரும் மீட்பு பற்றின அறிவை நாம் பெற்றிருக்க வேண்டும் என்றும், இயேசு மூலம் பிதாவாகிய தேவன் நமக்கு தனிப்பட்ட விசுவாசம் மற்றும் அதைச் சார்ந்து இருக்கும் தன்மை வேண்டும் என்றும், பின் நம்முடைய அன்றாட வாழ்க்கையின் ஜெபத்தில் அவரோடுமிக நெருங்கிய சம்பாஷணை காணப்படவேண்டும்என்றும், அவருடைய சித்தம் என்ன என்று கவனித்து, அதற்குக் கீழ்ப்படிந்து காணப்பட வேண்டும் என்ற இவைகளையே இது குறிக்கின்றது. இவ்வாறான மனப்பான்மையில் நம்முடைய மனம் மற்றும் இருதயம் தொடர்ந்து காணப்பட்டால், நம்மில் ஆவியின் கனிகள் தொடர்ந்து முதிர்ந்து காணப்படும். மேலும், நமது கர்த்தர் நம்மை அங்கீகரிக்கத்தக்கதாகவும், நம்மில் அதிகமதிகமாய் பிரியம் கொள்ளத்தக்கதாகவும் ஒப்புக்கொடுக்க முடியும். நாளுக்கு நாள் தெய்வீக அங்கீகரிப்பு மற்றும் கிருபை பெற்றுக்கொள்வது குறித்ததான உணர்வு, மேற்கூறப்பட்ட நமது கர்த்தரின் விலையேறப் பெற்ற வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலோடு நமக்கு அருளப்படும்.” R.3215, c.1, p.6.

---

**“சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.” யோவான் 14:27.**

“இவ்வாறாக நமது கர்த்தர், அவருடைய பூமிக்குரிய வாழ்வின் கடைசி இரவினில், மிகுந்த இரக்கம் மற்றும் மென்மையுடன் தம்முடைய அருமையான சீஷர்களுக்கு அவருடைய சொத்தான சமாதானத்தை, அவர் பிரியும்போது ஆசீர்வாதமாய்க் கொடுக்கின்றார். இந்தச் சமாதானம் என்பது விலைமதிக்க முடியாதவைகளில் ஒன்றும், அவர் கொடுத்த ஐசுவரியம் உள்ள சொத்துமாகும். இது ஆத்தும வருத்தத்திற்கு வாக்குத்தத்தமாகவும், அவர்தாமே கொண்டிருந்த தேவனுடைய சமாதானமாகிய—இளைப்பாறுதல் மற்றும் மன சமாதானத்தைக் குறித்த வாக்குத்தத்தமாகும். தீமை அனுமதிக்கப்பட்டதின் விளைவாக வந்த குழப்பம் நிறைந்த சூழ்நிலைகளால் சூழப்பட்டிருந்த போதிலும், பிதாவிடம் காணப்பட்ட இந்தச் சமாதானமே நமக்கும் அளிக்கப்பட்டுள்ளது. எனினும் அது ஒரே ஆதாரத்திலிருந்து

அடையப்பெற்றது அல்ல. பிதாவாகிய தேவனிடம் இந்தச் சமாதானம் என்பது தன்னிலே மையம் கொண்டதாய் இருந்தது. ஏனென்றால், அவர் தம்முடைய சர்வ வல்லமைப் பற்றியும், ஞானத்தைப் பற்றியும் அறிந்தவராய்க்காணப்பட்டார். ஆனால்இயேசுகிறிஸ்துவின்சமாதானம் என்பது தன்னில் அல்ல, தேவனிலே மையம் கொண்டிருந்தது, அதாவது, அவருடைய ஞானம், வல்லமை மற்றும் கிருபையின் மேல் விசுவாசம் வைப்பதன் மூலம் தேவனில் மையம் கொண்டிருந்தது. அப்படியே நாமும் 'என்னுடைய சமாதானம்' என்ற கிறிஸ்துவின் சமாதானமாகிய 'தேவனுடைய சமாதானத்தை' பெற்றிருப்போமேயானால், அது அவருடையதைப் போலவே விசுவாசத்தினால் தேவனிடத்தில் மையம் கொண்டிருக்க வேண்டும்." R. 1834, c.1, p.3.

---

**"என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். யோவான் 15:2.**

"அனைத்து கிளைகளும், கர்த்தர் வெட்டிவிடுவதற்குக் கையாளும் முறைகளைக் குறித்து அறிந்திருக்க வேண்டும். இல்லையென்றால் இவர்கள் சோர்வடைந்து, ஊக்கம் இழந்து கொடுக்க வேண்டிய கனிகளைக் கொடுக்காத வண்ணம் போய்விடுவார்கள். சில சமயம் பூமிக்குரிய ஆஸ்தி (அ) சொத்தை எடுப்பதின் மூலமாகவோ (அ) நம்பிக்கையான சில திட்டங்களைத் தடைசெய்வதன் மூலமாகவோ, மாபெரும் தோட்டக்காரர், கிறிஸ்துவின் கிளைகளை வெட்டிவிடுவது போல் தோன்றும்; சிலசமயம் நமக்குத் துன்பங்களை அனுமதிப்பதின் மூலமும் நம்முடைய பெயர் மற்றும் புகழை இழக்கச் செய்வதன் மூலமும், . . . நம்முடைய இருதயத்தில் பலமாக பற்றிக் கொண்டிருக்கும் சில பூமிக்குரிய தோழமைகளை இழந்துபோக அனுமதிப்பதன் மூலமும் நம்மில் உள்ள தேவையற்றவைகளை வெட்டி அகற்றுகின்றார். . . . மற்றும் பலர் அதாவது கர்த்தருடைய அன்பான ஜனங்களில் அநேகர் பேரிடரின் படுக்கையில் அநேக விலைமதிக்க முடியாத பாடங்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். . . . இத்தகைய சுத்தம் செய்தல், ஊக்கம் இழத்தலை உண்டாக்காமல், அவைகளை நன்கு புரிந்துகொண்டு, அவைகளால் ஊக்கம் பெற்றுக்கொள்ளத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். பிதாவாகிய தேவன் தாமே நம்மை நேசிக்கிறார் என்றும், நம்முடைய மேலான நன்மைக்காக நம்மை பராமரிக்கின்றார்

என்பதையும் இந்த விசேஷமான சுத்தம் செய்தல் நமக்கு வரும்போது . . . நாம் உணர்ந்துகொள்ளலாம்.” R. 3545, c.1, p.3-5.

---

**“நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.” யோவான் 15:7.**

“இவ்விதமாக உங்களுடைய இருதயமும் ஊக்கச் சிந்தையும், பிதாவின் திட்டத்தில் மூழ்கியிருக்குமாயின், நீங்கள் உங்கள் இருதயத்தின் சகல விருப்பங்களையும் கேட்கலாம்—‘நீங்கள் விரும்புவதைக் கேட்கலாம்.’ பிதா தம்முடைய திட்டங்களை, உங்களுடைய திட்டத்தின்படி மாற்றி **உங்களுடைய** சித்தத்தைச் செய்வார் என்ற விதத்தில் இந்தப் பெருந்தன்மையுடன் கூடிய வாக்குத்தத்தத்தை நான் (கர்த்தர் இயேசு) உங்களுக்கு அருளவில்லை; மாறாக, நீங்கள் பிதாவுடனும் அவர் செயல்படுத்திக் கொண்டிருக்கும் யுகங்களைக் குறித்ததான தெய்வீக திட்டத்துடனும் முழுமையான இசைவுக்குள் வரும்போது நீங்கள் அதிருப்தி அடையாமல், **உங்கள் விருப்பங்கள்** எப்போதும் நிறைவேறுவதைக் காணலாம். காரணம், உங்கள் சித்தமும், விருப்பமும், உங்கள் மகிழ்ச்சியும், திருப்தியும், தேவனுடைய சித்தமும், திட்டமும் அவருடைய சொந்த வழியிலும், நேரத்திலும் நடந்தேறுவதையே காண விரும்பும். இவ்விதமாக, உங்களுடைய ஒவ்வொரு ஜெபமும், விருப்பமும் நிறைவேறும்—இது தங்களுடைய சுயசித்தத்தை நிறைவேற்ற நாடுபவர்கள் . . . மற்றும் தங்களுடைய **சொந்த** விருப்பங்களுக்காக ஜெபிக்கிறவர்களின் அனுபவங்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாகும்.” R.1999, c.1, last p.

---

**“பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.” யோவான் 15:9.**

“பிதா தன்பேரில் காண்பித்த அதே விதமான அன்பை, நம்முடைய போதகர் நம்மிடமும் கொண்டுள்ளார் என்பது எத்துணை அருமையான காரியமாகும். நம்முடைய விசுவாசம் இக்கருத்தையே எப்போதும் பற்றிப் பிடித்து, நிலைகொண்டிருந்தால், உண்மையில் நாம் விரும்புவதற்கோ

அல்லது பயப்படுவதற்கோ எதுவுமிராது—வருடம் முழுவதும் நமக்கு வசந்த காலமே நீடித்திருக்கும். அடுத்த கருத்து என்னவெனில், கர்த்தருடைய தயவின் இந்த உன்னத நிலையை எட்டிப்பிடித்து அடைந்த பின்னர் நாம் ஒருவேளை அவருடைய சீஷர்களாய் இருந்து, அவர் நமக்குச் செய்துள்ளதை இவ்விதமாய் உண்மையாய் உணர்வோமாகில், அவருடைய அன்பில் நிலைத்திருக்க நாம் விருப்பமுள்ளவர்களாய் இருப்போம். அடுத்து வருவது, அந்த அன்பில் நிலைத்திருப்பதற்கான நிபந்தனைகளும், வரையறைகளுமாகிய அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதுவே நியாயமான கட்டளை என்பதை நமக்கு தெரியப்படுத்தும் விதத்தில், பிதா இதே நிபந்தனைகளையே தன்னிடமும் எதிர்பார்க்கின்றார் என்பதையே உணர்த்தும் விதமாக நமது கர்த்தர் 'நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல' என்று கூறியுள்ளார். கர்த்தருடைய அன்பில் நிலைத்திருந்து அவருடைய கட்டளைகளில் கவனமற்று இருக்கலாம் என்று நாம் எண்ணக்கூடாது." R. 3546, c.2, p.4, 5.

---

**"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்." யோவான் 15:16.**

"உலகம், தெரிந்துகொள்ளப்பட்ட இந்த ஜனங்களை விரும்புவதில்லை; காரணம், இவர்கள் தங்கள் சொந்த பெலவீனங்களை ஒத்துக்கொண்டு, அவைகளுக்கு எதிராகப் போராடி, அவைகளுக்குப் பாவங்கள்—அற்பத்தனங்கள், மாம்சம் மற்றும் ஆவியின் அசுசிகள் என்ற பொருத்தமான பெயர்களை இட்டு அழைக்கின்றனர். இவர்கள் தங்களை சுத்திகரிக்க எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும், தங்களைத் தாங்களே சுத்தம் செய்ய முயலாதவர்களைக் குற்றப்படுத்துகிறதாய் இருக்கின்றது, மேலும், தாங்கள் வீண்பெருமை, பெருமை, சண்டைகள், மோகங்கள், சுயநலம், பேராசை போன்றவைகளில் பெரிதும் நாட்டம் கொள்கின்றனர் என்று சுட்டிக் காட்டப்படுவதை வெறுக்கின்றவர்களையும் குற்றப்படுத்துகிறதாய் இருக்கின்றது. உலகத்திற்கு முழுதிருப்திகரமாய் இருப்பவர்கள், நிச்சயமாக கர்த்தருக்கு திருப்திகரமாய் இருக்கவில்லை என்பதை நன்கு அறிந்திருப்பார்கள். கர்த்தருக்கு திருப்திகரமாய் இருக்கும் எவனும் உலகத்திற்கு திருப்திகரமாய் இருப்பதில்லை. காரணம்,

இந்த உலகத்தோடு கொண்ட ஐக்கியம் தேவனுக்குப் பகையாகும். ஆகவே, உலகமானது தெய்வீக நியமத்திற்குக் கீழ்ப்படுத்தப்படவில்லை. மேலும், அதன் இருதயம் வேறு திசையில் இருப்பதனால் கீழ்ப்பட்டிருக்கவும் முடியாது." R. 5737, c.2, p.5.

---

**"சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; . . . வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்." யோவான் 16:13.**

"பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்களின் மனம் ஒளியூட்டப்பட்டதினிமித்தம்,...தேவனுடைய ஆழமான விஷயங்களை... அவர்களால் புரிந்துகொள்ள முடிந்தது. . . . இவ்விஷயங்களை இயேசு மனதில் வைத்துக்கொண்டு, தம்முடைய சீஷர்களால் அப்பொழுது சில விஷயங்களைப் புரிந்துக்கொள்ள முடியாது என்றும், ஆனால் தாம் அனுப்பும் பரிசுத்த ஆவி, தாம் பேசினவைகள் அனைத்தையும் அவர்களின் நினைவிற்குக் கொண்டுவந்து, 'வரப்போகிற காரியங்களை அவர்களுக்கு அறிவிப்பதினிமித்தம்,' அவர்கள் பின்னர் அறிந்துகொள்வார்கள் என்றும் கூறினார். இது அப்போஸ்தலர்களின் விஷயத்தில் மாத்திரம் உண்மையாய் இராமல், இந்த யுகம் முழுவதும் உள்ள கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் அனைவரின் விஷயத்திலும் உண்மையாய் உள்ளது. . . . இவர்களுக்கே வேதாகமம் அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார் என்று வாக்களித்துள்ளது. இவர்களே ஏற்றகாலத்தில் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்படுவார்கள். இவர்களுக்கே பொக்கிஷமான தேவனுடைய வார்த்தைகளிலிருந்து, 'புதியதும், பழையதுமான விஷயங்கள்' ஆவியின் வழிநடத்துதலின் கீழ் கொடுக்கப்படுவதால், இது 'விசுவாச வீட்டாருக்கு' 'ஏற்றக்கால சத்தியமாக' இருக்கின்றது." R. 5088, c.1, p.6-8.

---

**"அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போட மாட்டான்." யோவான் 16:22.**

"ஒருவனும் நம்மிடத்திலிருந்து எடுத்துப்போட முடியாத நம்முடைய சந்தோஷங்கள் எவை? துன்பங்களும், கஷ்டங்களும், உபத்திரவங்களும், ஆழமும், விரிவும், இன்னும் அதிக தித்திப்பாகவும்

மாற்றச் செய்கிற நம்முடைய சந்தோஷங்கள் எவை? இது எத்தகைய சந்தோஷம்? இந்தச் சந்தோஷங்கள் வரப்போகிற ஆசீர்வாதங்கள் மற்றும் நாம் உண்மையாய்ச் சுதந்தரிக்கப் போகிற நன்மைகளுக்கு ஒரு முன் அனுபவமாகும். நாம் விசுவாசிக்கும் அவர்மேல், நம்பிக்கை கொள்வதினாலும், அவர் ஆரம்பித்த வேலையை அவர் முடிப்பதற்கு விருப்பமும், வல்லமையும் உள்ளவராய் இருக்கின்றார் என்ற நம்பிக்கையினாலும், அவருடைய நன்மையான வழியிலேயே அது நிறைவேற்றப்பட நாம் விரும்புவதினாலும் அந்தச் சந்தோஷம் வலுவடைகிறது. அவருடைய கிருபை நிறைந்த வாக்குத்தத்தங்களை நம்முடைய விசுவாச கரங்களினால் உறுதியாய்ப் பிடித்திருக்கும் வரையிலும், அவரிடத்திலிருந்து நாம் பிரிக்கப்பட அனுமதிக்க மாட்டார் என்ற நம்பிக்கையினாலும், அந்தச் சந்தோஷம் வலுவடைகிறது. . . . 'பிதாவின் கரங்களிலிருந்து நம்மை ஒருவராலும் பிடுங்கிப்போட முடியாது' என்றும் 'பிதா தாமே நம்மை நேசிக்கின்றார்' என்றும், அவருடைய அன்பில் கீழ்ப்படிதலோடு நாம் நிலைத்திருக்க விரும்பும் வரையிலும், அவர் நம்மை விட்டு விடுவதில்லை என்பதே நம்முடைய நம்பிக்கையாய் உள்ளது." R. 2232, c.1, p.1.

---

**"கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்." யோவான் 16:24.**

"நம்முடைய அன்றாட வாழ்க்கையில், கர்த்தரை தம்முடைய ஜீவியமாகவும், தனிப்பட்ட துணையாகவும், நம்பிக்கைக்குரிய நண்பராகவும், ஆலோசகராகவும், ஆற்றுகிறவராகவும், வழிநடத்துனராகவும், மீட்பராகவும், கர்த்தராகவும் நாம் ஏற்றுக்கொள்ளாத வரையில், உலகம் கொடுக்க முடியாததும், எடுத்துக்கொள்ள முடியாததுமான சந்தோஷத்தை அவருடைய சீஷர்களுக்கு கொடுக்கிற விலையேறப் பெற்ற பாடங்களை அவரிடத்திலிருந்து முழுமையாய் நாம் கற்றுக்கொள்ள முடியாது. உலகம் மற்றவர்களை (அப்போஸ்தலர்களை) அடையாளம் கண்டு கொண்டது போன்று (அப்போஸ்தலர் 4:13), இயேசுவுடன் கூட இருந்தவர்கள் என்று உலகம் நம்மையும் அடையாளம் கண்டுகொள்வதற்கு, கிறிஸ்துவுடனான இந்த நெருக்கமான உறவும், ஐக்கியமும் அதிகமான அவருடைய ஆவியை நமக்கு அளிப்பதாக." R. 1789, middle.

---

**"பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்." யோவான் 16:27.**

"பிதா தம்முடைய பிள்ளைகள் என நம்மை அன்புகூருகிறார்

என்பதை விளக்கும் இவ்வசனத்தை என் அன்புக்குரிய சகோதரனே நீ எப்படி எடுத்துக்கொள்ளப் போகிறாய்? உலகத்தின் மீது அவருக்கு அன்பு இருக்கின்றது. அவர் தேவனாக, ஒரு சிருஷ்டிகராக, தம்முடைய சகல சிருஷ்டிகளையும் கண்காணிக்கின்றார். தேவன் ஒவ்வொரு சிருஷ்டிக்கும், சிட்டுக்குருவிக்கும் கூட தேவையானவற்றை முன்னேற்பாடு செய்துள்ளார். ஆனால், இம்மாதிரியான உண்மையான மனநிலைக்குள் வரும் எல்லோர் மேலும், அவர் அன்பு—இரக்கம் மற்றும் மிக உயர்வான எண்ணமும் கொண்டுள்ளார். . . . தேவன் நம்மை அதிகமதிகமாய் அன்புகூருகிறார், இல்லையெனில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக இருக்கும் நமக்கு தம்முடைய அன்பினாலும், தம்முடைய கிருபையின் ஐசுவரியத்தினாலும் அருமையான வழிநடத்துதல்களை ஒருபோதும் செய்திருக்க மாட்டார் என்று நான் எண்ணுகிறேன். இதையே நீங்களும் எண்ணுவீர்களாக. . . . நாள்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும் இந்த விஷயங்களைச் சிந்திக்கையில், தேவனுடைய மாபெரும் திட்டத்தில் வெளிப்படும் அவருடைய மாபெரும் அன்பை நிதானித்து, ஆழமாகச் சிந்தித்து, புரிந்துகொள்கையில் 'பிதா தாமே தம்முடையவர்களை எவ்வளவாய் அன்புகூருகிறார்' என்பதை அருமையாய் உணர முடியும் என்று நான் நம்புகின்றேன் என்றாலும் அதை முழுமையாய் புரிந்துகொள்ள நம்மால் முடியாது. எந்த ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைக்கு இப்படியான அருமையான காரியங்களைச் செய்வானாகில், இச்செயல் அதிகமான அன்பையே மறைமுகமாகக் காட்டுகின்றது." R. 5725, c.2, p.4, 6, 7.

---

**"என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும்,..." யோவான் 17:23.**

"இது எப்படியாகும்? என்று வியப்பில் நாம் கேட்கலாம். . . . ஆனால், நாம் கழுவப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டுள்ளோம். மேலும், நம்முடைய பூமிக்குரிய சரீரம் எவ்வளவுதான் பரிபூரணமற்றதாய் இருந்தாலும், இருதயங்களை ஆராய வல்லவரின் பார்வைக்கு முன் நம்முடைய இருதயங்கள் பூரணமாய் இருக்கின்றது. மேலும், அவர் நம்மை பரிபூரண இருதயம் உடையவர்களாய்—பரிபூரண நோக்கம் மற்றும் எண்ணம் உடையவர்களாய்—நம்முடைய பரிபூரணமற்ற மாம்சத்தின் குறைவுகளையும், பெலவீனங்களையும் நாம் மேற்கொள்ள முயற்சித்தும், கஷ்டப்பட்டும் அவருடைய சித்தத்தையே நிறைவேற்ற வேண்டும்

என்ற உறுதியான முயற்சியுடனும், விழுந்துபோன நிலையிலிருந்து நம்மை மீட்டுக்கொள்வதற்காக அவர் கொடுத்த முன்னேற்பாடுகளில் தாழ்மையுடன் நாம் நம்பிக்கை கொண்டிருப்பதை அவர் பார்க்கையில், அவருடைய அன்பிற்குப் பாத்திரமாய் இருக்கும் விஷயங்களை நம்மில் தேவன் அடையாளம் கண்டுகொள்கிறார். ஆகவேதான் நம்முடைய கர்த்தராகிய இயேசு, பிதா தம்முடைய குமாரனிடம் அன்பாயிருந்தது போன்று, நம்மேலும் அன்பாய் இருக்கின்றார் என்றார்." R. 3161,c.2,p.2.

---

**"ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்." ரோமர் 6:5.**

"அவர் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட்டிருப்பது எப்படியாக இருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். அது 'எல்லா துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் மேலாகவும், மனித சுபாவத்திற்கு மேலாகவும், மேன்மையான உயர்த்தப்படுகிற நிலையாகும்.' அது தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்படுவதாகும். இதைக் குறித்து அப்போஸ்தலர் பேதுரு கூறுகையில், அவர் நமக்கு முன்வைத்த மாதிரியின்படி அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற நாமும் பங்காளிகள் ஆவோம் என்கிறார் (2 பேதுரு 1:4). மரண பரியந்தம் நிந்தனை மற்றும் பலிகள் அடங்கிய கர்த்தரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவது சுலபமான காரியமன்று. இதன் பொருள் என்னவென்றால், தெய்வீக சித்தத்தை நிறைவேற்றுவதற்காக நம்முடைய சுயசித்தத்தை விட்டுக்கொடுப்பதே ஆகும்." R. 1262, c.2, p.4

---

**"கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்." ரோமர் 6:8.**

"கிறிஸ்துவோடு கூட வரும் மகிமை மற்றும் கனங்களில் பங்குக் கொள்வதற்கான அழைப்பு அதற்கே உரிய நிபந்தனைகளோடு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அத்தகையவர்கள், அவருடைய **மரணத்தில்** பங்கடைந்து, **அவருடைய** மரணத்திற்குள்ளாக அடக்கம் பண்ணப்பட வேண்டும். . . . நம்முடைய மீட்பர் தம்முடைய ஜீவியத்தைச் சுயதிருப்திக்காகக் செலவிடாமல் (செலவழித்தால் கூட நியாயமே)

சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும், பாவத்தை எதிர்ப்பதிலும், பிதாவினுடைய திட்டத்தை நிறைவேற்றுவதிலும் செலவிட்டது போல, நாமும் நம்முடைய நேரம், தாலந்துகள், ஆற்றல், உரிமைகள் மற்றும் வாய்ப்புகளை அவரைப்போல செலவிடுவதே அவருடைய மரணத்தில் நாம் பங்குக்கொள்வதாகும். அவரால் மீட்கப்பட்டு நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட **இவை அனைத்தையும்** பிதாவின் ஊழியத்திற்கென்று நாம் **அர்ப்பணிப்பதோடு** மட்டுமல்லாமல், அவர் நமக்கு முன்வைத்த மாதிரியின்படியே—முடிந்தளவு அவருடைய அடிச்சுவடுகளில் நடந்து —**மரணபரியந்தமும்** உண்மையுள்ளவர்களாய் இவைகளைப் பயன்படுத்த வேண்டும். நாம் **அவரோடுகூட** மரித்தோமானால், ஏற்றக்காலத்தில் அவரோடுகூட ஜீவிப்போம்." R. 1542, c.2, p.3.

---

**"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்." ரோமர்8:16.**

"தேவனுடைய பிள்ளைகளில் ஒருவராகக் கருதப்படுவது மாபெரும் சிலாக்கியமாகும்; என்றாலும், அநேகர் அதைப் புரிந்து கொண்டிருப்பதைக் காட்டிலும் அது ஆழமான அர்த்தம் கொண்டதாகும்—தங்களுடைய பங்கையும், தேவனுடைய பங்கையும் புரிந்து கொண்டிருப்பதைக் காட்டிலும் ஆழமானதாகும். . . . தேவனுடைய பங்கு என்கிற போது, அது அத்தகையவர்களுக்குக் கிறிஸ்துவின் மூலமான அவருடைய சகல கிருபையான வாக்குத்தத்தங்கள் நிறைவேறுதலைக் குறிக்கின்றது. . . . மேலும், தற்கால ஜீவியத்திலுள்ள தேவனுடைய பங்கு என்பது நாம் அவருடைய தந்தைக்குரிய அன்பையும், பராமரிப்பையும், கண்டிப்பையும், ஆலோசனையையும், போதகத்தையும், பாதுகாப்பையும் மற்றும் உற்சாகமூட்டுதலையும் முடிவுவரையிலும் பெற்று, பின்னர் அவருடைய மகிமையின் பிரசன்னத்திற்குள்ளும், நித்திய காலத்திற்குமான இளைப்பாறுதலை, சந்தோஷத்தை மற்றும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதைக் குறிக்கின்றது. ஆ! தேவனுடைய ஜனங்களாய் இருப்பது எத்துணை ஆசீர்வாதம்! தற்கால ஜீவியத்திலும் கூட, அவருடைய தயவினால் வரும் பலன் எண்ணிலடங்காதது." R. 1787, c.2, last p.; R. 1788, c.1, p.1.

**"நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுபட்டால் அப்படியாகும்." ரோமர் 8:17.**

"அதிகபட்சமான மிக உயர்ந்த நோக்கத்தையே கிறிஸ்தவன் தனக்கு முன்பு பெற்றுள்ளான். தேவன் தம்முடைய நாமத்திற்கு மகிமையாக உலகத்திலிருந்து ஒரு ஜனக்கூட்டத்தை அழைக்கின்றார். இவர்களுக்கு முன்பாக அவர் உன்னதமான நோக்கம் வைத்துள்ளார். இவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராகும்படிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இந்த நோக்கமே இவர்கள் பரம பிதாவுடனும், கர்த்தருடனும் கூடி வாழவும், நட்பும், ஐக்கியமும் கொள்ளத்தக்கதாக தங்களையே ஆயத்தப்படுத்துவதற்கும் ஏதுவான சகல உயர்ந்த பண்புகளையும், குணநலன்களையும் வளர்த்துக்கொள்ளும்படி இவர்களை ஏவுகின்றது. கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுப்பதற்கான உண்மையான முயற்சியை ஊக்குவிக்கத்தக்கதாக இந்த உன்னதமான நோக்கத்தைப் பெற்றிருப்போமாக. . . . அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் (வெளி 19:7). ஆகவே, இவர்கள் தங்களை ஆயத்தம் பண்ணிக்கொள்ளவும், தேவனுடைய அன்பான குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கு உதவி செய்யும்படியாகவும் நாட வேண்டும்." R. 5185, c.1, p.3, 5.

---

**"ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்." ரோமர் 8:18.**

"வலிமைமிக்க இருதயங்களைக் கூட திகிலடையச் செய்யும் சூழ்நிலைகளில் கர்த்தருடைய எளிமையானவர்கள் அமைதியாய் இருப்பதைக் கண்டு உலகம் எப்பொழுதும் ஆச்சரியப்பட்டுள்ளது. நம்முடைய தேவனுக்கு மகிமையாகவும், அவருடைய கிருபைகளுக்குப் புகழ்ச்சியாகவும் இருக்கும் ஜீவியத்தை ஜீவிப்பதற்கும், பரலோக இராஜாவின் பிரதிநிதிகளான, கிறிஸ்தவர்களாகிய நமக்கு வரும் பாடுகள் மற்றும் சோதனைகளை ஞானத்துடனும், தைரியத்துடனும் சந்திப்பதற்கும், அவைகளை சந்தோஷத்தின் ஆவியில் எதிர்கொண்டு,

நம்முடைய உபத்திரவங்களைச் சந்தோஷமாக கருதுவதற்கும்... நம்முடைய இருதயங்கள் கர்த்தரோடு இசைவாய் இருந்து, அவருடைய சித்தமேயல்லாமல் வேறு எதுவும் கொண்டிராமல், கண்ணியை வருவிக்கும் மனுஷனைக்குறித்த பயத்தை ஜெயிப்பது அவசியமாய் உள்ளது. இவைகளை நம்முடைய சுயபலத்தால் செய்ய முடியாது, மாறாக தேவனுடைய பலத்தினால் மாத்திரமேயாகும்.” R. 5540, c.2, p.4.

---

**“அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.” ரோமர் 8:28.**

“தேவனிடத்தில் நம்பிக்கை வைக்கிறவர்களுக்கும், ‘தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கும் சகலமும் நன்மைக்கு ஏதவாக நடக்கும்’ என்ற நிச்சயத்தை நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுள்ளோம். ஆசீர்வாதமற்ற எதுவும் நமக்கு அருளப்படுவதில்லை.” R. 5546, c.2, p.6.

“நன்கு போதிக்கப்பட்ட இருதயமானது, இங்கு நன்மை என்று குறிப்பிடப்படுவது எப்போதும் பூமிக்குரிய நன்மைகளாக—தற்காலிக அனுகூலங்களாக இருக்காது என்று அறிந்திருக்கும்; மேலும், தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு . . . ‘சகலமும்’ என்பது, தாங்கள் ஓடுவதற்கென்று தங்களையே அர்ப்பணித்த இடுக்கமான வழியில் வரும் பரீட்சைகள், ஏமாற்றங்கள், சிக்கல்கள், கஷ்டங்கள் மற்றும் சோதனைகளையும் பிரதானமாக உள்ளடக்குகின்றது என்றும் அறிவார்கள். மேலும், கிறிஸ்துவின் குணநலனுக்கு ஒத்திருக்கத்தக்கதாக, செதுக்கப்பட்ட மெருகூட்டப்பட்ட குணநலன்கள், முடிவுபரியந்தம் காட்டும் உண்மையின் நிமித்தம் தெய்வீக கனத்திலும், மகிமையிலும் முழுமையாக்கப்படுவதே **‘நன்மையாக’** இருக்கும்.” R. 2241, c.2, p.5.

---

**“தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?” ரோமர் 8:31.**

“தேவன் **நம் பட்சத்திலிருந்தால்**—இந்த அருமையான வார்த்தைகளை ஒவ்வொரு ‘பரிசுத்தவானும்’ தன்னுடைய இருதயத்தின் ஆழத்தில் உணர்ந்து, தன்னிடத்திலேயே கூறுவானாக. இந்த வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள அவன்

முயற்சிக்கலாம்; என்றாலும், அந்த வார்த்தைகளின் ஆச்சரியமான அர்த்தத்தை முழுவதும் புரிந்துகொள்ளுவதில் தோல்வியே அடைவான். தெய்வீக கிருபை, அன்பு மற்றும் வல்லமையின் ஐசுவரியத்தைப் புரிந்துகொள்வது என்பது மனித அறிவுக்கு எட்டாத காரியமாகும். இதை நாம் அறிந்துகொள்ள மாத்திரம் முடியுமே ஒழிய, புரிந்துகொள்ள முடியாது. ஒருவேளை தேவனுடைய அனந்த ஞானமும், வல்லமையும் **நம் பட்சத்தில்** இருக்குமாயின், இது கிறிஸ்துவும்கூட நம் பட்சத்தில் இருப்பதைக் குறிக்கின்றது. காரணம் அவர் பிதாவினுடையவராவார். மேலும், தேவன் **நம் பட்சத்தில்** இருக்கிறார் என்பது சகல தூதர்களும், சேராபீன்களும், கேருபீன்களும், நம் அறிவுக்கு எட்டியதும், நம் அறிவிற்கு எட்டாததுமாகிய சகல பரலோக வல்லமைகளும், **நம் பட்சத்தில்** இருப்பதை—நமக்கு நன்மை செய்யவும், உதவி செய்யவும், தேவையான நேரங்களில் நமக்கு உதவவும், சோதனை நேரத்தில் நம்மைத் தாங்கி நிற்கவும், பிதாவின் சித்தம் செய்வதற்கு நம்மை பலப்படுத்தவும் இருப்பதைக் குறிக்கின்றது. . . . தேவன், **'நம் பட்சத்தில்'** இருக்கிறார் என்றும், அவர் சகலத்தையும் நன்மைக்கு ஏதவாக நடத்துகின்றார் என்ற உண்மையே, . . . 'நமக்கான' இச்செய்தியில் உள்ள மையக் கருத்தும், சாரமும், நம்பிக்கையுமாய் உள்ளது." R. 4214, c.1, p.9; c.2, p.1.

---

**"எல்லாம் உங்களுடையது; நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்." 1 கொரி. 3:21, 23.**

"இப்பொழுது இவர்கள் (தேவ ஜனங்கள்) மற்றவர்களைக் காட்டிலும் பூமியில் அதிக மகிழ்ச்சி கொண்டுள்ளனர். இவர்கள் மகிழ்ச்சியை அனுபவிப்பதையும் மற்றவர்கள் கிரகித்துக் கொள்கின்றனர். அப்போஸ்தலர் கூறுகிறபடி, 'தேவன் நமக்கு சகலத்தையும் சம்பூரணமாகக் கொடுத்துள்ளார்' (1 தீமோ. 6:17). பேராசையின் ஆவியிலிருந்து விடுவிக்கப்பட்டபடியினால், கடை வீதிகளில் செல்லுகையில், கடையில் காணப்படும் ஐசுவரியங்களைப் பேராசையில்லாமலும், அழகு மற்றும் கலையின் பல்வேறு படைப்புகள் நம்முடைய விசேஷமான பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்குள் இருக்க வேண்டும் என்ற ஏக்கம் இல்லாமலும் கடந்து போக முடியும். நம்முடைய அனைத்து தாலந்துகளையும் கர்த்தருக்கும், அவருடைய ஊழியத்திற்கென்றும் அர்ப்பணித்துள்ள காலத்தில், கலைப் படைப்புகள் என்று அழைக்கப்படும் பூமிக்குரிய அற்ப பொருட்கள் மீது அக்கறை

செலுத்துவதைக் காட்டிலும், செய்ய வேண்டிய மிக முக்கியமான வேலைகள் நமக்கு இருக்கும் காலத்திலும் நமது கண்கள் அந்தப் பொருட்களை ரசித்தும், அவைகளைக் குறித்த அக்கறையற்றும் இருக்கமுடியும்." R. 3734, c.2, p.4.

---

**"தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்." 1 கொரி. 10:13.**

"சபைக்கு உரியதான சோதனைகள், பாடுகள் குறித்ததான நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகள் நமக்கு உறுதியளிப்பது என்னவெனில், இந்த வகுப்பார் பயப்படுவதற்கு ஏதுவாக எதுவும் இல்லை, இவர்கள் பாதுகாக்கப்படுவார்கள், மேலும் இவர்கள் சோதிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை, காரணம் ஒவ்வொரு சோதனையிலும் கர்த்தர் தப்பித்துக் கொள்வதற்கான போக்கையும் அளிப்பார் . . . தேவனிடம் அர்ப்பணித்துள்ள ஒவ்வொரு பிள்ளையும் தேவன் அளித்துள்ள தப்பிப்பதற்கு ஏதுவான போக்கை கவனித்து, அதைப் பயன்படுத்தி, கர்த்தருடைய வழிநடத்துதலுக்குள்ளும், பாதுகாக்கப்பட்டுள்ள—'அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்ட உண்மையுள்ளவர்கள்' மத்தியிலும் ஒருவராக இருக்க வேண்டும் என்பதே நமது விருப்பமாகும். . . . தீமையின் சக்தியிடத்தினின்று நம்மை பாதுகாக்க கர்த்தர் செய்துள்ள விசேஷமான முன்னேற்பாடு வாட்ச் டவர் (Watch Tower) வெளியீட்டின் மூலம் கர்த்தர் வழங்கும் **தற்கால சத்தியம்** என்று நம்முடைய வாசகர்களில் அநேகர் நம்மோடு ஒப்புக்கொள்வார்கள் என்று நாம் நம்புகின்றோம்." R. 4253, c.1, p.2, 3.

---

**"நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைவதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும்எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்." 2 கொரி. 4:8-10.**

"ஆகவே, வாழ்வின் கஷ்டங்கள் மற்ற ஜனங்களை ஒடுக்குவது

போன்று நம்மையும் ஒடுக்குவதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது. மற்றவர்களிடத்தில் இல்லாத ஒன்றை நாம் பெற்றிருக்கிறோம், அதென்னவெனில், நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தால், நம்முடைய வாழ்வில் வரும் சகலமும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறதாய் இருக்கும் என்ற கர்த்தரின் வாக்குத்தத்தமேயாகும். நம்முடைய பிதாவின் வார்த்தைகளான இந்த வாக்குத்தத்தத்தை நாம் உண்மையில் நம்பினால், துன்பத்திலும் மகிழ்ச்சிகொள்ள நமக்கு உதவும். கர்த்தருடைய வேலையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சில சிக்கல்கள் வருவதுண்டு. ஆனால், கர்த்தருடைய ஜனங்களுக்கு உண்டாகும் கவலைகளோ அல்லது தயக்கங்களோ மனமுறிவடைகிற நிலைக்குக்கொண்டுச் செல்லக்கூடாது. உலகத்தார் . . . பல்வேறு கஷ்டமான சூழ்நிலைகளில் இருப்பதினிமித்தம் மிகவும் மனந்தளர்ந்து போய்விடுகின்றனர். தற்கொலைகள் குறித்து நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். தங்கள் ஜீவியத்தை தங்கள் இஷ்டபடி நடத்துகிறவர்களுக்கு அனைத்தும் மிக இருளாகத் தெரிகின்றது. கர்த்தருடைய ஜனங்களுக்கும் சூழ்நிலைகள் மிக இருளாகத் தெரியும் என்பது உண்மையாக இருந்தாலும், அவர்களுக்கு என்ன சம்பவித்தாலும் அவர்கள் மனமுறிவடைவதில்லை; காரணம், கர்த்தரோ நம்மைவிட்டு விலகுவதுமில்லை நம்மை கைவிடுவதுமில்லை என்று கூறியுள்ளார். இந்தக் கிருபை நிறைந்த வாக்குத்தத்தம் நமக்கு உறுதியும், நிலையுமான நம்பிக்கையை அளிக்கும். நம்முடைய நம்பிக்கையின் நங்கூரம் இதைப் பிடித்திருக்க வேண்டும்." R. 5670, c.2, p.6; R. 5671, c1, p.2, 3.

---

**"அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது." 2 கொரி. 4:17.**

"தங்களுடைய பொக்கிஷங்களைத் தற்போது பரலோகத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிற கிறிஸ்துவின் சபையாக தெரிந்துகொள்ளப்பட்ட அனைவரும் அதிகமான நித்திய கன மகிமையை சுதந்தரிக்கப் போகிறவர்களாயிருக்க, தற்போதைய காலத்தில் வரும் விநோதமான உபத்திரவங்களில் காட்டும் விசேஷமான உண்மை மற்றும் வைராக்கியத்தின் மூலமே பொக்கிஷத்தைச் சேர்க்க முடியும் என்று அப்போஸ்தலர் இங்குத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றார்." R.1821, c.1, p.3.

"தற்போதைய சோதனைகள் அனுபவங்கள் மற்றும் பாடுகளில் எவ்வளவாய் அவரிடத்தில் நெருங்குகின்றோமோ . . . அவ்வளவாய்

எதிர்காலத்தில் அவரிடத்தில் நெருக்கமாய் இருப்போம் என்பதை நாம் நினைவில்கொள்ளும்போது, இது அப்போஸ்தலன் தன்னுடைய கடுமையான உபத்திரவங்களைப் பேசுகையில் கூறின வார்த்தைகளை—(அதாவது மேலுள்ள வசனத்தை) நமக்கு விளக்குகின்றது." R. 3362, c.2, p.5.

---

**"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்." 2 கொரி. 5:1.**

"எவ்வித குறிப்பிட்ட நம்பிக்கையும் இல்லாத உலகத்திற்கு மிகவும் வேறுபட்ட நிலை . . . நம்முடைய நிலையாகும். உலகத்திற்கு பிடித்துக்கொள்வதற்கு என்று எவ்வித உறுதியான நங்கூரமும், எவ்வித விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களும் இல்லை. ஒருவேளை தோல்விக்கு மேல் தோல்வி வந்தாலும், ஒருவேளை நாம் பட்டினியில் மரிக்க வேண்டும் என்றாலும், நம்முடைய நம்பிக்கை திரைக்கு அப்பாலே உள்ளது என்பதை நாம் அறிவோம். ஆகவே, இக்காலத்து தேவனுடைய பரிசுத்தவான்கள் மரணத்தை, முழுமையான ஜீவனுக்குள் பிரவேசிப்பதற்கும், நம்முடைய சகல நம்பிக்கைகளையும், சந்தோஷங்களையும் அனுபவிப்பதற்குமான நுழைவாயிலாகவே கருதுகின்றனர்." R. 5671, c.1, p.3.

---

**"அப்பொழுது, நான் ...உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்." 2 கொரி. 6:18.**

"சுபாவத்திலே மாசுபட்டவர்களும், பரிபூரணமற்றவர்களுமான நாம் நம்முடைய மிக உயர்ந்த சிருஷ்டிகரால் கவனிக்கப்பட்டது மாத்திரமல்லாமல், அவருடைய பிள்ளைகள் ஆகும்படி அழைக்கப்பட்டதும்—'தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயபக்தியாய் இருப்பவர்களுக்கு இரங்குவது' போன்ற தனது உருக்கமான அன்பு அளிக்கப்படும் என்ற உறுதியளிப்பு—எத்தகைய கருத்தாகும்! எத்தகைய வாக்குத்தத்தமாகும்! இது எவ்வளவு அருமையாக உள்ளது! மேலும், இவைகள் எல்லாம் முடிவாயிராமல், வெறும் ஆரம்பமே என்று அப்போஸ்தலர் வேறொரு இடத்தில் தெரிவிக்கின்றார், காரணம், அவர் 'நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே

கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப் பாடுப்பட்டால் அப்படியாகும் என்று கூறியுள்ளார்.'" R. 5739, c.2, p.2.

---

**"நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்." 2 கொரி. 9:8.**

"நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் தருகிற கர்த்தருக்கு சொல்லி முடியாத நன்றிகளைச் செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம் என்ற உணர்வோடு கூடிய நன்றி பலியே கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குரிய வெகுமதியாக இருக்க வேண்டும். மேலும் அத்தகையவர்களுக்கு, 'தேவன் சகலவித காரியங்களையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்' என்று அப்போஸ்தலர் நமக்கு உறுதியளிக்கின்றார். யாரொருவர் நேரத்தை, திறமையை, பலத்தை, பணத்தை அல்லது செல்வாக்கை தேவ ஊழியத்திற்கென்று கொடுக்கிறாரோ, அவர் கொடுத்ததற்கு ஈடாக பல்வேறு ஈவுகள் பெருகப் பெற்றிருப்பார்; காரணம், இத்தகையவர்கள் கிருபையில் வளருவதற்கு ஏதுவான இருதய நிலையைக் கொண்டிருப்பதேயாகும். அத்தகையவர்கள் 'எல்லாவற்றிலும் சம்பூரணமாயிருப்பார்கள்' என்றும் 'சகலவித நற்காரியங்களில் பெருகுகிறவர்களாகவும் இருப்பார்கள்' என்றும் அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகின்றார். சம்பூரணம் என்கிற போது ஆடம்பரத்தையும், சகல சௌகரியங்களையும் குறிக்காது. மாறாக, எங்கு 'போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தி' உள்ளதோ, அங்கு 'எல்லாவற்றிலும் சம்பூரணம்' இருக்கும்." R. 5927, c.2, p.2, 3.

---

**"என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்." 2 கொரி. 12:9.**

"கர்த்தருடைய இந்த நல்ல ஆலோசனைகள் நம்மால் நினைவுகூரப்பட்டிருந்தால் இது, நம்முடைய தவிர்க்க முடியாத பலவீனங்கள் மற்றும் அபூரணங்கள், நாம் கர்த்தருடையவர்கள் அல்ல என்பதற்கான ஆதாரங்கள் என்று நம்மை நம்பும்படி செய்யும் எதிராளியானவனின் தாக்குதல்களிலிருந்து விடுதலையையும், ஆசீர்வாதத்தையும் எத்தனைமுறை கொண்டுவந்திருக்கும். இந்த

ஆலோசனை நம் முன் இருந்தால், உலகம், மாம்சம் மற்றும் சாத்தான் நெருக்குகையில், எதிர்த்துப் போராடுவதற்கு எத்தகைய பெலன் நமக்கு இருக்கும். இது சோதனை நேரங்களில், 'ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை' அடையும்படிக்கு நம்முடைய இருதயங்கள் கர்த்தரிடத்தில் ஜெபம் ஏறெடுக்கத்தக்கதாக எவ்வளவாய் வழிநடத்தும். நம்முடைய சொந்த பலவீனங்கள் மற்றும் அபூரண தன்மைகளைக்குறித்த பாடத்தையும்—தேவையான நேரங்களுக்கு முன்னதாக இல்லாமல், **'ஏற்ற சமயத்தில்'** அதாவது ஒவ்வொரு பிரச்சனையான சமயத்திலும் பலத்திற்காகவும், துன்பத்தில் உதவிக்காகவும் அவரை அணுகும்படியான பாடத்தையும் நாம் கற்றுக்கொள்ளும்படி கர்த்தர் விரும்புகின்றார்." R. 2241, c.2, p.2.

---

**"நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்." கலா. 3:29.**

"'கிறிஸ்துவினுடையவர்களாய்' இருப்பது, விசுவாசம், நேர்மையான நடத்தை மற்றும் நற்பெயர் என்பவைகளைக் காட்டிலும் மேலான அர்த்தம் கொண்டதாகும். அதன் அர்த்தமானது, கிறிஸ்துவுக்குச் **சொந்தமாக** வேண்டும்;—அவருடைய ஆவி, ஆத்துமா மற்றும் சரீரமாக வேண்டும்;—இன்றும், என்றென்றும், அவருடைய ஊழியனாய் இருந்து சௌகரியத்திலும், சந்தோஷத்திலும், அசௌகரியத்திலும், வேதனையிலும், கஷ்டத்திலும் அவருடைய **வழியில்,** அவருடைய **நேரத்தில்** அவருடைய **சித்தம்** செய்ய வேண்டும். இன்னுமாக எந்த மனுஷனும் இரண்டு எஜமானுக்கு ஊழியம் செய்யக் கூடாததால், நாம் வேறு ஒருவருக்கும் சொந்தமாக முடியாது என்ற அர்த்தமும் அதற்கு உள்ளது. மறைவாக மற்ற அமைப்புகளுக்குச் **சொந்தமாய்** இருப்பவர்களுக்கு இங்கு ஒரு கஷ்டம் ஏற்படுகின்றது. இவர்களின் பிரமாணங்கள், நம்பிக்கைகள் மற்றும் வழக்கங்கள் கிறிஸ்துவிற்கென்று **முழுமையாக** அர்ப்பணிப்பதற்குக் குறிப்பிட்ட விதத்தில் எதிர்பார்க்கவோ, விரோதமாகவோ இருக்கும் என்பது உறுதியே." R.1697, c.1, p.1.

---

**"நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்." எபே. 2:10.**

"இந்த ஜீவனுள்ள கற்களை திரைக்கு அப்பால் ஒன்று சேர்ப்பது, உயிர்த்தெழுதலின் வல்லமையினாலே ஆகும் என்பது, சாலொமோன்

ஆலயம் கட்டப்பட்ட விதத்தில் அருமையாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் கற்கள், குவாரியில் தயாராக்கப்பட்டு கடைசியில் ஆலயத்தைக் கட்டி எழுப்புவதற்கென்று ஒன்று சேர்க்கப்பட்டது என்றும் அவைகள் மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு, வெவ்வேறு இடங்களில் பொருத்தப்படுவதற்கு என்று நியமிக்கப்பட்டதினிமித்தம், கட்டப்படும்பொழுது அவைகள் சுத்தியலின் சத்தமில்லாமலும்,— செதுக்கப்படுதலோ அல்லது . . . வேறு எந்த வேலைப்பாடும் அவைகளின் மேல்செய்யப்படாமலும்... அவைகள் ஒன்று சேர்க்கப்பட்டது என்றும் நாம் வாசிக்கின்றோம். ஆகவே, பரிசுத்தவானாகிய பவுல், சபை தேவனுடைய கைவேலைப்பாடாய் இருக்கின்றார்கள் என்கிறார். மேலும், திரைக்கு அப்பால் திருத்தப்படுவதற்கோ அல்லது மாற்றப்படுவதற்கோ எவ்வித அவசியமாயிராதபடி, அவருடைய வேலை மிக நேர்த்தியாக நிறைவேற்றப்படும். இவ்விதமான கண்ணோட்டமே கர்த்தருடைய ஜனங்களுக்கு விசேஷமான நன்மையும், ஆதாயமுமாகவும் இருக்கும். அத்தகையவர்கள் தாங்கள் தேவனால் இந்தப் பரம அழைப்பிற்கும், ஆலயத்தில் அங்கங்களாவதற்கும் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர முடியும்; மேலும், பரம மகிமை, கனம் மற்றும் அழியாமைக்குத் தங்களை பாத்திரமாக்குவதற்கும், தங்களை வடிவமைப்பதற்கும் சோதனைகள் மற்றும் உபத்திரவங்களின் அவசியத்தையும் முழுமையாக உணர முடியும்.” R. 5713, c.2, p.6,7

---

**“உங்களில் நற்கிரியைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி.” பிலி. 1:5.**

“வேலை கர்த்தருடையதென்றும், அதாவது, நமக்கு அளிக்கப்பட்டுள்ள அவருடைய பலம் அவருடைய வேலையை நிறைவேற்றுவதற்காகவே அருளப்பட்டிருக்கிறது என்றும், நம்மில் நற்கிரியையைத் துவக்கினவர், அதை முடிக்க வல்லவராயிருக்கிறார் என்றும், நாம் அவரை அனுமதிக்கும் பட்சத்தில், அதாவது, அவருடைய வழிநடத்துதல்களைப் பின்பற்றி அவருடைய சித்தத்தைச் செய்தோமேயானால், அவரே செய்து முடிப்பார் என்பதை நாம் மறந்து விடவேண்டாம்.” R. 2124, c.1, p.1.

“ஆனால், ஒப்பிட்டுப்பார்க்கையில் வெகுசில கிறிஸ்தவர்களே விசுவாசத்தின் முழு உறுதியைக் கொண்டுள்ளனர் . . . அப்போஸ்தலரோடு முழு இசைவு கொண்டிருக்கும் அந்த சிலருக்கு . . . மற்றவர்களுக்கு இல்லாத மாபெரும் இருதயத்தின் சமாதானமும், மாபெரும் ஆசீர்வாதமும், மாபெரும் சந்தோஷமும் (இங்கேயே) உள்ளது.” R. 2642, c.1, p.4.

**"ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." பிலி. 2:13.**

"இந்த மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களோடு இணைந்து வரும் மகிமையான எதிர்பார்ப்புகள் மற்றும் பரிசுகள் மூலம் அவர் விருப்பத்தையும், செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறார். ஆனால், எந்த அளவிற்கு அவர் நம்மில் கிரியை செய்வார் என்பதும், இந்த வாக்குத்தத்தங்கள் மூலம் எந்த அளவிற்கு நம்மில் பலன் உண்டாகும் என்பதும் நம்மை சார்ந்தேயுள்ளது. . . . ஒருவேளை அவருடைய வாக்குத்தத்தங்களை நாம் அசட்டை பண்ணலாம், ஒருவேளை சத்தியத்தின் கிருபையிலும், அறிவிலும் நம்மை வலுவூட்டுவதற்கும், நிலைநிறுத்துவதற்கும் அவர் அளித்துள்ள பல்வேறு வகையிலான கிருபைகளை நாம் அசட்டை பண்ணலாம். ஆகவே, இவ்வாறு அவருடைய வழி நடத்துதல்களை நாம் அசட்டை பண்ணினால், இதற்கு இணையாக, அவருடைய அன்பில் நிலைத்திருப்பதிலிருந்து நாம் தவறுவோம்—வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஈவுகளைப் பெற்றுக்கொள்வதில் தவறுவோம்—'தேவனுடைய அன்பில் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்' என்று கூறி அப்போஸ்தலர் இதைச் சுட்டிக்காட்டுகின்றார்" (யூதா 21).
R. 3021, c.2, p.2.

---

**"அப்பொழுது, எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்." பிலி. 4:7.**

"இவ்வசனத்தில் அப்போஸ்தலர் இருதயத்தையும், சிந்தையையும் வேறுபடுத்துகின்றார். இருதயம் அன்பை அடையாளப்படுத்துகின்றது. ஒரு விஷயத்தைக்குறித்த நல்ல உணர்வுகளை மாத்திரம் நாம் பெற்றிருப்பதோடல்லாமல், நம்முடைய சிந்தைகள் அமைதலுடனும் இருக்க வேண்டும் என்றும் அப்போஸ்தலர் பரிந்துரைக்கின்றார். . . . இவ்வசனம் நம்முடைய சொந்த சமாதானத்தைக் குறித்து பேசாமல், தேவனுடைய வல்லமையைக் குறித்தும், அவருடைய நற்குணத்தைக் குறித்தும் அவருடைய பிள்ளைகளாக நம்மை தமது வலது கரத்தால் பிடித்துக்கொள்வதற்கு விருப்பமுள்ளவராய் இருக்கின்றார் என்பதையும் உணரும்போது, நம்மிடத்தில் ஏற்படும் சமாதானமாகிய தேவ சமாதானத்தைக் குறித்து பேசுகின்றது. இச்சமாதானம் பயம் அல்லது கவலைக்கிடமான எண்ணங்கள் அல்லது ஒவ்வொரு எதிர்

உணர்வுகளுக்குச் சவாலாகவும், காவலாகவும், தொடர்ந்து பாதுகாப்பாகவும் நிற்கின்றது. இவ்வாறாக, இது கிறிஸ்தவனின் இருதயத்தில் கர்த்தரிலும், ஐக்கியத்திலும் சமாதானத்தைப் பெற்றிருக்கும் நிலையில் அவனுடைய மனதை காத்துக்கொள்கின்றது. மேலும், இது அவனுடைய சிந்தையையும், அறிவையும் கூட பாதுகாத்து, தெய்வீக வல்லமை, ஞானம் மற்றும் அன்பு குறித்தும் அவனுக்கு உறுதியளித்து, அவனை வழிநடத்துகின்றது." R. 4898, c.1, p.3, 4.

---

**"நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள் அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்." பிலி. 4:9.**

"அப்போஸ்தலன் இவ்வசனத்தில் கூறுவதைப் போன்று நம்மில் எத்தனை பேர் (எவ்வளவு சொற்பமானவர்கள்!) சொல்லக்கூடும்? . . . இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவனின் நிலைப்பாடாக இருக்க வேண்டும். ஏனெனில், இவர்களில் ஒவ்வொருவரும் கர்த்தருடைய பிரதிநிதிகளாகவும், அவருக்கான ஸ்தானாபதிகளாகவும் இருக்கின்றனர். ஆகவே, அவர்களின் நடத்தையும், வார்த்தைகளும் ஜீவனுள்ள நிருபங்களாக இருந்து, சகோதரர்களும், உலகமும் நன்மை பெறத்தக்கதாக வாசிக்கப்படத்தக்கதாகவும் இருக்க வேண்டும். இப்படிச் செய்கையில் 'சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்' என்று அப்போஸ்தலர் கூறுவதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அப்போஸ்தலரோடு கூட கர்த்தர் இருந்தது போன்று இயேசுவின் அடிச்சுவடுகளை அப்போஸ்தலர் பின்பற்றின பிரகாரம், நடக்கின்ற யாவரோடும் கூட கர்த்தர் இருப்பார் என்பது நிச்சயமே."
R. 3129, c.2, p.1.

---

**"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு." பிலி. 4:13.**

"சுயத்தின் மீது நம்பிக்கையோ, சுயத்தைச் சார்ந்து நிற்பதோ விரும்பப்படுவதில்லை; மாறாக, தேவன் மீது நம்பிக்கை கொள்வதும், 'ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபை' அளிக்கப்படும் என்ற அவருடைய வாக்குத்தத்தத்தின் மீது சார்ந்து நிற்பதே பெரிதும் விரும்பப்படுகின்றது. இது விரும்பத்தக்க தாழ்மையையும்,

சாந்தத்தையும் நமக்குள் தக்கவைக்கின்றது. மேலும், ‘என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு’ என்ற அப்போஸ்தலனின் வார்த்தைகளில் உள்ள தைரியத்தையும், ஆற்றலையும் கூட அளிக்கின்றது. ‘தேவன் நமக்குப் போதுமானவராய் இருக்கின்றார்’ என்று பரிசுத்தவானாகிய பவுல் மறுபடியும் கூறுகின்றார். இவ்வாறாக தேவனிடத்திலும், அவருடைய வாக்குத்தத்தங்கள் பேரிலும் விசுவாசம் கொண்டு, ‘தேவனால் போதிக்கப்பட்டவர்கள்’ ‘கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் ஆச்சரியமாய்ப் பலப்பட்டிருப்பார்கள்’ (எபேசியர் 6:10). நீதிமான் சிங்கத்தைப் போன்று பலம் கொண்டு கூறுவதாவது, ‘நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான்’ (எபிரெயர் 13:6). மனுஷன் என்னைக் குறித்து என்ன சொல்வானென்றோ அல்லது எனக்கு என்ன செய்வானென்றோ நான் கவனிக்கப் போவதில்லை. சர்வ லல்லமையுள்ள சிருஷ்டிகரை என் பிதாவாகவும், மீட்பரை என் மூத்த சகோதரனாக நான் பெற்றிருக்கும் வரையிலும், அவர்களின் ‘மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்’ மீது சார்ந்து இருந்து நான் திருப்தியாய் இருப்பேன்.” R. 5113, c.2, p.5, 6.

---

**"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." பிலி. 4:19.**

"பிலிப்பியர்களுக்கு . . . தான் எழுதிய கடிதத்தில் எத்தகைய மகிமையான வாக்குத்தத்தத்தை அப்போஸ்தலர் பவுல் எழுதுகிறார். . . . அது பெற்றுக்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு தெய்வீக வாக்குத்தத்தமாகும். நமது அரசு காப்புப் பத்திரங்களின் மீதான நம்முடைய நம்பிக்கையைப் பார்க்கிலும் மேலான நம்பிக்கையை இந்த வாக்குத்தத்தத்தின் மீது வைக்க முடியும். இவ்வசனப்பகுதி, பரலோக ‘அரசின் காப்புப் பத்திரங்களில்’ ஒன்றாகும். என்னுடைய சொந்த தகப்பனாகிய என்னுடைய தேவனே இந்த வாக்குத்தத்தத்தை வழங்கியுள்ளார். நான் இச்சிக்கும் அனைத்தையும், நான் ஜெபிக்கும் அனைத்தையும் எனக்கு தந்துவிடுவார் என்று அவர் ஒப்பந்தம் பண்ணவில்லை. என்னுடைய தேவைகளில் பல, உண்மையில்லாததும், சுயநலத்தினால் உருவானதேயாகும். நான் ஆஸ்திக்காக ஆசைப்படலாம், அவரோ, நான் தரித்திரனாய் இருந்தாலே என்

ஆத்துமா ஐசுவரியமாய் இருக்கும் என்று எண்ணலாம். நான் சில உயர்வுகளுக்காக கேட்கலாம், அவரோ, சிறுமை மற்றும் ஏமாற்றங்கள் எனும் பள்ளத்தாக்கின் வழியாகவே பரிசுத்தத்திற்கான என்னுடைய பாதை உள்ளது என்பதை அறிவார். ஆகவே, என்னுடைய வேண்டுதல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருக்கும், என்னுடைய தேவைகளையே அளிப்பதற்கு அவர் ஒப்புக்கொண்டுள்ளார்." (டி. எல். குயிலர் என்பவரின்...) R. 572, c.1, p.7.

---

**"அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்." கொலோ. 2:10.**

"பூஜ்யம் தனித்திருக்கையில் அதற்கு மதிப்பு இல்லை; ஆனால், ஏதேனும் எண்களைத் தொடர்ந்து வருகையில் அதற்கு மதிப்பு இருக்கும். கிறிஸ்துவை நாம் பின்பற்றுகையில் இப்படியே நமக்கும் இருக்கும்—அவருடைய புண்ணியம் அவரோடு ஐக்கியத்தையும், உறவையும் அளிக்கின்றது. மேலும், தேவனுக்காகவும், அவருடைய நோக்கத்திற்காகவும், ஆற்றலையும், செல்வாக்கையும் மற்றும் முக்கியத்துவத்தையும் நமக்கு அளிக்கின்றது. 'பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு' அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாய் இருங்கள்.'" R. 3149 top.

---

**"நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடு கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்." கொலோ. 3:4.**

"தேவனுடைய சித்தம் செய்ய **விரும்புகின்றவர்கள்** மீதும், நன்மையையும், தீமையையும் உணர்ந்து கொள்வதற்கு அடிகள் பெற அவசியமில்லாதவர்கள் மீதும் தேவன் விசேஷமான பிரியம் கொண்டுள்ளார். இவர்களை 'ஜெயம்கொண்டவர்கள்' என்று அவர் அழைக்கின்றார். இவர்கள் கர்த்தருக்கு ஒத்திருக்கின்றார்கள், . . . மேலும், அவர் இருக்கும் இடத்தில் இவர்கள் இருக்கவும், அவருடைய கனத்தில், மகிமையில், இராஜ்யத்தில் மற்றும் வல்லமையில் பங்குப்பெறுவதற்குப் பாத்திரவான்களாகக் கருதப்படுகின்றனர். 'ஜெயங்கொள்ளுகிறவர்களாகிய' 'சிறுமந்தையினர்' திரள் கூட்டத்தாராகிய உபத்திரவத்தின் வழிவரும் பரிசுத்தவான்களைக் காட்டிலும் **அதிகமாகப் பாடுபடுவதால்** பரிசைப் பெறுவார்கள் என இல்லாமல், மாறாக, **சந்தோஷத்துடனும், தாமாக முன்வந்தும், சுயத்தை பலிசெலுத்தி** பாடுபடுவதினாலேயே ஆகும்." R.1669, c.1, p.7,8.

**"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்." 1 தெச. 5:24.**

"நம்முடைய பிதா தம்மிடத்தில் கேட்டுக்கொள்கிறவர்களும், தம்முடைய ஆவியைக் கொடுப்பதற்கும், சகலத்தையும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக நடத்துவதற்கும், அவர்களை மாபெரும் பிரதான மேய்ப்பனின் வழிநடத்துதலின் கீழ் கொண்டு வரவும், முடிவில் இராஜ்யத்தில் கொண்டு வரவும் தயவுள்ள சித்தம் கொண்டிருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், 'நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவரும், அப்படியே செய்பவருமாவார்,'—அவர் வாக்குத்தத்தம் பண்ணியுள்ள அனைத்தையும், நாம் கேட்டுக்கொள்வதற்கும் அல்லது எதிர்பார்ப்பதற்கும் அதிகமாகவே செய்வார். முழுக் காரியமும் நம்மைப் பொறுத்தே உள்ளது. அதாவது, நம்முடைய அர்ப்பணிப்பு, கர்த்தருடைய மீட்பு வேலையின் மீதுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் இருக்குமேயானால், அது முழுமையும் நிறைவுமான அர்ப்பணிப்பாக இருக்குமேயானால், மேலும், அந்த அர்ப்பணிப்பின்படி ஒவ்வொரு நாளும் ஜீவிப்போமேயானால், அதன் பலன்கள் நாம் எதிர்பார்த்திருந்த அனைத்தைப்பார்க்கிலும் அதிகமானதாக இருக்கும்." R. 3659, c.2, last p.

---

**"கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்." 2 தெச. 3:3.**

"தானியேல் தீர்க்கதரிசி, குறிப்பாக இந்த முடிவு காலத்தில், 'அநேகர் சுத்தமும், வெண்மையுமாக்கப்பட்டு, **புடமிடப்பட்டவர்களாய்** விளங்குவார்கள்' என்று கூறுகின்றார். மேலும், கர்த்தருடைய ஜனங்களைப் புடமிடுவதற்கும், சுத்தமாக்குவதற்கென்று வடிவமைக்கப்பட்டுள்ள இக்காலத்து பரீட்சைகளை மல்கியா (தீர்க்கதரிசி) 'புடமிடுகிறவனுடைய அக்கினிக்கும்,' 'வண்ணாருடைய சவுக்காரத்திற்கும்' ஒப்பிடுகின்றார். நாம் விசுவாசத்தில் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும் என்றும், முடிவுபரியந்தம் உபத்திரவங்களைப் பொறுமையோடு சகித்திருக்க வேண்டும் என்றும் அப்போஸ்தலர் பவுல் பரிந்துரைக்கின்றார். கடும் துன்பத்தில் மாறி மாறி புரட்டப்படுகிறவர்களும், பாடுபடுகிறதுமான தேவனுடைய ஜனங்களுக்கு தேற்றுதலும், ஆறுதலுமாக அநேக வார்த்தைகள் சங்கீதக்காரனாலும், மற்றவர்களாலும் (ஆதார வசனம்) கொடுக்கப்பட்டுள்ளது.—சங்கீதம் 77:1-14; 116:1-14; 34:19; 31:24; 2 தெசலோனிக்கேயர் 3:3 பார்க்கவும்." R. 1823, c.2, p.1.

**"தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும், தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்." 2 தீமோ. 1:7.**

"ஒரு கிறிஸ்தவனிடம் பயமுள்ள ஆவி இருக்குமாயின், அது சந்தேகத்தின் ஆவியாகும்; மேலும், அது விசுவாசக் குறைச்சலையும், பரிசுத்த ஆவியின் குறைச்சலையும் சுட்டிக்காட்டுகின்றது. பயத்தின் ஆவி என்பது ஆவிக்குரிய விஷயங்களிலும் தனிப்பட்ட மற்றும் சபைக்குரிய கிறிஸ்தவ வளர்ச்சியின் ஒவ்வொரு அம்சத்திலும், தீமையின் கனியாக உள்ளது. மேலும், இதனோடு கூட மாம்ச பிரகாரமான பெலவீனங்களும், குறைவுகளும் காணப்படும். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட தேவ பிள்ளை, தன்னுடைய சொந்த சுயமாம்சத்திற்கு ஒப்பிடுகையில் மாவீரனாய் இருக்கிறான், காரணம் திரைக்கு இப்பக்கத்தில் அவனுடைய பயங்கள் அடக்கப்பட்டும், அவனுடைய இருதயம் வேரூன்றி, நிலைநிறுத்தப்பட்டும், அவனுடைய ஆத்துமா உறுதியாய் நங்கூரம் இடப்பட்டும் உள்ளது. இவ்வாறாக உபத்திரவங்கள் புயல் போன்று வீசுகையில் அவன் விபரீதங்கள் என்னும் பாறையில் மோதாதபடிக்கு நிலைநிறுத்தப்படுகின்றான். பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பவர்களுக்கு, அது இத்தகைய வல்லமையாய் உள்ளது, மேலும், இது அவர்களுடைய சத்துருக்களுக்கு எப்போதும் பிரம்மிப்பாகவே இருந்துள்ளது." E. 249

---

**"இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடுகூட மரித்தோமானால், அவரோடுகூடப் பிழைத்துமிருப்போம். அவரோடு கூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்." 2 தீமோ. 2:11, 12.**

"சிலர் வாழ்க்கையில் வரும் பாடுகளைத் தெய்வீக அதிருப்திக்கான ஆதாரம் என எண்ணுகின்றனர்; மாறாக அவைகள், நம்முடைய குணலட்சணங்களை வடிவுபடுத்தவும், மெருகூட்டவும், இவ்வாறாக மகா மேன்மையான மகிமையை நாம் அடையும்படிக்கு நம்மில் கிரியை செய்யும்படிக்குக் கர்த்தரால் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று உணர்ந்து கொள்ள தவறிவிடுகின்றனர். இந்தத் தவறான புரிந்து கொள்ளுதலின் காரணமாக இவர்கள் தாங்கள் கடந்து செல்ல

வேண்டிய தங்களுடைய வாழ்க்கையின் அநேக அனுபவங்களிலிருந்து பலன் பெற்றுக்கொள்ளாமலேயே போய்விடுகின்றனர்—பிரம்பை உணர்கின்றனர், ஆனாலும், அதற்குப் பின்னாக இருக்கும் அன்பான நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல், தங்களுக்கென்று திட்டமிடப்பட்ட பாடங்களைக் கற்றுக்கொள்வதில்லை. . . . அனுபவங்களின் ஓடையை நாம் ருசிப்பது மாத்திரம் போதாது; ஏதோ கொஞ்சம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது; . . . சில போராட்டங்களைச் சகித்தால் மாத்திரம் போதாது; சில சம்பவங்களில் நாம் அடைந்த பாடுகள் வழியாக கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டால் மாத்திரம் போதாது; மாறாக பிதாவே என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது"—என்று மகிழ்ச்சியாய் நம்மால் கூற முடிகிற வரையில் நாம் தொடர்ந்து பருகிக் கொண்டிருக்க வேண்டும்." R. 2936, c.1, p.4, 2.

---

**"கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்." 2 தீமோ. 2:19.**

"தங்களையே தாழ்த்துபவர்களையும், எதையும் இழந்து தம்முடைய சத்தியத்தை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்கிறவர்களையும், நெடுநாள் பஞ்சத்தினால் சத்தியத்திற்காக தாகமும், பசியும் உள்ள இருதயங்களை உடையவர்களையும், மேய்ப்பனின் சத்தத்தை அறிந்தவர்களையும் 'மற்றவைகள் எதுவும் திருப்திபடுத்த முடியாத தங்களின் ஏக்கங்களைத் திருப்திப்படுத்தும்' விஷயங்களைத் தம்முடைய செய்தியில் கண்டடைகிறவர்களையுமே அவர் தேடுகின்றார். இவர்கள் மகிழ்ச்சியோடு போர் ஆயுதங்களை ஏற்றுக்கொண்டு, மேலும், உண்மையுள்ள மாணவர்களாக மாறுவதன் மூலம் அவைகளை (ஆயுதங்கள்) தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டு - அதைத் தரித்துக்கொள்வார்கள். மற்றவர்கள் விழுகையில் இவர்கள் பாதுகாக்கப்படுவார்கள்." R. 4439, c.1, p.1.

---

**"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." 2 தீமோ. 3:12.**

"இதுவே வாக்குத்தத்தம், வேதவாக்கியங்களின் உறுதியான வார்த்தைகளாகும். நாம் உபத்திரவங்களை ஈர்ப்பவர்களாக இருக்கக்

கூடாது; ஆனால், நம் விசுவாசத்திற்கு அறிகுறியான இதை விரும்ப வேண்டும். மேலும், மத்தேயு 5:11-ம் வசனத்தில்—'பலவித தீமையான மொழிகளையும், உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்' என்று போதகரால் பேசப்பட்ட 'பாக்கியவான்களில்' ஒருவராக இருப்பதற்கு ஆசைப்பட வேண்டும்." R. 5544, c.1, p.7.

---

**"இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?" எபி. 1:14.**

"எலிசா மற்றும் அவருடைய ஊழியக்காரனுக்குச் சொல்லர்த்தமாய் காட்டப்பட்டவைகளை விசுவாசத்தினால் பார்க்கத்தக்கதாக ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய மனக்கண்கள் திறக்கப்பட்ட நிலையில் காணப்பட வேண்டியது அவசியமாய் உள்ளது. இந்தச் சுவிசேஷயுகத்தில், கர்த்தர் நமக்கு ஆயத்தப்படுத்தியுள்ள அருமையான முன்னேற்பாடுகளையும், நம்முடைய பாதுகாப்பிற்காக செயல்படும் அவருடைய வல்லமையையும் நாம் காணத்தக்கதாக, அவர் நம் மாம்ச கண்களை திறப்பதில்லை; மாறாக, இக்காரியத்தைக் குறித்த மேலான அறிவை, சத்தியமும் கிருபையுமான அவருடைய வார்த்தைகள் மூலம் அருளி, நாம் கண்டு விசுவாசியாமல், காணாமல் விசுவாசித்து நடப்பதற்கும், நம்மை சூழப்பாளையம் இறங்கியுள்ள கர்த்தருடைய சேனைகளைக் காணவும், நம்முடைய மாம்சீக கண்களுக்கு முன்பு எவ்வித அற்புதமும் நிகழ்த்தப்படாமலேயே, நமக்கான அவர்களின் பாதுகாப்பையும் உணர்ந்து கொள்வதற்கும் உதவி செய்யப்படுகின்றோம். கர்த்தர் அருளியதும் மற்றும் விசுவாசமானது கண்டு, ஏற்று, பற்றிப்பிடித்து, இளைப்பாறி, அதினால் பலப்படுத்துகிறதுமான இந்த ஒத்தாசைகள் இல்லாமல் கிறிஸ்தவ போராட்டத்தில் போராடிச் செல்வதற்கு நம்மில் எவரும் பலத்தில் போதுமானவர்கள் அல்ல." R. 2350, c.1, p.1.

---

**"நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்." எபி. 3:14.**

"அதிருப்தியின் ஆவி தெய்வீக முன்னேற்பாடாகிய மன்னாவை விட்டு விலகி, தங்களுடைய சுயதேவைகளுக்கு அல்லது மற்ற பூமிக்குரிய தேவைகளுக்கான மற்ற உணர்வுகளுக்காக ஏங்கும்.

அவர்கள் விரும்புவதை முழுமையாய் பெற்றுக்கொள்வதற்கான அத்தகைய வாய்ப்பையும் கர்த்தர் அருளியுள்ளார். . . . வேதாகமம் தெய்வீக சத்தியம் எனும் மன்னாவை அளிக்கின்றது. சத்தியம் சேகரிக்கப்பட்டு, வைக்கப்பட்டு, சுடப்பட வேண்டும், இதுவே தேவனுடைய முன்னேற்பாடு. அது ஆரோக்கியமானது, சத்துள்ளது, இதுவே, தேவனுடைய ஜனங்களான நம்மை பலப்படுத்துவதற்கும், பூரணப்படுத்துவதற்கும் தேவையான விஷயமாகும். எனினும் சிலர் எகிப்தின் மாம்சீக விஷயங்களை—உலகக்கூற்றுகளை இச்சிக்கின்றனர். கர்த்தரும் இவைகளை (உலகக்கூற்று) இவர்கள் கண்டடைவதற்கு அனுமதிக்கின்றார். இவர்கள் தவறான ஆய்வுகளினாலும், பரிணாம வளர்ச்சிக் கோட்பாடுகளினாலும் தங்களை நிரப்பிக் கொள்கின்றனர், இதினிமித்தம் இவர்களின் புது சிருஷ்டி அழிகின்றது. இவர்கள் தேவனுடைய ஜனங்களாக இருப்பதையும் போதகரின் அடிச்சுவடுகளில் நடந்து செல்வதையும் நிறுத்தி விடுகின்றனர். இவர்கள், அக்கினியால் அல்லது இவர்கள் இச்சித்தவைகள் உண்டாக்கிய தப்பறையினால் உருவாகும் அமைதியற்ற நிலையினால் பட்சிக்கப்படுவார்கள்." R. 5306, c.2, bottom; R.5307,c.1,p.1.

---

**"ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம்." எபி. 4:16.**

"ஏற்ற சமயத்தில் சகாயம் வேண்டுமெனில், நாம் அதற்காக கேட்க வேண்டும். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் உண்மையில் தேவைகள் நிறைந்த சமயங்களேயாகும். ஆகவே, ஜெப சூழ்நிலையில்—இடைவிடாமல் தொடர்ந்து ஜெபிக்கும் ஜீவியம் வாழ்வது நமக்கு அவசியமாகும்." R. 1802, top.

"கர்த்தருடைய உண்மையான ஜனங்களாய் இருப்பவர்கள் தங்களுடைய தோல்வியினிமித்தம் மிகவும் வேதனைப்படுவதால், எதிர்காலத்தில் தேவைப்படும் வேளையில் இரக்கத்தைப் பெறவும், சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் கிருபாசனத்தண்டையிலே சேருவதற்குத் தூண்டப்படுகின்றனர். . . 'ஓ! எந்தப் பூமிக்குரிய மேகமும் உம்மை உமது அடியானின் கண்களினின்று மறைக்காமல் இருப்பதாக' என்ற கவிஞனின் வார்த்தைகள் மூலம், அர்ப்பணிக்கப்பட்டவர்களின் உணர்வுகள் அருமையாக வெளிப்படுத்தப்படுகின்றது."
R. 3407, c.1, top and p.1.

**"அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது." எபி. 6:19.**

"'பரிசுத்த ஸ்தலத்தில்' நிற்கும் ஆவிக்குரிய மனங்கொண்ட புது சிருஷ்டியானது **விசுவாசத்தினால்,** 'திரையின்' இடுக்கு வழியே, 'மகா பரிசுத்த ஸ்தலத்தின்' மகிமை, கனம், சாகாமை பற்றி அறிந்துகொள்கின்றது. இந்த விசுவாசம் திரைக்கு அப்பால் நுழைவதற்கு ஆத்துமாவுக்கு நிச்சயமும், உறுதியுமான நங்கூரமாக உள்ளது." T. 21, p.2.

---

**"அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே." எபி. 10:23.**

"நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை ஆரம்பித்து வைத்ததும், நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை முடித்து வைக்கவும் போகிறதான விசுவாசத்தில் நாம் அசைவில்லாமல் உறுதியாய் இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். கர்த்தர் நம்மை வழிநடத்த வல்லவராய் இருக்கின்றார். மேலும், நாம் நம்முடைய பங்கைச் செய்வோமானால் அவரும் செய்வார். நாம் உண்மை உள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலேயே கர்த்தர் நம்மை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆகவே, எவ்வித சந்தேகங்களும், பயங்களும் இல்லாமலும், எவ்வித தடுமாற்றமும் இல்லாமலும், நாம் அறிக்கையிட்டுள்ள விசுவாசத்தில், நாம் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கிறதையே, அனைத்து விஷயங்களும் சார்ந்துள்ளது. மேலும், வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மை உள்ளவராயிருக்கிறார்' என்ற உறுதியே நம்முடைய இறுதி வெற்றிக்கான நம்முடைய விசுவாசத்தின் ஆதாரமாக உள்ளது. வேதாகமத்தில், "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் நமக்காகக்" கொடுக்கப்பட்டுள்ளதை நாம் அறிவோம். . . . நாம் நம்முடைய விசுவாசத்தில் உறுதியாய் இருந்தோமானால், தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியுள்ள அனைத்தையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். அவர் உண்மை உள்ளவராய் இருப்பார்; அவர் பண்ணின வாக்குத்தத்தங்களை அவர் புறம்பாக்கிப் போடுவதில்லை. அவர் கூறின அனைத்தையும் அவர் நிறைவேற்றுவார்." R. 5698, c.1, p.5.

**"ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்." எபி. 10:35.**

"சத்துருக்களின் சேனைகள் எதிர்க்கின்றனவோ—அவைகள் உன்னுடைய வழியில் தடைகளை வைக்கின்றனவோ, உன்னுடைய சக்தியைத் தடைசெய்து, உன் மீது நிந்தைகளை குவிப்பதின் மூலம் துவண்டுபோகச் செய்கின்றதோ, திகிலும், அச்சமும் உன்னுடைய இருதயத்தில் நிரம்பத்தக்கதாக சூழ்நிலைகள் உனக்கு எதிராக இருக்கின்றதோ, 'பயப்படாதே,' 'தேவனை நோக்கிக் காத்திரு' அவருடைய அன்பான வழிநடத்துதலுக்காகக் காத்திரு என்று உன் ஆத்துமாவிடம் கூறு. இத்தகைய அனுபவங்கள் மூலமாக தேவனுடன் ஏற்படும் ஆசீர்வாதமான நெருக்கம் இருதயத்தில் பயத்தைப் புறம்பே தள்ளும் பூரணமான அந்த அன்பை உருவாக்கும்போது—'அலைகள், மேகங்கள் மற்றும் புயல்காற்றின் மத்தியில் அவர் அமைதியாக உன் வழியைச் சரி செய்வார்'—அப்போது நீ அதிகமதிகமாகவும், முழுமையாகவும், விசுவாசத்தின் ஆசீர்வாதமான இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கலாம். மேலும், கடும் புயல் மேகத்தின் மீது பறக்கிறது போல நீயும் கிறிஸ்தவ அனுபவங்களில், அத்தகைய உயரத்தில் வாழ்ந்தால் எப்பொழுதும் கர்த்தருக்குள் களிக்கூரவும், எல்லாவற்றிலும் நன்றி செலுத்தவும் உன்னால் முடியும்." R. 1906, c.1, p.3.

---

**"நீங்கள் தேவனுடைய சித்தத்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது." எபி. 10:36.**

"தேவ சித்தம் எது? 'நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே (உங்களைக் குறித்த) தேவ சித்தமாயிருக்கிறது' என்று கூறப்பட்டுள்ளது (1 தெசலோனிக்கேயர் 4:3). . . . நாம் நம்மையே முழுமையாய் அவருக்கு அர்ப்பணிக்கும்போது நாம் தேவனுடைய சித்தம் செய்கிறவர்களாய் இருக்கின்றோம். . . . ஆனால், நம்மை பரிசோதிக்க அவர் சித்தமாயிருக்கிறார். நாம் தேவனை எவ்வளவு அன்புகூருகின்றோம்? எந்த அளவு நாம் உண்மையாய் இருக்கின்றோம்? . . . நம்முடைய உண்மை நிலைக்கு ஏற்றாற்போல் நாம் பரீட்சிக்கப்படுவோம். கிறிஸ்துவுக்காக நாம் எதைச் சகிக்க விருப்பமுள்ளவராக இருக்கின்றோம்? நம்முடைய ஒப்புக்கொடுத்தல்

எவ்வளவு ஆழமாக உள்ளது? கர்த்தருடைய சித்தத்திற்கு முழு இசைவுள்ளவர்களாக இருக்கின்றோமா? நம்முடைய விருப்பங்கள் மேலோட்டமாக மாத்திரம் உள்ளதா அல்லது இருதய பூர்வமாய் உள்ளதா? நாம் அர்ப்பணிப்போமா? என்பது மாத்திரம் கேள்வியாயிராமல்—கிறிஸ்தவன் ஒருவன் இந்த அனைத்து ஆரம்ப படிகளை எடுத்த பின்னர் அவன் பொறுமையாய்ச் சகித்தலை, கீழ்ப்படிதலை மற்றும் உண்மையை எந்த அளவிற்குக் காண்பிப்பான்? என்பதே கேள்வியாகும். தேவன் இம்மாதிரியான பரீட்சைகளுக்குள் நம்மை உட்படுத்துகின்றார். காரணம், ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு அவர் மாபெரும் கனத்தை அருளியிருக்கிறார். இவர்கள் ஒரு தெரிந்துகொள்ளப்பட்ட கூட்டத்தினர். மேலும், இவர்களோ வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்வார்கள்." R. 5332,c.1,p.5-7; c.2,p.3.

---

**"கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்." எபி. 12:6, 7, 11.**

"இத்தகைய கண்டிப்பான ஒழுக்கமுறைகள் கோபத்தினால் ஏவப்படாமல் . . . தம்முடைய அன்பினாலே ஏவப்படுகின்றது என்றும், நாம் கண்டிப்பான ஒழுங்குமுறைகள், சோதனைகள் மற்றும் ஜீவியத்தின் அனுபவங்களால் நேர்த்தியாக நடத்தப்பட்டால், அவைகள் நமக்கு, 'மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்கும்';— இவைகள் கர்த்தர் நம்மை அழைத்துள்ள வேலைக்கு அவர் நம்மை பயன்படுத்தத்தக்கதாக குணலட்சணங்களை நமக்குள் உருவாக்கும் என்றும் அவர் விவரிக்கின்றார். . . குமாரனின் ஆவியை உண்மையாய்ப் பெற்றிருக்கும் அனைவரின் பதிலும் நம்முடைய போதகரும், கர்த்தருமானவரின் வார்த்தைகளான, 'என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது,' என் தேவனே, 'உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது' என்பதாகவே இருக்கும். இத்தகையவர்கள் கர்த்தருடைய சிட்சைக்குச் செவிசாய்த்து, தெய்வீக கிருபைக்கும் அதிகமதிகமாய் அடியெடுத்து வைத்து, ஆறுதலான, கிருபையான

உதவியான வார்த்தைகளையும் கேட்பார்கள்." R. 3059, c.2, p.2.

---

**"நான் உன்னைவிட்டு விலகுவதில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே." எபி. 13:5.**

"நம்முடைய மேலான நன்மைகள் . . . குறித்த விஷயங்கள் மீதே நம்முடைய பிதா தொடர்ந்து கவனம் கொண்டுள்ளார். நாம் கர்த்தருக்கு மிக நெருக்கமாய் இருந்தால், நாம் விழுந்துபோன ஆவிகளின் வல்லமையிலிருந்து பாதுகாக்கப்படுவோம். . . . உண்மையில்லா தன்மையே நம்மை, நம்முடைய புது சிருஷ்டியின் நன்மைக்கு உட்பட்ட எல்லையில், அவர்களின் வல்லமைகளுக்குக் கீழ் ஒப்புவிக்கும். ஒருவேளை, நம்முடைய போதகரின் விஷயம் போன்று, நம்முடைய விடுதலைக்காகவும், உயர்த்தப்படுதலுக்காகவும், நம்முடைய மேலான நன்மைக்கென்று—கர்த்தர் அனுமதியாத வரை, அவர்களால் நம்முடைய சரீரங்களுக்கு எவ்வித தீங்கும், வன்மமும் செய்ய முடியாது . . . நமது கர்த்தர் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்ட இரவில், . . . பிலாத்து . . . அவரிடம், 'உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உனக்குத் தெரியாதா?' என்று கூறினதற்குப் பிரதியுத்தரமாக இயேசு: 'பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என் மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது' என்றார். போதகரின் பின்னடியார்கள் அனைவருக்கும்கூட இப்படியாகவே இருக்கின்றது. தேவனுடைய கிருபையே போதுமானதாகும். பரலோகத்தில் இருக்கிற பிதா தம்முடைய மகிமைக்காகவும், நம்முடைய மேலான நன்மைக்காகவும், அனுமதியாத வரையிலும் நம்முடைய தலையில் உள்ள ஒரு மயிரைக் கூட சேதப்படுத்துவதற்கு மனுஷன் வல்லமையற்றவனாவான்."

R. 5540, c.1, p.2; c.2, p.3

---

**"அதினாலே நாம் தைரியங்கொண்டு; கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லப்படும்." எபி. 13:6.**

"உலகத்தில் கிறிஸ்தவனுடைய நிலை மிகவும் விநோதமானதாகும். வேறு யாராலும் அவனை போன்று அவ்வளவு தைரியமாகவும், சுதந்திரமாகவும் இருக்க முடியாது. எனினும் உண்மையான தேவனுடைய பிள்ளை தன்னிறைவு கொண்டவனும்

இல்லை, எந்த வெளி உதவியின் மேல் சாராதவனுமில்லை. அவன் பெருமை பாராட்டக்கூடாது என்றும், மாறாக தன்னுடைய இயலாமையையும், தனக்கு தேவன் தேவை என்பதையும் உணர்ந்தவனாய் தாழ்மையான சிந்தையோடு இருக்க வேண்டும் என்றும் கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு புத்திமதி கூறுகின்றது. அவன் தாழ்மையான சிந்தை கொள்ளாத வரையிலும், அவனால் கர்த்தருக்குப் பிரியமாய் இருக்க முடியாது என்பது உண்மையே. அதே சமயம் அவன் முழு தைரியமும், நம்பிக்கையும் கூட கொண்டிருக்க வேண்டும். அண்டசராசரத்தில் உள்ள எந்த வல்லமையும் நம்முடைய தேவனுக்கு எதிர்த்துப் போராட முடியாது. மேலும், அவர் தம்முடைய பிள்ளைகளுக்குப் பலமும், கேடகமுமாய் இருக்கின்றார் என்று கூறியுள்ளார். அவர் மேல் விசுவாசத்தை வைப்பவர்களுக்கு அவர் பலமுள்ள கோபுரமாய் இருக்கின்றார்." R. 5539, c.1, p.6.

---

**"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்." யாக். 1:5, 6.**

"தெய்வீக பார்வை அங்கீகரிக்கக்கூடிய விஷயம் தாழ்மையான சிந்தையேயாகும். பரத்திலிருந்து வரும் ஞானத்தைப் பெற்றுக்கொள்கிறவர்களுக்கு இத்தகைய மனநிலை அவசியமாய் உள்ளது—தங்களுக்கு ஞானம் இல்லாததையும், தங்கள் சொந்த குறைவுகளையும் அவர்கள் தாழ்மையாய் உணர்ந்துகொள்ள வேண்டும், இல்லையெனில் இம்மாதிரியான இருதய நிலையில் இருப்பவர்களுக்கு மாத்திரமே தற்காலத்தில் தேவன் அருள விரும்பும் ஞானத்தை இலவசமாகவும், இருதய பூர்வமாகவும் இவர்களால் பெற்றுக்கொள்ள முடியாது. மேலும், தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தத் தாழ்மையான மனமே அடிப்படை தேவையாக உள்ளது—ஏனெனில், தாழ்மையான மனம் இல்லாமல் யாரால் நியாயமாகவும், நிதானமாகவும், பாரபட்சமற்று சிந்திக்கும் சரியான நிலையில் இருக்க முடியும்? ஆகவே, கிறிஸ்துவின்

சிந்தையின் முதலாம்பட்சமான மூலக்கூறு தாழ்மை என்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்." R. 2585, c.2, p.3

---

**"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்." யாக். 1:12.**

"அப்போஸ்தலர் கூறுவது போன்று, இந்தப் 'பற்றியெரிகிற அக்கினி உங்களைச் சோதிக்க **வேண்டும்.**' இது தற்காலத்தில் உள்ள கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்திலிருந்து, அவருடைய மகிமையான இராஜ்யத்தில் ஒரு பங்கை அடைய போகும் அனைவருக்கும்—அவர்கள் தேர்வில் வெற்றி பெறுவதற்கு **அவசியமாய்** உள்ளது. ஆ, நாம் இந்தச் சிந்தையைத் தொடர்ந்து நமக்கு முன்பு வைத்திருந்தால் கர்த்தருடைய தயவுள்ள சித்தம் செய்வதற்கும், விரும்புவதற்கும் இது எவ்வளவு நமக்கு உதவியாக இருக்கும்—மேலானது என்று நம்முடைய அன்பான போதகர் கண்டு அனுமதிக்கும் எதையும், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை நம்மில் உண்டாக்கவே அவர் செய்கின்றார் என்று நாம் **அறிந்து,** மகிழ்ச்சியோடும், உண்மையோடும் சகிக்க நமக்கு உதவியாக இருக்கும். இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது 'நம்முடைய சோதனைகள் எவ்வளவு இலேசானதாகத் தோன்றும்! நம்முடைய பிரயாணத்தின் வழி எவ்வளவு குறைவாக உள்ளது என தோன்றும்!'" R. 2793, c.2, p.3, 4.

---

**"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." யாக். 4:6.**

"தாழ்மையுள்ளவர்கள் மீது பரமபிதா ஆழமான அன்பு கொண்டிருக்கிறார். இதுவே நாம் நம்மை தாழ்த்த வேண்டியதற்கான காரணமாக அமைகின்றது. 'தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார்' என்றும், நேர்த்தியான பளிங்குக்கு ஒப்பான குணநலத்திற்கான அடிப்படை கொள்கைகளில் ஒன்று தாழ்மை என்றும் நாம் காண்கையில், இந்தப் பண்பை வளர்த்துக் கொள்வதற்கும், தேவன் மேலான ஆசீர்வாதத்தை நமக்கு அளிக்கத்தக்கதான மனநிலையை அடைவதற்கும் அதிகமதிகமாய் நாட வேண்டும்." R. 5843, c.2, p.1.

"தங்களுக்கும், மற்றவர்களுக்கும் அநுகூலமாய் இருக்கப்போகும் நிலைக்கு தாங்கள் ஆயத்தமாகுவதற்குத் தாழ்மையான இருதயமுள்ளவர்களே ஆயத்தமாயிருப்பார்கள். . . . இயேசு மகிமைக்கும், கனத்திற்கும், அழியாமைக்கும் வழிநடத்தும் சரியான வழியை, அதாவது முழுமையாய் சுயத்தைத் தாழ்த்துவதும், தெய்வீக சித்தம் எதுவாக இருந்தாலும் அதற்கு முழுமையாய் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுக்கிறதுமான பாதையை நமக்கு விளக்கிக் காட்டியுள்ளார்." R. 5847, c.2, p.3, 4.

---

**"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்." யாக். 4:8.**

"கர்த்தரோடு பழகுவதையும், ஜெபத்திலும், அவருடைய விலையேறப்பெற்ற வார்த்தைகளைக் கற்பதிலும், அவருடைய தயவுகளை, அவருடைய பராமரிப்புகளை, நம்முடைய தனிப்பட்ட அனுபவங்களில் வெளிப்படும் அவருடைய கிருபை மற்றும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் உள்ள அவருடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களைத் தியானிப்பதிலும் அவருடன் நெருங்குவதையும் நாம் விருத்தி செய்வோமாக. இவ்விதமாய், 'தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்' அவர் தம்மை உனக்கு வெளிப்படுத்தி, உன்னோடு வாசம் பண்ணுவார்." R. 1949, c.2, p.2.

---

**"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக: அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்." 1 பேது. 1:3, 4.**

"அழிந்து போகும் மனுஷனால் இத்தகைய ஆச்சரியமான மகிமையைக் கற்பனை செய்து பார்க்கக் கூடுமோ? இத்தகைய அழைப்பை நினைக்கும் மாத்திரத்தில், இத்தகைய பிரமிக்கத்தக்க கிருபையை—மனித அனுபவத்தால் கண்டறிய முடியாத இத்தகைய பேரின்பத்திற்கு நாம் மிகவும் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்து நம்முடைய இருதயங்களை, தேவனுக்கு முன்பு தரைமட்டும் தாழ்த்தச் செய்யும். இத்தகைய சொல்லமுடியாத கிருபைக்கு, நம்முடைய நன்றி உணர்வையும், நம்முடைய நன்றியையும் பொருத்தமாக விவரிக்கக்கூடிய

எதை நாம் கர்த்தருக்குச் செலுத்தக் கூடும்? நம்மை இவ்வளவாய் அன்புகூர்ந்தவருக்கு, இவ்வளவாய் ஆசீர்வதித்தவருக்கு, இவ்வளவாய்க் கனப்படுத்தினவருக்கு நாம் மிகவும் உண்மையாக ஊழியஞ்செய்தாலும், அது மிகக் குறைவானதாகவே இருக்கும்!" R. 5855, c.1, p.2.

---

**"கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது." 1 பேது. 1:5.**

"தேவனுடைய வல்லமை (அவருடைய வார்த்தை மற்றும் வழிநடத்துதல்கள் ஆகும்)." R. 3282, c.1, top.

"**தேவனுடைய பலத்தினாலே காக்கப்படுதல்** (நாம் பற்றிக்கொள்ளுவதற்கான மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும், வழிநடத்துதல்களுமாகும்)." R. 1007, c.1, p.2.

"நாம் கஷ்டங்களில் இருக்கும்போது, நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் கர்த்தரை நோக்கிப் பார்ப்பவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய பரமபிதா, அவர்மேல் விசுவாசம் வைக்க விரும்புகின்றார். 'இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்படுகின்றோம்' என்று பரிசுத்தவானாகிய பேதுரு நமக்குக் கூறுகின்றார். ஆகவே, 'நாம் கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்பட்டாலும், நாம் மிகவும் சந்தோஷமாக இருக்கின்றோம்' 'அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும் போது, அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்படும்.'" R. 5403, c.1, p.4.

---

**"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாய் இருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது." 1 பேது. 3:12.**

"அவரில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, பிதா மற்றும் குமாரனின் பிரசன்னம் தங்களோடு தங்கி தரித்திருக்கிறது என்று உணருகிறவர்களைத் தவிர வேறொருவராலும் கிருபையின் சிங்காசனத்தண்டைக்கு அடிக்கடி வர முடியாது. . . . தேவனுடைய எந்த ஒரு பிள்ளையும் அடிக்கடி அவரிடத்திற்கு

வருவதற்கு தயக்கமோ அல்லது அவரோடு தொடர்பும், ஐக்கியமும் கொள்வதற்குத் தாமதிக்கவோ கூடாது. . . . தேவனிடத்தில் அணுகும்போது, அவர் முக்கியத்துவம் வாய்ந்த மற்ற விஷயங்களினால் மிகவும் வேலையாக இருப்பார் என்றோ அல்லது, குறைவான முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களுக்காக நாம் அடிக்கடி அவரை அணுகுவதினிமித்தம் அவர் சலிப்படைவார் என்றோ நாம் பயப்பட வேண்டியதில்லை." R. 1865, c.1, p.5, 7; c.2, p.1.

---

**"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்." 1 பேது. 4:12, 13.**

"நாம் உண்மையாக தேவனுடைய புத்திரர்களாகவும், கிறிஸ்துவின் போர்வீரர்களாகவும் இருப்போமாகில், நம்மைச் சோதிக்கும்படி நம் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து, ஏதோ புதுமை என்று எண்ணக்கூடாது என்று நாம் முன்கூட்டியே எச்சரிக்கப்பட்டுள்ளோம். . . . இந்த விஷயங்கள் கிறிஸ்தவ போர்வீரனால் எதிர்பார்க்கப்பட்டு, அதற்கென்று கவனமாகவும் ஆயத்தமாகவும் காணப்பட வேண்டும். விசுவாசத்தின் வல்லமையினாலே நாம் எதிராளியானவனை எதிர்க்க வேண்டும்—'விசுவாசத்தில் **உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்'** என்று அப்போஸ்தலர் பேதுரு கூறுகின்றார். இதே கருத்தை அப்போஸ்தலர் யோவானும் கூறுகின்றார்—'நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்' (1 யோவான் 5:4). . . . விசுவாசம் தேவனுடைய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களைப் பற்றிப்பிடித்து, அவைகளின் முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். விசுவாசம், தேவனுடைய பலத்தையும் பற்றிப்பிடித்துக் கொண்டு, ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையையும் கண்டடைய வேண்டும்."

R. 1859, c.2, p.5, 6.

---

**"அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்." 1 பேது.5:7.**

"கர்த்தர் தம்முடைய ஜனங்கள், தங்கள் கவலைகளையெல்லாம் தம்மேல் வைப்பதற்கு வழிநடத்தவும், அவர்களை தம்மண்டை நெருக்கமாகக் கொண்டு வரவும், பொறுமையோடு சகித்திருப்பதை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும், அவர்களுக்கு தம்முடைய உதவி தேவை என்பதையும், அவர் இல்லாமல் அவர்கள் ஈனரும்,

ஆதரவற்றவர்களும் என்பதை காட்ட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இந்த அனுபவங்களை அனுமதிக்கின்றார். கர்த்தருக்குள்ளான நம்முடைய சமாதானத்தைக் கொள்ளை கொண்டு போகும் . . . கவலைகளை . . . ஞானமற்ற முறையில் தவிர்க்காமல், நம்முடைய மாபெரும் சுமைதாங்கியான இயேசு நம்முடைய கவலைகளையெல்லாம்—நம்முடைய சமாதானத்தைக் கெடுக்கும் எல்லாவற்றையும்—அவர் மேல் வைத்துவிடும்படி நம்மை அழைத்துள்ளார், வலியுறுத்தியுள்ளார் என்ற சிந்தனையைக் கொண்டு ஞானமாய் விட்டுவிட வேண்டும். அவர் நம்முடைய சுமையை இலகுவாக்கி நம்முடைய இன்னல்களையும் இலகுவாக்குகின்றார். இது ஒரு விசுவாசத்தின் பரீட்சையாகும், மேலும் அவருடைய அன்பின் மீதும், அவருடைய வாக்குத்தத்தங்கள் மீதும் வைக்கும் விசுவாசத்தை அல்லாமல் வேறு விதத்தில் இதில் ஜெயங்கொள்ள முடியாது."
R. 5509, c.1, p.2, 3.

---

**"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது." 2 பேது. 1:4.**

"இவைகளின் மூலம்—இவைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் . . . ஓ! மாபெரும் சிருஷ்டிகர் பாவிகளை மீட்டுக்கொள்வதற்கு மாத்திரமல்லாமல், அவருடைய தாராளத்தையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவர்களை இணங்கச் செய்வதற்கும், வலியுறுத்துவதற்கும் மனம் இரங்கினது எத்தனை ஆச்சரியம்!"
R. 3059, c.1, p.4.

"நாம் நம்மை உண்மையுள்ளவர்களாக நிரூபித்துத் தொடர்ந்து முன்னேறுகையிலேயே, படிப்படியாக மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் நமக்கு வெளியாகின்றது—இவைகள் மூலம் வரும் பலத்தினாலும், தைரியத்தினாலும்—பரிசைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக நாம் ஓடுவதற்கு உதவப்படுகின்றோம்."
C. 220, p.2.

**"இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது." 2 பேது. 1:5, 8.**

"நம்முடைய வைராக்கியத்தை புதுப்பிக்கிறதாயும், நம்முடைய தைரியத்தைப் புத்துயிர்படுத்துகிறதாயுமுள்ள விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் மீதுள்ள . . . நம்முடைய விசுவாசத்தோடு, அதிக ஜாக்கிதையுள்ளவர்களாய் நம்முடைய விசுவாசத்தோடே, தைரியத்தையும், ஞானத்தையும் கூட்டி வழங்க வேண்டும் என்று பரிந்துரைக்கின்றார். இன்னுமாக, 'இவைகளை நீங்கள் செய்தால், நீங்கள் **ஒருக்காலும் இடறிவிழுவதில்லை'** என்றும் கூறுகின்றார். இந்தக் குணநலன்களைத் தொடர்ந்து விருத்திச் செய்வதன் மூலம், நம்முடைய ஆவிக்குரிய பார்வை தெளிவடைந்து, தேவனுடைய சத்தியத்தை முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவுவதால், இவ்விதமாக, 'நீதியாகிய வலதிடது பக்கத்து ஆயுதங்களைத் தரித்து' நாம் 'எதிராளியானவன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடவும்' விசுவாசத்தில் ஜெயங்கொள்ளவும், நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தவும் உதவப்படுவோம்." R. 1859, c.2, p.7, 8.

---

**"ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்." 2 பேது. 1:10, 11.**

"இராஜ்யத்திற்குத் தகுதியான எவரும் அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் நாம் இளைப்பாறலாம். அப்படிப்பட்டவர்களைக் குறித்து இப்படியாக எழுதப்பட்டுள்ளது, அதாவது, 'அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்

கொள்ள ஒருவனாலும் கூடாது' என்றும், 'இவைகளைச் செய்தால் (கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிசாய்த்து, அவருடைய ஆவியை விருத்தி செய்து, அவருடைய வழிகளில் நடந்தால்) நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.' " R. 2257, c.2, top.

---

**"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்தகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." 1 யோவான் 1:9.**

"அஜாக்கிரதையாய் இருந்ததினிமித்தமாக நாம் தவறுகள் செய்துவிட்டு . . . கர்த்தரிடத்தில் மன்னிப்புக்காகச் செல்லலாம் என்ற எண்ணத்தை நம்மிடத்தில் வளர்த்திக் கொள்வதற்கு ஏதுவான தாக்கத்தை இவ்வார்த்தைகள் நமக்குள் ஏற்படுத்த எழுதப்படவில்லை. இதற்கு மாறாக, தெய்வீக கிருபை மற்றும் மன்னிப்பிற்கான இந்த வாக்குறுதிகள், பாவத்தைத் தவிர்ப்பதற்கு ஏதுவான ஜாக்கிரதை உணர்வை நமக்குள் ஏற்படுத்தக்கூடிய உத்வேகத்தை நமது இருதயத்தில் உருவாக்க எழுதப்பட்டுள்ளது. . . . மேலும், மனதளவில் கர்த்தரோடு மிகவும் நெருங்கி, இதன் மூலம் அவருடன் தொடர்ந்து ஐக்கியம் கொள்ளவும், நம்முடைய குற்றங்களை அறிக்கையிட்டு, அவருடைய மன்னிப்பை நாடும்போது நாம் நம்முடைய மாம்சத்தின் அபூரண தன்மைகளை இன்னுமாக ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தாலும், நம்முடைய பயணத்தின் முடிவு வரையிலும் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டவர்களாய் நாம் தொடருவதற்குமே தெய்வீக கிருபையின் இந்த நிச்சயங்களும், மன்னிப்பதற்கான விருப்பமும் உள்ளது." R. 2235, c.2, p.5; R. 2236, c.2, p.2.

---

**"அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்." 1 யோவான் 2:5.**

"தேவனுடைய வார்த்தையைப் **பெற்றுக்கொண்ட** நாம், அதைக் **கைக்கொள்ள** வேண்டும் என்பது அதற்குப் பயபக்தியாய் இருந்து அதற்குக் கீழ்ப்படிவதாகும். அந்த வசனத்தின்படியே நம்முடைய ஜீவியத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். யாரெல்லாம் தேவனுடைய வசனத்தைக் கைக்கொள்கின்றார்களோ, இதன் விளைவாக தங்களுக்குள் தேவ அன்பு பூரணப்பட்டிருப்பதைக்

காணலாம். . . . தேவனுடைய இந்தப் பரிபூரணமான அன்பை நம்மால் பெற்றுக்கொள்ள முடியும் என்று நாம் நம்புகின்றோம். ஒருவேளை சரீரத்தின் பரிபூரண கிரியைகள் தான் எதிர்பார்க்கப்பட்டால், பரிபூரணத்தை அடைவதற்கான நம்முடைய திராணியைக் குறித்து நாம் சந்தேகிக்க வேண்டியதாய் இருந்திருக்கும். ஆனால், விஷயம் **இருதயம்** சார்ந்ததாய் இருப்பதினால், அதை நம்மால் அடையக்கூடும். காரணம் நாம் இருதயத்தில் தூய்மையாய் இருக்க முடியும். . . . தேவனுடைய இந்த அன்பு நமக்குள் பூரணப்பட்டிருப்பது, நம்மிடம் மிக உயர்வான குறிக்கோள்—தேவன் அன்புகூருகிற பிரகாரமாக நாமும் அன்பு கூருகிறோம் என்பதையும் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கும்." R. 5276, c.2, p.3, 5, 6.

---

**"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை." 1 யோவான் 3:1.**

"நீ தேவனுடைய வார்த்தைகளுக்கு ஜாக்கிரதையாய் இருந்து, அதன் சத்தியங்களை நல்லதும், உண்மையுமான அர்ப்பணிப்புள்ள உன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டால், அது உன்னில், தேவன் பேரிலும், அவருடைய திட்டத்தின் பேரிலும் ஓர் அன்பையும், நற்செய்தியை அறிவிப்பதற்கும், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்குமான விருப்பத்தையும் ஜெநிப்பிக்கும். பின்னர், அதுவே உன் ஜீவியம் முழுவதும் உன்னை இயக்கும் சக்தியாகும். மேலும், இது உன்னை உலகத்திடமிருந்தும், அநேக பெயர் கிறிஸ்தவர்களிடமிருந்தும் **ஆவியில்** பிரிப்பதோடல்லாமல், அத்தகையவர்களிடமிருந்து முற்றிலும் பிரிந்துவிடுவதற்கு ஏதுவாக வழிநடத்துகின்றது. அவர்கள் உன்னை அந்நியனைப் போன்று கருதி அவர்களுடைய நட்புறவிலிருந்து விலக்கி விடுவார்கள். மேலும், நீ கிறிஸ்துவின் நிமித்தம் கனவீனனாகவும், பைத்தியமாகவும் கருதப்படுவாய், காரணம் அவர்கள் கர்த்தரை அறியாதது போல நம்மையும் அறிந்திருக்கவில்லை." A. 347, p.1

**"இனி எவ்விதமாய் இருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை, ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கின்றோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவன் எவனும் அவர் சுத்தமுள்ளவராய் இருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்." 1 யோவான் 3:2, 3.**

"நம்முடைய மகிமையடைந்த கர்த்தர் வருவார் என்ற 'பாக்கியமான நம்பிக்கை'—குறிப்பிட்டுள்ள நம்முடைய ஆதார வசனத்தைக் காட்டிலும் அதிக சுத்திகரிப்பு தரும் வேறு எந்தச் சத்தியமும் நமக்குத் தெரியாது. இந்த நம்பிக்கை சுத்திகரிக்கின்றது. 'அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்' (1 யோவான் 3:3). . . . இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் மாத்திரமே இந்த நம்பிக்கையை நேர்மையாகவும், உண்மையாகவும் கொண்டிருக்க முடியும். . . . அன்பான சகோதர சகோதரிகளே, போதகர் திரும்பி வருவார் என்று வாக்குத்தத்தம் பண்ணினதை நம்முடைய மனதிற்கு முன்பு நிறுத்துவோமாக. மேலும், அவருடைய 'பரோஷியா' (கண்களுக்குப் புலப்படாத பிரசன்னம்) காலமாகிய இப்பொழுது, நம்முடைய ஒவ்வொரு வார்த்தையிலும், கிரியையிலும்—ஆம் நம்முடைய ஒவ்வொரு எண்ணங்களிலும் முழு கவனமும், தாக்கமும் கொண்டிருப்பதாக. நாம் விரைவில் நம்முடைய உயிர்த்தெழுதலின் மாறுதல்களை அடைந்து, நம்முடைய அன்பான மீட்பர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசித்து அவருக்கு ஒப்பாயிருப்போம் என்ற நம்பிக்கை . . . நாம் நம்முடைய போதகர் மற்றும் விசுவாச வீட்டாருக்கு ஊழியம் செய்வதற்கான—ஒவ்வொரு வாய்ப்புகள், சிலாக்கியங்கள், கடமைகளுக்கு நம்மை பலப்படுத்தி, நம்முடைய இருதயங்களை ஊக்கப்படுத்துவதாக." R. 3193, c.2, p.1, 2, 4.

---

**"உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்." 1 யோவான் 4:4.**

"சேனைகளின் கர்த்தர் நம்மோடு இருக்கின்றார். அவருடைய வாக்குத்தத்தங்களும், அவருடைய வழிநடத்துதல்களும் இரட்சிப்பின்

சுவர்களாகவும், ஒவ்வொரு திசையிலும் (எப்பக்கத்திலும்) பாதுகாப்பாகவும் உள்ளது. கிறிஸ்துவுக்குள், தேவன் மீதான அன்பை விட்டு நம்மை பிரிப்பது எது? உபத்திரவம் பிரிக்குமோ? இல்லை! அது நம்மை அவரிடம் நெருங்கச் செய்கின்றது. மேலும், அவருடைய பாதுகாக்கும் பராமரிப்பின் கீழ் நாம் இளைப்பாறலாம். அவருடைய பலம், நம்முடைய பலவீனங்களில் விளங்குகின்றது. நாம் நமக்குள்ளாகவே பலவீனர்கள் என்று உணரும்போது, நாம் அவருக்குள் பலம் கொள்கின்றோம். அவர் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதுமில்லை." R.1653, c.2, p.5.

---

**"நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்." 1 யோவான் 4:12.**

"நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர கற்றுக்கொள்கையில், கர்த்தர் நமக்குக் கட்டளையிட்ட உண்மையான, பரந்த மனப்பான்மையுடைய அன்பாகிய, தேவனுடைய அன்பு நமக்குள் பூரணப்படும். அவர் நம்மை அன்புகூர்ந்தது போன்று நாம் நம்முடைய ஜீவனையே மற்றவர்களுக்குக் கையளிக்கும் அளவு—நாம் ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும் என்று கர்த்தர் கூறினார். நாம் **சில** சகோதர சகோதரிகளை **சில சமயமும், சில** சகோதர சகோதரிகளை **எப்பொழுதும்** அன்புகூருகிறவர்களாய் இராமல், **அனைத்து சகோதர சகோதரிகளையும் எல்லா நேரங்களிலும் நாம் அன்பு கூர்ந்து,** அவர்களுடைய பலவீனங்களையும், பூரணமற்ற தன்மைகளையும் கவனியாமல், தேவன் அவர்களைப் பார்க்கும் உன்னதமான கண்ணோட்டத்தில் பார்த்து, தேவன் கிறிஸ்துவின் நிமித்தம் நம்முடைய கறைகளைக் கவனியாதது போன்று நாமும் ஒருவரையொருவர் மன்னிக்க வேண்டும். தேவன் **நம்முடைய** அக்கிரமங்களை மன்னிப்பார் என்று நாம் நம்பி, எதிர்பார்ப்பது போன்று, நாமும் நமக்கு விரோதமாக அக்கிரமம் செய்தவர்களை மன்னிக்க வேண்டும். இந்த அன்பு ஒருவனுக்குள் பூரணமடையாத வரையிலும், ஒருவரும், "தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாரில்" ஒருவராக இடம் பெற முடியாது." R. 4849, c.2, p.5.

---

**"நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." 1 யோவான் 5:4.**

"இந்தப் போராட்டத்தில் (பாவத்திற்கு எதிராக) நம்முடைய

வெற்றியானது, மாபெரும் போதகர் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையையும், நம்முடைய விசுவாசத்தின் கூர்மையையே பெரிதும் சார்ந்துள்ளது. நாம் அவருடைய ஞானத்தின் மீது நம்பிக்கை கொண்டிருந்தால், நாம் அவருடைய போதகத்தின்படியே நடக்கிறவர்களாகவும், எல்லா காவலோடும் நம்முடைய இருதயங்களைக் (மனதை) காத்துக்கொள்கிறவர்களாகவும் இருப்போம். நாம் அவருக்கு முற்றும் கீழப்படிந்து இருக்க, கர்த்தருடைய ஞானத்தின் மீது விசுவாசமும், ஏற்ற சமயத்தில் சகாயம் பெறுவதும் நமக்கு அவசியமாய் உள்ளது, ஆகவே தான், 'நம்முடைய **விசுவாசமே** உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்' என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது விசுவாசம் காட்டுவதாலும், அதன் விளைவாக வரும் கீழ்ப்படிதலாலும், 'நாம் ஜெயங்கொள்கிறவர்களாகவும், நமக்கென்று தம்மையே கொடுத்தவரும், நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்கிறவர்களாக மாற்றப்படுவோம்.'"

R. 2249, c.2, p.1

---

**"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான்." 1 யோவான் 5:18.**

"இவர்கள் தங்கள் இருதயங்களைக் காத்துக் கொண்டால், 'இந்தப் பொல்லாங்கன் அவர்களைத் தொடான்' அவர்களைக் காயப்படுத்தமாட்டான், அவர்களுக்குத் தீமை விளைவிப்பதில்லை. அவனுடைய தீமைகள் பரீட்சை செய்வதற்கு உதவியாகவும், 'மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை' அவர்களுக்கு உண்டாக்குவதற்கென்று தேவனால் அனுமதிக்கப்பட்டதாகவும் காணப்படலாம். ஆனால், எதிராளியானவன் அவர்களுக்குத் தீங்குச்செய்ய முடியாது; காரணம், இவர்கள் தேவனுக்குச் சொந்தமானவர்கள். மேலும், தங்களுடைய இருதயங்களை முழு அர்ப்பணிப்போடு அவரிடம் ஒப்புக்கொடுத்த அனைவரின் மேலான நன்மைக்காக, பாதுகாப்பார் என்று அவர் வாக்குகொடுத்துள்ளார்."

R. 4660, c.2, p.3.

---

**"நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்." வெளி. 2:10.**

"நல்ல அர்ப்பணிப்பு பண்ணியிருப்பது மாத்திரம் போதாது; ஒரு குறிப்பிட்ட காலம் வரை நாம் நல்ல போராட்டம் போராடினால் மாத்திரம்

போதாது. இல்லவே இல்லை! ஒருமுறை உண்மையாய் இருந்தவர்களை தேவன் இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார். முன்பு உண்மையாய் இருந்தவர்களையும், பின்னர் உண்மையாய் இருந்தவர்களையும் **எப்பொழுதும்** உண்மையாய் இருப்பவர்களையுமே அவர் ஏற்றுக்கொள்ள விருப்பமுள்ளவராய் இருக்கின்றார். யாரை தம்மால் முழுமையாக நம்பமுடியுமோ, யாரிடம் தாம் உண்மையுள்ளவர்களுக்கென்று வாக்குத்தத்தம் பண்ணியுள்ள மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் நம்பகமாய் கொடுக்க முடியுமோ, அத்தகையவர்களையே இராஜ்யத்தின் வகுப்பாரில் ஏற்றுக்கொள்ள அவர் விருப்பமுள்ளவராய் இருக்கின்றார். இந்த மேன்மையான பலனையும், உயர்வையும் இவர்கள் பெறுவதற்கு முன்பு, இவர்கள் முழுமையாக பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட வேண்டும்."
R. 5594, c.2, p.3.

---

**"ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை." வெளி. 2:11.**

"இத்தகைய உயர்வான மகிமையைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் மனிதனின் மனம் திகைப்படைகின்றது; என்றாலும் கர்த்தர் மேல் ஆழமான அன்பு கொண்டுள்ள அந்த இருதயங்கள், கிறிஸ்துவின் நேசத்திற்குரிய மணவாட்டி ஆகவும், அவருக்கு ஒப்பாக இருக்கவும், அவருடைய மகிமையின் பிரசன்னத்தில் என்றென்றும் இருப்பதற்குமான அழைப்பில் உள்ள மேன்மையான கிருபையை உணர்ந்துகொள்ள முடியும். ஆச்சரியமான கிருபை! உலகம் உருவாகுவதற்கு முன்பு கிறிஸ்து பிதாவோடு கொண்டிருந்த மகிமையைக் காட்டிலும் மேலான மகிமைக்கு உயர்த்தப்பட்டதை எண்ணிப் பார்க்கையில் ஆச்சரியம் மேல் ஆச்சரியம் வருகின்றது— அது 'பிதாவுடைய தன்மையின் சொரூபமான' அவருடைய தன்மையின் ஒரு மகிமையாகும். அது 'வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமுடைய' அதிகாரத்தின் ஒரு மகிமையாகும். அது அண்டசராசரத்தின் மாபெரும் சக்கரவர்த்தியான பிதாவாகிய தேவனுக்கு அடுத்தப்படியான ஸ்தானத்தில் ஒரு மகிமையாகும் (1 கொரி. 15:27, 28). மேலும், அது கறைகளற்ற முழுப் பரிசுத்தத்தோடு பிரகாசிக்கும் குணநலனின் ஒரு மகிமையாகும்." R.1262, c.1, p.6

**"ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன்." வெளி. 2:17.**

"வெண்மையான குறிக்கல் கர்த்தருடைய அன்பின் விலையேறப்பெற்ற அடையாளத்தைக் குறிக்கின்றது; மேலும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்ட புதிய நாமம், மணவாளனுடைய நாமமாகும். இவ்வேதவாக்கியம், மாபெரும் இராஜாதி இராஜனுடைய விசேஷமான உறவையும், அவருக்கும் அந்த நபருக்கும் இடையிலான இரகசியத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. ஜெயங்கொண்டவர்கள், ஒரு வகுப்பினராக—மணவாட்டி வகுப்பினராக—மாத்திரம் கருதப்படாமல், மாறாக, ஒவ்வொருவரும் கர்த்தரிடம் தனிப்பட்ட தயவு பெற்றிருப்பர். இதைக் குறித்து அந்த நபரும், இராஜாவும் தவிர, வேறு ஒருவருக்கும் தெரிவதில்லை. கர்த்தருக்கும், தனிப்பட்ட அடையாளக்குறியை—நிஜமான வெள்ளைக்கல்—பெற்றுக்கொள்வர் என்று சொல்லப்படுகிற ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கும் இடையே ஒரு தனிப்பட்ட நெருக்கமான உறவு—**இப்பொழுது,** இந்த ஜீவியத்தில் உள்ளது. இந்த அடையாளமானது, ஜெயங்கொள்கிறவர்கள் என்று கர்த்தர் அடையாளம் காண்பதற்குத் தருகிற பரிசுத்த ஆவியின் முத்திரையிடுதலாகும். . . . பரிசுத்த ஆவியின் முழுமையான முத்திரையிடுதல் உயிர்த்தெழுதலின்போது அளிக்கப்படும். . . . அப்போது என்றென்றைக்கும் நாம் கர்த்தரால் அறியப்படுகிறதும், நாம் அவரை அறிந்துகொள்ளுகிறதுமான நாமத்தைக் குறித்த முழுமையான அறிவைப் பெற்றிருப்போம்." R. 5113, c.1, p.4; c.2, p.2.

---

**"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்" வெளி. 3:5.**

"வேதம் இரண்டு ஜீவ புஸ்தகங்களைக் குறிப்பிடுகின்றது - ஒன்று தற்காலத்திற்குரியதும், மற்றொன்று ஆயிர வருட அரசாட்சிக்குத் தொடர்புடையதுமாகும். . . . இப்போதைய காலக்கட்டத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள விசேஷமான ஜீவ புஸ்தகத்தில் தான், சுவிசேஷ யுகத்தில் **ஜெயங்கொள்ளுகிறவர்களின்** சகல நாமங்களும்

எழுதப்படுகின்றது. . . . இந்தப் பெயர் எழுதும் விஷயம் இந்த யுகம் முழுவதும் தொடர்ந்து போய் கொண்டிருக்கின்றது. இதில் பெயர் எழுதப்பட்டவர்கள் தேவனுடைய குடும்பத்தின் அங்கங்களாக மாத்திரம் இராமல், மணவாட்டியின் அங்கங்களாகவும் இருப்பதை இது குறிக்கின்றது. இந்த ஸ்தானத்தை தற்காத்துக் கொள்வதற்கும், அவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும். . . . இந்த வசனத்தில் திரள்கூட்டத்தினரும் உட்படுகின்றனரா, இல்லையா என்பது பற்றி நமக்கு உறுதியில்லை. ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும் போது இவர்கள் இருப்பது போன்றும், வேறொரு கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அவர்கள் இல்லாதது போன்றும் தோன்றுகிறது. இதை இப்படி இப்படிதான் என்று நம்முடைய மனங்களில் பதிய வைக்காமல், கர்த்தருடைய நோக்கம் என்ன என்று காண்பதற்கும் காத்திருப்பதே நமக்கு நலமாயிருக்கும்.” R. 5377, c.1, p.8; c.2, p.2, 3.

---

**“என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்.” வெளி. 3:10.**

“‘என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனம்,’—அல்லது என் வசனம் மனதில் ஆழமாய்ப் பதியவைத்த பொறுமை. . . என்கிற இந்த வார்த்தை சந்தோஷத்துடனும், விருப்பத்துடனும், பொறுமையான விதத்திலும் தீமையைச் சகித்துத் தொடர்வதைக் குறிப்பிடுகின்றது. . . . இருதயத்திலும், குணநலன்களிலும் உள்ள இத்தகைய வளர்ச்சியானது, தீமைகளை மனநிறைவோடும், சித்தத்திற்கு எதிர்த்து போராடாமலும், தெய்வீக ஞானம் மற்றும் அன்பிற்கும் முழு இசைவோடு இருந்து, சகித்துத் தொடர்வதிலேயே வெளிப்படுகின்றது. . . .**பொறுமையாய்ச் சகித்தலுக்கு** காலம் என்ற ஒன்று இருந்தால், அது இப்பொழுதேயாகும். எப்பொழுதாவது ‘உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ள’ வேண்டுமெனில், அது இப்பொழுதுதான். யாரெல்லாம் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் ஓட்டத்தை ஓடி, இந்தப் **பொறுமையாய்ச் சகிக்கும் தன்மையைப்** பெற்றிருக்கிறார்களோ, அவர்களே, ‘இந்தத் தீங்கு நாளில் நிலைநிற்க முடியுமே’ தவிர மற்ற எவராலும் நிலைநிற்க முடியாது.” R. 2790, c.2, p.6; R. 2792, c.1, p.6; c.2, p.1.

**"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என்தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்." வெளி. 3:12.**

"தேவன் தம்முடைய ஜனங்களுக்கு—தம்முடைய சபைக்கு—மணவாட்டிக்கு, ஆட்டுக்குட்டியானவரின் மனைவிக்குப் புதிய நாமத்தை வழங்குகின்றார். நம்முடைய கர்த்தரின் நாமம் இயேசுவாக இருந்தது. பின்னர் அவர் கிறிஸ்துவும், மேசியாவும் ஆனது போன்று, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக வரும் அனைவரும் அவருடைய புதிய நாமத்தின் கீழ் வந்து, கர்த்தராலும், ஒருவருக்கொருவர் கிறிஸ்துவின் அங்கங்களாக அடையாளம் கண்டு கொள்ளப்படுவர் (வெளி. 3:12). மேலும், கர்த்தர் கிறிஸ்துவைக் குறித்துத் தீர்க்கதரிசனமாகப் பேசுகையில், 'அவருக்கு இடும் நாமம், நமது நீதியாயிருக்கிற கர்த்தர்' என்கிறார் (எரே. 23:6). மேலும், கிறிஸ்துவின் மணவாட்டியைக் குறித்து பேசுகையில், 'அவர் எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பது அவளுடைய நாமம்' என நாம் வாசிக்கின்றோம் (எரே. 33:16). மணவாளனுடைய நாமம் அவருடைய மணவாட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது—'என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகின்றார்.' மேலும், இந்தப் புதிய நாமம் பெறும் அனைவரும், அவர்கள் ஜெயங்கொள்ளுகிறவர்கள் என்று நிரூபித்துக்காட்ட அழைக்கப்படுவார்கள்" என்பதில் நாம் உறுதியடையலாம்."
R. 3970, c.2, p.3.

---

**"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்." வெளி. 3:20.**

"இது தற்காலத்தில், அதாவது, லவோதிக்கேயா காலக்கட்டத்தில் **பொறுமையோடு சகித்துத்** தொடர்ந்து ஓட்டம் ஓடுகிறவர்களுக்குரிய விசேஷமான பலனாகும். நமக்கு சோதனை காலத்தினின்று தப்பித்துக்கொள்ளும் சிலாக்கியம் இல்லாவிட்டாலும், இதற்கு ஈடாக கர்த்தருடைய பிரசன்ன நாட்களில் ஜீவிப்பதினிமித்தம் விசேஷமான ஆசீர்வாதத்தை அடையும் சிலாக்கியம் நமதாகவே உள்ளது. அவருடைய

ஐக்கியத்தையும், அவருடைய போதகத்தையும், கடந்த காலங்களில் வாழ்ந்த உண்மையுள்ளவர்கள் அனுபவித்திராத அளவிலும், விதத்திலும் இப்பொழுது 'ஏற்றக்கால சத்தியமாய்' அவர் அளிக்கும் ஆவிக்குரிய உணவையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். ஆனாலும் நாம் எதிர்பார்த்தபடி, இந்த மாபெரும் கிருபைக்கு ஏற்றவாறு, முழு உலகத்தின் மீதே வரவிருக்கும் இந்தச் சோதனை காலத்தின், சோதனைகளுடைய சூட்சமம், கடுமையாகக்காணப்படும்."

R. 2792, c.1, p.6

---

**"நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்." வெளி. 3:21.**

"இந்த அறுவடையின் காலக்கட்டத்தில் நாம் அநேக கடுமையான எதிர்ப்பாகிய புயல்களைப் பெற்றிருக்கிறோம், இன்னும் அதிக கடினமான சோதனைகள் தொடரும் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், இவைகள் அனைத்தையும் ஜெயங்கொள்ளுகிறதற்கு ஏதுவான விசுவாசம் கொண்டவர்—பொறுமையாய்ச் சகித்துத் தொடர்ந்தவர்கள், கிறிஸ்துவின் ஆவியோடு, அதன் கனிகளையும், ஈவுகளையும் விருத்திச் செய்தவர்கள், களத்திலிருந்து பின்வாங்காமல் தைரியமாய் விசுவாசத்தில் நல்ல போராட்டம் போராடினவர்கள் மேற்கொண்டுவிடுவார்கள்—இவர்களே கிரீடம் சூட்டும் நாளில் வெற்றியின் புகழ்மாலை சூட்டப்படும் 'ஜெயங்கொள்ளுகிறவர்களாய்' இருப்பார்கள்." R. 1656, c.2, p.3.

---